# மீனவர் சமுதாய நாட்டுப்புறப் பாடல்கள்

ஆய்வும் பதிப்பும்

ஆ. திருநாகலிங்கம்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

# மீனவர் சமுதாய நாட்டுப்புறப் பாடல்கள்
# ஆய்வும் பதிப்பும்

ஆ. திருநாகலிங்கம்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES
இரண்டாவது முதன்மைச் சாலை, மையத் தொழில்நுட்பப்
பயிலக வளாகம், தரமணி, சென்னை - 600 113

வ.உ.சி. அறக்கட்டளைச் சொற்பொழிவு
அறக்கட்டளை நிறுவியவர்: பலர்

சொற்பொழிவு : 9

# BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| Title of the Book | : | Mīṉavar camutāya nāṭṭuppuṟap paṭalkaḷ āyvum patippum |
| Author | : | Dr. A. Thirunagalingam<br>Professor, Department of Tamil<br>Pondicherry University<br>Pondicherry - 605 014 |
| General Editor | : | Dr. T. Mahalakshmi<br>Senior Research Fellow<br>International Institute of Tamil Studies<br>Tharamani, Chennai-600 113. |
| Publisher & © | : | International Institute of Tamil Studies<br>II Main Road, C.I.T. Campus<br>Tharamani, Chennai - 600 113<br>Ph: 2254 2992 |
| Publication No. | : | 618 |
| Language | : | Tamil |
| Edition | : | First Edition |
| Year of Publication | : | 2009 |
| Paper Used | : | 18.6 Kg. TNPL Maplitho |
| Size of the Book | : | 1/8 Demy |
| Printing type Used | : | 10 points |
| No. of Pages | : | x + 102 |
| No. of Copies | : | 1200 |
| Price | : | Rs. 35/- (Rupees Thirty five only) |
| Printing | : | United Bind Graphics<br>189-D, Royapettah High Road<br>Mylapore, Chennai - 600 004. |
| Subject | : | A Study of the folk songs of the Fisher Folk of Puduchery region |


அறக்கட்டளைச் சொற்பொழிவாளர் கருத்துகட்கு நிறுவனம் பொறுப்பன்று.

பேரா. முனைவர் கரு. அழ. குணசேகரன்
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை-600 113

## அணிந்துரை

உழைக்கும் மக்களின் வாய்மொழிப் பாடல்கள் யாவும் மானுடத்தைப் பேசுபவையாக விளங்குகின்றன. கி.பி. 6, 7ஆம் நூற்றாண்டுகளில் தொடங்கி, சிற்றிலக்கியக் காலங்கள் வரை பக்தி இலக்கியங்கள் ஊடாடி விளங்கின. இந்தப் பக்திப் பார்வையில் கண்ட இலக்கிய விதிகள் உழைக்கும் மக்களால் உருவாக்கப்பட்ட வாய்மொழி இலக்கியங்களை நீண்டகாலமாகத் தீண்டத் தகாதவையாகவே கண்டுவந்தன. இருபதாம் நூற்றாண்டின் இறுதியில் திரு. நா. வானமாமலை போன்றோரால் வாய்மொழி இலக்கியங்கள் முன்னெடுக்கப்பட்டன. பல்கலைக் கழகங்களில் பயில்வதற்கான பாடங்களாக அங்கீகாரம் பெற்றன.

மேலை நாடுகளில் நாட்டுப்புறவியல் துறை குறித்த சிந்தனை தொடங்கிப் பல நிலைகளில் வளர்ச்சி பெற்றது. இந்தியாவில் எட்கர் தர்ஸ்டன் போன்றோர் ஆய்வுகளைத் தொடங்கியதன் விளைவு இன்று நா. வானமாமலை, தமிழண்ணல், அகத்தியலிங்கம், இராமநாதன், கே.ஏ. குணசேகரன், ஏ.என். பெருமாள், சக்திவேல், சண்முக சுந்தரம், ஐ. முத்தையா, ஆ. திருநாகலிங்கம் எனப் பட்டியல் நீள்கிறது. தமிழக அனைத்துப் பல்கலைக் கழகங்களிலும் இன்று கதை, கதைப்பாடல், சடங்கு, நம்பிக்கை, விடுகதை, பழமொழி, வழக்குமொழி, கூத்து, இசை, பாடல் எனப் பல நிலைகளில் ஆய்வுகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

தமிழகத்தில் உள்ள பல்வேறு மாவட்டங்கள் பல்வேறு வட்டாரத் தன்மைகள் கொண்டு விளங்குகின்றன. எனவே தமிழக நாட்டுப்புறப் பாடல்கள் பல்வேறு தனித்துவங்கள் கொண்டு விளங்குகின்றன. வட்டாரத் தன்மை கொண்டு விளங்குவதே நாட்டுப்புறவியலின் தனித்துவம் ஆகும் என்பது நாம் அறிந்தது. இந்தியா இன்று உலகமயமாதல் வயப்பட்டு நவீனமயமாதல் தாக்கங்களினால் பல்வேறு துறைகளிலும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளமையை நாம் இன்று கவனித்து வருகிறோம்.

ஏற்றப்பாடல்கள், உழவுப் பாடல்கள், தாலாட்டுப் பாடல்கள் போன்ற பல பாடல்கள் இன்று நாட்டுப்புறங்களில் கேட்பது அரிதாக உள்ளது. இன்று இயந்திரங்களின் வருகையால் வயல்

சார்ந்த உடல் உழைப்பும் குறைந்து, உற்பத்தியாக்கமும் குறைந்து பாடவரும் குரல்களுக்குச் சொந்தக்காரர்களும் இல்லை என்ற நிலை தோன்றியுள்ளது. ஊடகங்களின் வளர்ச்சியினால் குழந்தைகளுக்கான கார்ட்டூன் படங்கள், பதிவு செய்யப்பட்ட இசை வடிவங்கள் மற்றும் பாடல்கள் தாலாட்டுப் பாடல்களைப் பாடும் தாய்மார்களை உருவாக்க வாய்ப்பளிக்கவில்லை.

மீனவர்களின் பாடல்களும் இன்று பெரிதும் கேட்க முடிவதில்லை. படகுகளில் துடுப்பைக் கொண்டு வலித்துப் பாடும் மீனவர் பாடல்கள் இன்று இல்லை. விசைப் படகுகள் மீனவர் பாடல்களைப் பாட வாய்ப்பளிக்காமல் தடுத்துவிட்டன. இவ்வாறாக, இன்றைய சூழலில் அங்கொன்றும் இங்கொன்றுமாகக் கிடைக்கும் வயது முதிர்ந்தோரின் குரல்களில் வெளிப்படும் பாடல்களைப் பாடச்செய்து பதிவு செய்வதென்பது எளிதான செயல் அல்ல. தலைமுறை இடைவெளிகள்; மரபுவழித் தொழில்களுக்கு வாரிசுகள் முன்வராது வேறு தொழில்களுக்குப் பயணப்பட்டமை; ஊடகங்கள் வளர்த்து வந்துள்ள சூழலில் இரசித்திடுக! படைப்புச் செய்யும் சிந்தனையை விட்டொழித்திடுக! எனக் கூவிக் கொண்டிருக்கும் வானொலிப் பாடல்கள், தொலைக் காட்சி நிகழ்ச்சிகள் மறைமுகமாகப் பாடும் குரல்வளைகளை நெரித்து வைத்துள்ளன. இவை போன்ற பின்புலங்களால் பாட முன் வருவோர் குறைவு. இளந்தலைமுறையினரில் பாடல் இரசனை முறை வேறுபட்டு இயங்குகிறது. பாடவல்ல முதியோர் இளைஞர்கள் முன்னிலையில் பாட முன் வருவதும் குறைவு. இத்தகைய சூழலில் வாய்மொழிப் பாடல்களைச் சேகரிப்பது என்பது அவ்வளவு எளிதான காரியம் அல்ல.

பேரா. ஆ. திருநாகலிங்கம் அவர்கள் எனக்கு நண்பர். அவர் தொடர்ந்து இத்துறையில் செயற்பட்டு வருபவர். இவரது முயற்சி கடினமானது. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் சங்க இலக்கியம் தொடங்கி, பல தரப்பட்ட நூல்களைப் பதிப்புச் செய்துவருகின்றது. அவ்வரிசையில் உழைக்கும் மக்களின் பாடல்கள் தொகுக்கப்பெற்று ஆய்வுக்குட்படுத்திப் பொழிவு செய்துள்ள பேரா. ஆ. திருநாகலிங்கத்தின் இந்த உரையை நூலாக்கம் செய்து தமிழ் உலகம் அறிய வெளியிடுவதில் நிறுவனம் மிகுந்த பெருமை கொள்கிறது.

மீனவர் பாடல்களைப் பதிவு செய்வதில் ஏற்படும் இன்னல்களையும் தகவலாளிகள் பற்றிய விவரங்களையும் களப்பணி அனுபவங்களையும் இந்நூலில் இவர் பதிவு செய்துள்ளார். மீனவச் சமூகப் பண்பாடுகளையும் பாடல்களிலிருந்து ஆய்வு செய்துள்ளார்.

இவ்வறக்கட்டளைச் சொற்பொழிவினைச் சிறந்த முறையில் நல்கிய எனது நண்பர் முனைவர் ஆ. திருநாகலிங்கம் அவர்களுக்கு எமது நிறைவான நன்றியும் பாராட்டுக்களும் உரித்தாகும்.

இந்நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருவதோடு தம் தனிப்பட்ட அக்கறையையும் காட்டிவரும் **நிறுவனத் தலைவரும் தமிழக அரசின் முதல்வருமான மாண்புமிகு டாக்டர் கலைஞர்** அவர்களுக்குத் தமிழுலகம் என்றும் நன்றிக்கடன்பட்டுள்ளது.

தமிழ்ப்பணிகளுக்கு ஆற்றுப்படுத்தி வரும் **மாண்புமிகு தமிழக நிதியமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன்** அவர்களுக்கு எம் நன்றி என்றும் உரியது.

நிறுவனச் செயல்பாட்டுக்கு உறுதுணையாக இருந்துவரும் **தமிழ் வளர்ச்சி, அறநிலையம் மற்றும் செய்தித் துறை அரசுச் செயலாளர் திரு க. முத்துசாமி இ.ஆ.ப.** அவர்களுக்கும் நன்றி.

இந்நிறுவன முன்னாள் இயக்குநரும், தமிழ்ப் பல்கலைக் கழகத் துணைவேந்தருமான முனைவர் ம. இராசேந்திரன் அவர்களுக்கும் என் நன்றி.

வஉசி. அறக்கட்டளைப் பொறுப்பாளர் முனைவர் தி. மகாலட்சுமி அவர்களுக்கும், இச்சொற்பொழிவின் எழுத்துருவைப் பதிப்பித்துச் செம்மைசெய்து மெய்ப்பும் திருத்தி, இந்நூல் சிறக்கச் சிறப்பான ஆலோசனைகளையும் நல்கிய இந்நிறுவனப் பதிப்பு மேற்பார்வை யாளர் முனைவர் ஆ. தசரதன் அவர்களுக்கும், இச்சொற்பொழிவு மற்றும் நூல் வெளியீடு தொடர்பான அனைத்து ஏற்பாடுகளையும் செய்த நிறுவனப் பணியாளர்கள், கணிப்பொறியாளர் திருமதி எ.ம. லட்சுமி ஆகியோருக்கும் இந்நூலை அழகுற அச்சிட்டுத் தந்த யுனைடெட் பைண்ட் கிராபிக்ஸ் அச்சகத்தாருக்கும் பாராட்டுகள்.

**இயக்குநர்**

## ஆசிரியரைப் பற்றி.....



இராமநாதபுரம் மாவட்டம் புலிக்குளம் என்ற ஒரு குக்கிராமத்தில் பிறந்த ஆ. திருநாகலிங்கம் திருவையாறு அரசர் கல்லூரியில் இரண்டாண்டு காலம் (1985-87) பணியாற்றிவிட்டு, தொடர்ந்து கடந்த 22 ஆண்டுகளாகப் புதுவைப் பல்கலைக் கழகத்தில் பணியாற்றி வருகின்றார்.

இவர் நாட்டுப்புறவியல் சார்ந்த தலைப்புகளிலேயே இளம்முனைவர், முனைவர் பட்ட ஆய்வுகளைச் செய்துள்ளார். இளம்முனைவர் பட்டப்படிப்பில் மதுரை காமராசர் பல்கலைக் கழக அளவில் முதலிடம் பெற்றமைக்காக மு. வரதராசனார் பெயரில் அமைந்த தங்கப் பதக்கத்தைப் பெற்றவர் (1983).

முனைவர் பட்ட ஆய்வில் புதுச்சேரி மாநிலத்திலுள்ள நாட்டுப்புறக் கதைகளைச் சமூகவியல் நோக்கில் ஆராய்ச்சி செய்துள்ளார். இவரின் மேற்பார்வையில் நாட்டுப்புறவியல் சார்ந்த தலைப்புக்களில் எட்டுப்பேர் முனைவர் பட்டமும் 50 பேர் இளமுனைவர் பட்டமும் பெற்றுள்ளனர். இவர் நாட்டுப்புறவியலில் இதுவரை ஏழு நூல்களையும் 45 கட்டுரைகளையும் வெளியிட்டுள்ளார்.

தேசிய அளவிலான நாட்டுப்புறவியல் கருத்தரங்குகளையும், பயிலரங்குகளையும் நடத்தியுள்ளார். சமீபத்தில் புதுவைப் பல்கலைக்கழகத்தில் நாட்டுப்புறவியல் என்ற தலைப்பில் நடைபெற்ற புத்தொளிப் பயிற்சியின் ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டுள்ளார்.

பல்கலைக் கழக நிதி நல்கைக்குழுவின் உதவியுடன் நாட்டுப்புறவியல் கோட்பாடுகள் ஓர் அறிமுகம் என்ற குறுகிய காலத் திட்டத்தை முடித்துள்ள (2000) இவர், தற்போது தமிழ் நாட்டுப்புறவியல் அகராதி என்ற தலைப்பில் நீண்டகால ஆய்வுத்திட்டம் ஒன்றையும் செய்துவருகின்றார்.

## நன்றியுரை

- அமெரிக்காவிலுள்ள கார்வார்டு பல்கலைக்கழகத்தைச் (Harward University) சேர்ந்த மில்மன் பாரி என்ற செவ்வியல்வாதி கோமரின் (Homar) இலியட் ஒடிசி ஆகிய வீர காவியங்களை வாசிப்பிற்குட்படுத்தினார். அவற்றை வாசித்த பாரிக்கு அவற்றில் உள்ள பாடல் அமைப்புகள் பாட்டுக்கட்டும் வாய்மொழி மரபுடன் ஒத்திருப்பதை அறிந்து ஏட்டிலக்கியத்திற்கு அடிப்படை வாய்மொழி இலக்கியங்கள் என்ற கருதுகோளினை முன்மொழிந்தார். கருதுகோளை நிறுவ யூகோஸ்லோவியா நாட்டில் வழங்கும் அமெரிக்கர்களின் வாய்மொழிக் காப்பியங்களைச் சேகரித்து ஆய்வு செய்தார்.

  இவர் இறந்தும் அவருடைய மாணாக்கர் லார்டு தொடர்ந்து களப்பணி மேற்கொண்டு ஏட்டிலக்கியங்கள் வாய்மொழி இலக்கியங்களின் வழிவந்தவை என்ற கருத்தினை உறுதிப்படுத்தினார். இந்தக் கோட்பாட்டில் பாரி லார்டு இருவரும் வைக்கும் மிக இன்றியமையாத கருத்து 40,000 வரிகள் கொண்ட ஒரு கதைப்பாடலை எழுதப் படிக்கத் தெரியாத ஒரு பாமரப் பாடகன் எந்த ஓர் எழுத்து மரபின் துணையின்றி மக்கள்முன் எடுத்துரைக்கின்றான். அதனால் பாமரப் பாடகனை எழுதப்படிக்கத் தெரியாதவன் என்று கூறலாமே தவிர அறிவற்றவன் என்று கூறமுடியாது என்பதாகும்.

  இந்தக் கோட்பாட்டின் வருகைக்குப்பின் கிரேக்க இலக்கியங்களை ஆராய்ந்த சி.எம். பௌரா, பழந்தமிழ் இலக்கியங்களை ஆராய்ந்த க. கைலாசபதி போன்றோர் செவ்வியல் இலக்கியங்கள் வாய்மொழி மரபின் வழிவந்தவை என்பதைத் தகுந்த ஆதாரங்களுடன் வெளியிட்டனர். இதன்பின் மக்களின் மரபிலிருந்து அல்லது பாரம்பரியங்களில் இருந்தே அனைத்து வகையான அறிவுப் புலங்களும் தோன்றியுள்ளன என்ற கருத்து ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. அந்த அடிப்படையில் தோன்றிய அறிவுசார் புலமே நாட்டுப்புறவியல் என்பதாகும். இன்று உலக இணையத் தளத்தில் நாட்டுப்புறவியல் என்பதற்கு 30 கோடிப் பதிவுகள் காணப்படுகின்றன. 3.5 கோடி மின்னணு இதழ்கள் இடம்பெற்றுள்ளன.

* உலக அளவில் பல நூற்றாண்டுக் கால வளர்ச்சியினைப் பெற்றுவரும் நாட்டுப்புறவியல் இந்தியச் சூழலில் ஒரு நூற்றாண்டுக் கால வளர்ச்சியினையும் பெற்று வருகின்றது. தமிழில் நா. வானமாமலை, தே. லூர்து, சு. சண்முகசுந்தரம், சு. சக்திவேல், ஆறு. இராமநாதன், கரு.அழ. குணசேகரன் முதலானோர் இத்துறை வளர்ச்சியில் மிகுந்த பங்காற்றி உள்ளனர்.

* இன்னமும் புதுவை, தமிழகப் பகுதிகளில் நாட்டுப்புறவியல் தரவுகளைச் சேகரிக்கும் பணிகள்கூடத் தொடக்க நிலையிலேயே உள்ளன. இந்தக் குறையை ஏதேனும் ஒரு வகையில் நிறைவேற்றுவதாக இந்தச் சிறிய நூல் அமைகின்றது.

* வ.உ.சி. அறக்கட்டளைச் சொற்பொழிவை இந்நிறுவனத்தில் நிகழ்த்த எனது பெயரைப் பரிந்துரை செய்த உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் மேனாள் இயக்குநரும், தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தருமான மாண்பமை ம. இராசேந்திரன் அவர்களுக்கும், இச்சொற்பொழிவை நிகழ்த்தவும் நூலாக வெளியிடவும் அனுமதியளித்த இயக்குநர் பேராசிரியர் கரு.அழ. குணசேகரன் அவர்களுக்கும், அறக்கட்டளைப் பொறுப்பாளர் முனைவர் தி. மகாலட்சுமி அவர்களுக்கும் இந்நேரத்தில் எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

# பொருளடக்கம்


1. ஆய்வு முகப்புரை 1

2. பாடல்களும் மீனவர் பாடல்களும் 6

3. சமுதாயமும் மக்களும் 19

4. பண்பாடும் மக்களும் 32

5. ஆய்வு முடிவுரை 44

பின்னிணைப்பு - 1 46

பின்னிணைப்பு - 2 47

பின்னிணைப்பு - 3 48

துணை நூற்பட்டியல் 101

# 1. ஆய்வு முகப்புரை

## 1.1. முகப்புரை

1980களில் மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் முதுகலைத் தமிழ் பயின்றுகொண்டிருக்கும்போது, அங்குள்ள ஆராய்ச்சியாளர்களில் பெரும்பகுதியினர் நாட்டுப்புறவியல் தொடர்பான தலைப்புகளை எடுத்து ஆராய்ச்சி செய்துகொண்டிருந்தனர். அவர்களிடம் உரையாடும் போது படித்தவர்களால் உருவாக்கப்படும் இலக்கியங்களைவிடக் கூடுதலாகப் பல அரிய செய்திகள் நாட்டுப்புற இலக்கியங்களில் உள்ளன என்ற உண்மையைத் தெரிந்துகொள்ள முடிந்தது. அதன் விளைவாக நாட்டுப்புறவியல் துறையில் ஈடுபாடு ஏற்பட்டது. முதுகலை படித்து முடித்து எம்.பில். படிப்பிற்காக நாகர்கோவில் தெ.தி. இந்துக் கல்லூரியில் சேர்ந்தபோது 'இந்து பள்ளர் திருமணச் சடங்குகள்' என்ற தலைப்பில் ஆராய வாய்ப்புக் கிடைத்தது. தொடர்ந்து புதுவைப் பல்கலைக்கழகத்தில் பணி கிடைத்தபோது பிஎச்.டி. ஆய்வில் புதுவை நாட்டுப்புறக் கதைகளைச் சேகரித்து ஆராய முடிந்தது. இப்படி எல்லாக் காலங்களிலும் நாட்டுப்புறவியலுடன் கல்வி வாழ்க்கை இணைக்கப்பட்டது. இந்த இணைப்பைத் தொடர்வது என்ற முறையில் இந்த ஆய்வும் அமைகின்றது.

## 1.2. ஆய்வுத் தலைப்புப்பொருள்

நாட்டுப்புறவியல் ஆய்வுப் பரப்பு மிக விரிவான தளத்தினைக் கொண்டதாகும். அதில் பல தலைப்புகளில் ஆராய வகையுள்ளது. நாட்டுப்புற இலக்கியங்கள் என்பதில் கதைகள், கதைப்பாடல்கள், விடுகதைகள், பழமொழிகள், பாடல்கள் ஆகியவை வருகின்றன. இவற்றைச் சேகரிக்கும் பணிகூடப் புதுவை உள்ளிட்ட இந்தியாவில் தொடக்க நிலையிலேயே இருப்பதால், இங்கு நாட்டுப்புறப் பாடல்களைச் சேகரித்து ஆய்வு செய்வதென்று முடிவு செய்யப்பட்டது. புதுச்சேரியைச் சுற்றியுள்ள 213 கிராமங் களிலும் சேகரித்து ஆய்வு செய்யக் காலம் மற்றும் பொருளாதார நிலை சரியாக அமையாது என்பதால் ஏதேனும் ஒரு பகுதியை எடுத்து ஆய்வு செய்வதென முடிவு செய்யப்பட்டது. தேர்வு செய்யப் பெற்ற பகுதியில் எந்த வகையான பாடல்கள் சேகரிப்பது என்ற கேள்வி எழுந்தபோது, பழந்தமிழ்ச் சமுதாயங்களில் ஒன்றான மீனவர் சமுதாய மக்களிடம் வழங்கிவரும் பாடல்களைச்

சேகரிப்பதென முடிவு செய்யப்பட்டது. அதன் விளைவாக **மீனவர் சமுதாய நாட்டுப்புறப்பாடல்கள் ஆய்வும் பதிப்பும்** என்பது ஆய்வுத் தலைப்பாக அமைகின்றது.

### 1.3. ஆய்வுநோக்கம்

மீனவர்களிடம் தாலாட்டு முதல் ஒப்பாரி வரை பல வகையான பாடல்கள் வழங்கி வருகின்றன. இந்தப் பாடல்களில் மீன்பிடி தொழிலின்போது பாடப்படும் பாடல்கள் அவர்கள் வாழ்க்கையின் உயிர்நாடியான வருவாய் மீது பின்னப்பட்ட ஒன்றாக உள்ளது. அதனால் கடலில் சென்று மீனவர்கள் தொழில் செய்யும்போது பாடப்படும் பாடல்களைச் சேகரிப்பதும், அப்படிச் சேகரித்த பாடல்களில் காணப்படும் சமுதாயம், பண்பாடு தொடர்பான செய்திகளை ஆராய்வதும் இங்கு நோக்கங்களாக அமைகின்றன.

### 1.4. ஆய்வு மூலங்கள்

புதுச்சேரி கடற்கரையில் அமைந்துள்ள கிராமங்களில் மீனவர்களிடமிருந்து சேகரிக்கப்பெற்ற தொழில் பாடல்கள் இந்த ஆய்விற்கு முதன்மை மூலங்களாக அமைகின்றன. முதன்மை மூலங்களுக்குத் துணைமை மூலங்களாக நாட்டுப்புறவியல் தொடர்பாக வெளிவந்துள்ள தொகுப்பு நூல்களும் அமைகின்றன.

### 1.5. ஆய்வுக்களம்

இந்த ஆய்விற்குப் புதுச்சேரி வட்டாரம் என்பது ஆய்வுக் களமாக அமைகின்றது. ஏற்கெனவே ஆய்வாளர் புதுச்சேரி வட்டாரத்தில் கதைகள் சேகரித்து ஆய்வு செய்தவர் என்பதாலும், அம்மக்களிடம் வழங்கும் மொழியறிவு பற்றி முழுமையான படிப்பினை மிகுந்தவர் என்பதாலும் புதுச்சேரி வட்டாரம் ஆய்வுக் களமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது. மீனவத் தொழிலுடன் நேரடித் தொடர்புடைய பெரிய காலாப்பட்டு, சின்னக் காலாப்பட்டு, வீரராமபட்டினம், பூர்ணாங்குப்பம், நல்லவாடு ஆகியவை பாடல் சேகரிப்புக் களங்களாக அமைகின்றன.[1]

### 1.6. தகவலாளிகள்

களப்பகுதியில் பாடல்களைப் பாடிய தகவலாளிகள் அன்றாடம் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களாவர். இவர்களில் படிப்பறிவு குறைந்தவர்களே மிகுதியாவர். 25 வயதிலிருந்து 65 வயது வரையுள்ளவர்கள் தகவலாளர்களாக இடம் பெற்றுள்ளனர். இவர்கள் அனைவரும் பாடல்கள் பாடுவதில்

மிகுந்த அனுபவம் பெற்றவர்களாக உள்ளனர். வீரராமபட்டினத் தகவலாளிகளின் ஒருங்கிணைந்த உதவி இங்குக் குறிப்பிடத் தக்கதாகும்.

### *1.7. களப்பணி*

ஆய்வாளர் நாட்டுப்புற வழக்காறுகளைப் பற்றிய சேகரிக்கப்பில் முன்னனுபவம் உள்ளவர் என்பதால் களப்பணி அவ்வளவு கடினமாக இருக்காது எனக் களத்தில் நுழைந்தபோது சிக்கல்கள் பல எழுந்தன. மீன்பிடித் தொழில் பாடல்கள் இரண்டு அதற்கு மேற்பட்ட நபர்களால் பாடப்படுவதால் தகவலாளிகள் சேர்ந்து அமைவது கடினமாக இருந்தது. பெரிய காலாப்பட்டில் இரண்டாவது நபரைச் சேர்ப்பது மிகக் கடினமாக அமைந்து விட்டது. இதற்காக ஆய்வாளர் இரண்டு மணி நேரத்திற்கு மேலாக அலைய வேண்டியதாயிற்று.

ஒருவர் ஒரு பாடலின் முதன் வரியைப் பாடும்போது மற்றவர் பின்பாட்டாளராக உள்ளார். இரண்டாவது நபர் அடுத்த வரியைப் பாடும்போது முதலில் பாடியவர் பின்பாட்டாளராக உள்ளார். இது இருவர் துடுப்புப்போடும்போது பாடும் பாடல்களின் முறைகளாகும். இரண்டிற்கும் மேற்பட்ட நபர்கள் துடுப்புப் போடும்போது ஒருவர் முதலில் பாடும்போது மற்றவர்கள் அனைவரும் பின்பாட்டாளர்களாக உள்ளனர். இரண்டாமவர் பாடும்போது முதலில் பாடியவரும் மற்றவர்களுடன் சேர்ந்து பின்பாட்டாளராக உள்ளனர். மீனவர்கள் இரவில் தொழிலுக்குச் சென்று விடுவதால் பெரும்பாலும் பாடல்கள் காலை 9 மணி முதல் மாலை 2 மணிவரை ஆய்வாளரால் சேகரிக்கப்பட்டன.[2] அனைவருமே கடலுக்குள் தொழிலில் ஈடுபடும்போது பாடும் மனோபாவத்துடனேயே பாடியது இங்கு மனங்கொள்ளத்தக்கதாகும்.

களப்பணி ஊர்களில் ஏற்கெனவே வெளிநாட்டினர் பாடல் சேகரிக்க வரும்போது பணம் கொடுத்துப் பழக்கப்பட்டிருந்ததால் ஆய்வாளரிடம் ஒரு பாடலுக்கு ரூபாய் 500 வரை பணம் கேட்டனர். ஆய்வாளர் தனது இளமைக்கால வாழ்வின் கஷ்ட நஷ்டங்களை விளக்கிக் கூறியபின் பாடல்கள் பாட முன்வந்தனர். பாடி முடிக்கப்பட்டதும் சில இடங்களில் இயன்றளவு பணம் கொடுக்கப்பட்டது. வீரராமபட்டினத்தில் நிலவரத்தை ஆய்வாளர் விளக்கிக் கூறியதும் தாமாகவே பாடத் தகவலாளிகள் முன்வந்தனர். பாடல்கள் மிகுதியாகச் சேகரிக்க முடியாமல் போனதற்குப் பணப்பிரச்சினை மிக முக்கியக் காரணமாக அமைந்தது இங்குக் குறிப்பிடப்பட வேண்டிய செய்தியாகும்.

## 1.8. ஆய்வமைப்பு

இந்த ஆய்வு "முகப்புரை", "முடிபுரை", நீங்கலாகப் பாடல்களும் மீனவர் பாடல்களும், சமுதாயமும் மக்களும், பண்பாடும் மக்களும் ஆகிய மூன்று இயல்களாகப் பிரிக்கப் பட்டுள்ளது. அவற்றின் விளக்கங்களைக் கீழே காணலாம்.

### 1.8.1. பாடல்களும் மீனவர் பாடல்களும்

'**பாடல்களும் மீனவர் பாடல்களும்**' என்ற இரண்டாவது இயலில் பொதுவாக நாட்டுப்புறப் பாடல்களின் வகைகள் விளக்கப்பட்டு, இவற்றில் தொழில் பாடல்களின் இன்றியமை யாமைகளும், களப்பகுதி மீனவர்களின் பாடல்களின் பொது அமைப்பு முறைகளும் விளக்கம் பெறுகின்றன. இங்கு மீனவர் பாடல்களில் இசைக் குறிப்புச் சொற்கள் மேலோங்கி உள்ளடக்கச் செய்திகள் குறைந்துள்ளன என்ற கருத்து நிறுவப்பட்டுள்ளது.

### 1.8.2. சமுதாயமும் மக்களும்

'**சமுதாயமும் மக்களும்**' என்ற மூன்றாவது இயலில் களப் பகுதி மீனவர் பாடல்களில் காணப்படும் சமுதாயம் தொடர்பான செய்திகள் ஆராயப்பெறுகின்றன. இங்குக் காதல், மணம், சாதி, நிர்வாகம் போன்றவை விரிவாக ஆராயப்பட்டுள்ளன. இந்தப் பகுதியில் சமுதாயம் பல முரண்பாடுகளுடன் இயங்கும் நிலைகள் தெளிவுபடுத்தப்படுகின்றன.

### 1.8.3. பண்பாடும் மக்களும்

'பண்பாடும் மக்களும்' என்ற நான்காவது இயலில் பாடல்களில் காணப்படும் பண்பாடு தொடர்பான செய்திகள் பொருள்சார் பண்பாடு, பொருள்சாராப் பண்பாடு எனப் பிரித்து ஆராயப் பெறுகின்றன. இங்குப் பண்பாட்டின் வளர்ச்சி என்பது மனிதனின் அறிவு, பொருளாதாரம் ஆகியனவற்றைப் பொறுத்து அமையும் என்ற நிலை எடுத்துக்காட்டப்படுகின்றது.

இறுதி இயலான 'ஆய்வு முடிப்புரை' என்ற இயலில் ஆய்வு முடிவுரைகள் தொகுக்கப்பெற்றன்ளன. இங்குத் தொடர்ந்து இனிச் செய்ய வேண்டிய ஆய்வுகள் குறித்தும் சுட்டப்பட்டுள்ளது.

## 1.9. ஆய்வு அணுகுமுறை

பாடல் செய்திகள் முறையான நிலையில் இந்த ஆய்வில் விளக்கப்படுவதால் இது ஒரு விளக்கமுறை ஆய்வாக அமைகின்றது. சமுதாயச் செய்திகள் விவாதிக்கப்படுவதால் இது ஒரு சமூகவியல் அணுகுமுறை சார்ந்த ஆய்வாகவும் அமைகின்றது.

### 1.10. பிற செய்திகள்

ஒவ்வொரு இயலின் இறுதியிலும் இயலில் ஆராயப்பட்ட சிறப்பான செய்திகள் 'திரண்ட கருத்துக்கள்' என்ற தலைப்பில் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. இதனை அடுத்து, இயல்களில் இடம் பெற்றுள்ள மேற்கோள் செய்திகளுக்கு அடிக்குறிப்புகள் இடம் பெற்றுள்ளன. பாடல்களையும் பாடல் செய்திகளையும் மேற்கோள் காட்டும்போது முதலில் பாடல் எண்ணும் பிறகு வரி எண்களும் தரப்பட்டுள்ளன (சான்று: 1: 10-15). 'பின்னிணைப்புகள்' என்ற பகுதியில் களப்பகுதி ஊர்களின் வரைபடம், சேகரிக்கப்பெற்ற பாடல்கள், கலைச்சொல் அகரநிரல் ஆகியவை இடம்பெற்று, துணைநூற்பட்டியலுடன் ஆய்வேடு நிறைவுபெறுகின்றது. அவசியத்தின் காரணமாக வடமொழிச் சொற்கள் இடம்பெறுவது தவிர்க்க முடியாததாகிறது.

#### குறிப்புகள்

1. களப்பகுதி வரைபடம் பி.எ.1.
2. பத்துப்பாடல்களில் 1299 வரிகள் பின்னிணைப்பில் இடம்பெற்றுள்ளன. எல்லாப் பாடல்களுமே, ஒலிப்பதிவு நாடாவில் பதிவு செய்யப்பட்டுப் பிறகு எடுத்து எழுதப்பட்டன.

# 2. பாடல்களும் மீனவர் பாடல்களும்

## *2.1. முகப்புரை*

நாட்டுப்புறவியல் என்பது மரபுகள், வழக்கங்கள், நம்பிக்கைகள், சடங்குகள், நாட்டுப்புற இலக்கியங்கள் ஆகியவை நாட்டுப்புற மக்களிடம் மட்டுமின்றி நகர்ப்புற மக்களிடமும் எப்படி உள்ளன என்பதைப் பற்றி ஆராய்வதை நோக்கமாகக் கொண்டதாகும்.[1] நாகரிக சமுதாயம், நாகரிகமற்ற சமுதாயம், படித்த சமுதாயம், படிக்காத சமுதாயம் என்ற எந்தவிதமான வேறுபாடின்றி அனைத்துத் தரப்பு மக்களின் வாழ்வியல் வழக்காறுகளை நாட்டுப்புறவியல் உள்ளடக்கியதாகும். அதைப் பழக்கவழக்கங்கள், கலைகள், தொழில்நுட்பம், மருத்துவம், இலக்கியம் ஆகிய ஐந்து பிரிவுகளாகப் பிரிக்கலாம். இலக்கியமென்பது பாடல்கள், கதைகள், பழமொழிகள் போன்ற பகுப்பைக் கொண்டவையாகும். இவ் வியலில் முக்கியத்துவம் கருதிப் பாடல்களின் வகைகள் அவற்றில் தொழில்பாடல்கள் பெறும் இடமும், தொழில் பாடல்களில் களப்பகுதி மீனவர் பாடல்கள் பெற்றுள்ள சிறப்புகளும் ஆராயப் பெறுகின்றன.

## *2.2. பாடல்கள்*

நாட்டுப்புறப் பாடல்கள் எளியவை; பகட்டில்லாதவை; பொய்க்கலப்பில்லாதவை; பரிசுத்தமானவை; நேரானவை; உள்ளத்தை ஈர்க்கும் இனிமையும் இசைப் பொலிவும் நிறைந்தவை; செழுமையின் மனோபாவமும் கற்பிக்கப்படாத கட்டுப்பாடற்ற கற்பனையும் கொண்டவையாகும்.[2] இப்பாடல்களைக் கதைப் பாடல்கள், தனிப்பாடல்கள் என இருபிரிவாகப் பிரிக்கலாம். ஒரு நீண்ட கதை பாடலாகப் பாடப்படும்போது அது கதைப்பாடலாக அமைகின்றது. இவை பெரும்பாலும் தனி நபர் வரலாறுகளை மையமாக வைத்துப் பாடப்படுபவையாகும். தனிப்பாடல் என்பது அன்றாடம் மக்கள் தம் வாழ்க்கையில் சந்தித்த நிகழ்வுகளை மையமாக வைத்துப் பாடப்படுவதாகும். இதில் பெரும்பகுதி மக்களின் வாழ்க்கைச் செய்திகள் உதிரிகளாக இடம்பெறுகின்றன. இவற்றின் வகைகள் குறித்துத் தொடர்ந்து காணலாம்.

### *2.2.1. வகைகள்*

நாட்டுப்புறப் பாடல்களை வகைப்படுத்துவதில் அறிஞர்களிடையே கருத்து வேறுபாடுகள் காணப்படுகின்றன. சி.எம். பௌரா (Bowra) நாட்டுப்புறப் பாடல்களை இயற்கைப்

பாடல்கள் (Nature), காதல் பாடல்கள் (Love), மணவாழ்வு (Marriage), தாலாட்டு (lullaby), தொழில்பாடல் (work), விழாப் பாடல் (Festival) ஆகிய ஆறு வகைகளாகவும்,[3] மரியா லீச் (Maria Leach), உணர்ச்சிப் பாடல்கள் (Emotional), வாழ்வியல் பாடல்கள் (Crucial Movement of Life), குழந்தைப் பாடல்கள் (Child), சமயப் பாடல்கள் (Religious) என்று ஐந்து வகையாகவும் பிரிக்கின்றனர். மரியாலீச் தான் பிரித்துள்ள வாழ்வின் முக்கிய நிகழ்வின் பாடல்கள் என்பதில் கிளைப்பிரிவுகளாக பிறப்பு (Birth), மணம் (Marriage), இறப்பு (Death), பிரிவு (Parting), தாயக நாட்டம் (Nostalgia), போர்ப் பாடல் (war) ஆகியவற்றையும் குறிப்பிடுகின்றார்.[4]

தமிழக நாட்டுப்புறப் பாடல்களை வகைப்படுத்தும் மு. அருணாசலம், தாலாட்டுப் பாட்டு, விடுகதைப்பாட்டு, நடவுப் பாட்டு, ஒப்பாரிப்பாட்டு, ஏற்றப்பாட்டு, வள்ளைப்பாட்டு, கண்ணன் பாட்டு, பரிகாசப்பாட்டு, கும்மிப்பாட்டு, ஏசல்பாட்டு, வேல்பாட்டு, இசைப்பாட்டு என வகைப்படுத்துவர்.[5] கி.வா. ஜெகந்நாதன் தெம்மாங்கு, தங்கரத்தினமே, ராசாத்தி, ஆண், பெண் தர்க்கம், கள்ளன்பாட்டு, தொழிலாளர் பாட்டு, குடும்பம், தாலாட்டு, சிறுவர் உலகம், புலம்பல், கும்மி, தெய்வம், பல கதம்பம் ஆகிய பதிமூன்று பிரிவுகளாகப் பிரிக்கின்றார்.[6] செ. அன்னகாமு கடவுள் துதி, மழை, நாட்டுச்சிறப்பு, பிறப்பு வளர்ப்பு, குழந்தைகளின் விளையாட்டு, திருமணம், தொழில், நவீனம், களியாட்டத்தில் கதைப்பாடல், வாழ்க்கையில் சோதனைகள், வேதாந்தப்பாடல்கள், ஆதிவாசிப் பாடல்கள், மங்கலம் ஆகிய பதினான்கு பிரிவுகளில் பாடல்களைப் பிரிக்கின்றார்.[7] தமிழக நாட்டுப்புறவியலின் தந்தை எனப் போற்றப்படும் நா. வானமாமலை தெய்வங்கள், மழையும் பஞ்சமும், தாலாட்டு, விளையாட்டு, காதல், திருமணம், குடும்பம், சமூகம், உறவும் தொழிலும், ஒப்பாரி ஆகிய பத்துப்பிரிவுகளாகப் பகுத்துக் கூறுகின்றார்.[8]

நாட்டுப்புறவியல் பல்கலைக்கழகக் கல்வியாக ஒப்புதல் பெற்றவுடன் பலரும் நாட்டுப்புறப் பாடல்களைச் சேகரித்து வகைப் படுத்தும் முயற்சியில் ஈடுபட்டனர். அவர்களில் ஆறு. அழகப்பன் நாட்டுப்புறப் பாடல்களைக் குழந்தைப் பாடல்கள், பக்திப் பாடல்கள், தொழில் பாடல்கள், கொண்டாட்டப் பாடல்கள், உணர்ச்சிப் பாடல்கள், ஒப்பாரிப் பாடல்கள், பன்மலர்ப் பாடல்கள் என வகைப்படுத்துவர்.[9]

மா. செல்வராசன், ஆறு. அழகப்பன் பிரித்ததிலிருந்து கூடுதலாக வேடிக்கைப் பாடல்கள், காதல் பாடல்கள், விவசாயப் பாடல்கள், வேதாந்தப் பாடல்கள் ஆகியவற்றைச் சேர்த்துப் பிரித்துள்ளார்.[10] இவர் ஆறு. அழகப்பன் குறிப்பிடும் பன்மலர்ப்

பாடல்கள் என்பதைப் பல்கலைப் பாடல்கள் என்கிறார். இவர்கள் பிரித்துள்ள பக்தி, காதல், தாலாட்டு, தொழில், ஒப்பாரி ஆகியவற்றை ஏற்றுக்கொள்ளும் க. கிருட்டிணமூர்த்தி மங்கல வாழ்த்து, சமுதாயம் என்னும் பிரிவினையும் தருகின்றார்.[11]

இக்காலத்தில் நாட்டுப்புறவியல் துறை நிலைபெறுவதற்குக் காரணமாக அமையும் சு. சண்முகசுந்தரம், ஆறு. இராமநாதன், சு. சக்திவேல், ஆகியோர் பின்வருமாறு வகைப்படுத்துகின்றனர். சு. சண்முகசுந்தரம் தாலாட்டுப் பாடல்கள், குழந்தைப் பாடல்கள், தொழில் பாடல்கள், காதல் பாடல்கள், மணவாழ்த்து, பக்திப் பாடல்கள், ஒப்பாரிப் பாடல்கள், ஆட்டப் பாடல்கள், கதைப் பாடல்கள் ஆகிய பிரிவுகளாகப் பாடல்களைப் பிரிக்கின்றார்.[12] ஆறு. இராமநாதன், சு. சண்முகசுந்தரம் குறிப்பிடும் ஆட்டப் பாடல்களைக் கொண்டாட்டப் பாடல்கள் என்றும் குறிப்பிடு கின்றார். அவர் புதிதாகப் பல்பொருள் பற்றிய பாடல்கள் என்றும் பிரிவைத் தருகின்றார்.[13] மற்றவை எல்லாம் சு. சண்முகசுந்தரம் பிரித்த பிரிவுகளேயாகும். சு. சக்திவேல், ஆறு. இராமநாதன் வகைப் படுத்தும் முறைகளை ஏற்றுக்கொள்ளும் அதே வேளையில் ஒவ்வொரு வகைக்கும் பல்வேறு உட்பிரிவுகளைத் தருகின்றார்.[14] மேற்கண்ட பிரிவுகளில் காதல் பாடல்கள் பெரும்பாலும் தொழிற் பாடல்களின் ஒரு பிரிவாக அமைந்துவிடுகின்றன. குழந்தைப் பாடல்கள் தாலாட்டுப் பாடல்களின் ஒரு பகுதியாகிப் போய் விடுகின்றன. அதனால் சிறுவர் பாடல்கள் என்ற பிரிப்பு இங்கு அவசியமாகின்றது. பல்சுவைப் பாடல்கள் என்பது வகைப்படுத்த முடியாத பாடல்களின் தொகுப்பாக அமைகின்றது. மேற்கண்ட செய்திகள் அனைத்தையும் தொகுத்துப் பார்த்தால் நாட்டுப்புறத் தனிப்பாடல்களைத் தாலாட்டுப் பாடல்கள், சிறுவர் பாடல்கள், தொழில் பாடல்கள், ஆட்டப்பாடல்கள், பக்திப்பாடல்கள், ஒப்பாரிப் பாடல்கள் என்ற ஆறு பிரிவுகளாக வகைப்படுத்தலாம். மேற்கண்ட அனைத்துத் தரப்பினர் வகைப்பாடுகளிலும் தொழில் பாடல்கள் என்ற பிரிவு இடம்பெற்றுள்ளது என்பது இந்தப் பிரிப்பு நாட்டுப்புறப் பாடல்களின் பிரிப்பில் மிக இன்றியமையாதது என்பதையே வலியுறுத்துவதாக அமைகின்றது. தொடர்ந்து பாடல்களில் வகைப்பாடுகளைக் காணலாம்.

### *2.2.1.1. தாலாட்டுப் பாடல்கள்*

தாலாட்டு என்பது ராராட்டு, ஓராட்டு, ரோராட்டு, ஓலாட்டு போன்ற பெயர்களிலும் குறிப்பிடப்படுகின்றது.[15] இருவர் கொள்ளும் காதலைவிட உடன் பிறந்தார் கொள்ளும் வாஞ்சையை விட, ஏன் உலகளக்கும் அருளினைவிடப் பிள்ளைப் பாசமே

ஆழமானது; வலிமைமிக்கது; உணர்ச்சிமயமானது. இத்தகைய தாயும் சேயும் என்ற உணர்வுப் பிணைப்பிலே பிறந்த இயற்கைக் கலைதான் தாலாட்டாகும்.[16] தாலாட்டுப் பாடல்களில் பொதுவாகக் குழந்தை பற்றிய செய்திகளும் குழந்தைக்குரிய கருவி பற்றிய செய்திகளும், குழந்தையின் உறவினர் பற்றிய செய்திகளும் இடம்பெறுகின்றன. குறிப்பாகத் தாய்மாமன் பெருமைகள் மிகுதியாகப் பேசப்படுகின்றன. உதாரணமாக,

சட்டைமேல் சட்டை போட்டு
சரிகைபட்டு மேல்போட்டு
சட்டை கழட்டாமல்
சபையிலே பேசுகையில்
மேம்பட்டுப் பேசினாரு
மேலான உங்க மாமா[17]

என்ற பாடலைச் சுட்டலாம்.

### 2.2.1.2. சிறுவர் பாடல்கள்

சிறுவர்கள் சாதாரணக் காலங்களிலும் விளையாட்டின் போதும் பாடும் பாடல்களைச் சிறுவர் பாடல்கள் எனலாம். சிறுவர் பாடல்களுக்குப் பதவுரை, நயவுரை என்று சொல்லிக் கொண்டிருக்க முடியாது. பெரும்பாலான பாடல்களில் பொருளற்ற நிலைகளே காணப்படுகின்றன.[18] எல்லாச் சிறுவர் பாடல்களிலும் ஓசை நிறைவு அமைந்திருக்கும். சிறுவர் பாடல்களைப் பொதுவாக நா பயிற்சிப் பாடல்கள், எண் பயிற்சிப் பாடல்கள், அறிவு வளர்ச்சிப் பாடல்கள், நீதிப் பாடல்கள், பக்திப் பாடல்கள், விழாக்காலப் பாடல்கள், வேடிக்கைப் பாடல்கள், வினா விடைப் பாடல்கள், விளையாட்டுப் பாடல்கள் எனப் பிரிக்கும் போக்குகள் காணப்படுகின்றன.[19] வினாவிடைப் பாடல்கள் சிறுவர்களால் பெரிதும் விரும்பிப் பாடும் பாடல்களாக உள்ளன. சான்றாகச் சிறுவர்கள் பாடிக்கொள்ளும் வினாவிடைப் பாடல் ஒன்று வருமாறு:

தேன் தேன்
என்ன தேன்
கொம்புத் தேன்
என்ன கொம்பு
மான் கொம்பு[20]
. . . . . . . . . . .

### 2.2.13. ஆட்டப் பாடல்கள்

தனித்தும் குழுவாகவும் நின்று ஆடிக்கொண்டு பாடும் பாடல்களை ஆட்டப்பாடல்கள் எனலாம். பொதுவாக ஆட்டப்

பாடல்கள் குழுவினராலேயே பாடப்படுகின்றன. வழிபாட்டுக் காலங்களில் நடத்தப்படும் கும்மியாட்டம் பெண்களுக்குரிய ஒன்றாக அமைகின்றது. கோலாட்டம், ஒயிலாட்டம், ஒயில் கும்மியாட்டம், களியாட்டம் போன்றவை நடைபெறும்போது பாடல்கள் பாடப்படுகின்றன. ஒயிலாட்டம் என்பது கிராமப் புறங்களிலுள்ள மக்கள் வாத்தியார் வைத்துக் கற்றுக்கொள்ளும் ஆட்டமாக உள்ளது. ஆட்டப் பாடல்கள் பெரும்பாலும் ஆடவர் களாலேயே மிகுதியாகப் பாடப்படுகின்றன. கும்மிப்பாடல் பாடும் பெண்கள்,

**வாங்களேண்டி அம்மா வாங்களேண்டி – நல்ல**
**வண்ணக் குளத்துக்கு வாங்களேண்டி**
**தேரும் திருநாகும் பாருங்கடி – அம்மா**
**தேவரைக் கண்டு வணங்குங்கடி**[21]

என்று பாடுவதை இன்றும் கிராமப்புறங்களில் காணலாம்.

### 2.2.1.4. பக்திப்பாடல்கள்

ஆதிகால மனிதனின் இயற்கை வழிபாடே காலப்போக்கில் உருவ வழிபாடாக மாற்றம் பெற்று வளர்ந்துள்ளதெனலாம். மழை வழிபாடு இன்றும் கிராமப்புறங்களில் முக்கியத்துவம் பெற்றுள்ள மையைக் காணலாம். சிறுதெய்வ வழிபாடு கிராமப்புறங்களில் மிகுதியாகக் காணப்படுகின்றது. அம்மன் கோயில்கள் மக்களின் மிகுந்த நம்பிக்கையைப் பெற்றுள்ளன. மேல்நிலையாக்கக் கோட்பாடுகளைப் பின்பற்றி (upgradation) வழிபாடு நடத்தப்படும் பெருந்தெய்வங்கள் நகர்ப்புற மக்களிடமும் வசதி வாய்ப்புப் பெற்றவர்களிடமும் முக்கியத்துவம் பெற்றுள்ளன. இந்த வழிபாட்டின்போது பாடப்படும் பாடல்கள் பக்திப்பாடல்கள் என்ற வரையறை பெறுகின்றன. வட்டார நிலையைப் பொறுத்து அந்தந்தப் பகுதி மக்களிடம் சிறு தெய்வங்கள் பாடுபொருளாகி யுள்ளன. அம்மன் கோயில்களில் நேர்த்திக் கடன் செய்வோர்,

தோட்டம் துறந்தல்லோ – மாரிக்கு
தொண்ணூறுலட்சம் பூவெடுத்து
வாடி துறந்தல்லோ ஆயிரம் கண்ணாலுக்கு
வாடா மலரெடுத்து[22]

என்று பாடுவதைத் தமிழகத்தில் பரவலாகக் காணலாம்.

### 2.2.1.5. ஒப்பாரிப் பாடல்கள்

இறந்தவர்கள்மீது பாடப்படும் பாடல்களாக ஒப்பாரிப் பாடல்கள் உள்ளன. ஒப்பாரியைப் பிலாக்கணம், பிணக்கானம், புலம்புல், கையறுநிலை, இரங்கற்பா, சாவுப்பாட்டு, இழவுப்பாட்டு,

அழுகைப்பாட்டு போன்ற பல பெயர்களில் மக்கள் அழைப்பர்.[23] இவ்வொப்பாரிப் பாடல்கள் பொதுமக்களால் பாடப்படுவதாகும். வயதானவர்கள் இறந்தால் ஆட்டக் கலைஞர்களை வைத்துப் பாடப்படும் பாடல்கள் மாரடிப்பு என்று கூறப்படும். சில இனங்களில் இறந்தவர் புதைக்கப்பட்ட மூன்றாம் நாள் பெண்கள் மாரடிப்பு நடத்துவர். இது ஆட்டக்கலைஞர்களை வைத்துப் பாடப்படும் பாடல்கள் மாரடிப்பு என்று கூறப்படும். சில இனங்களில் இறந்தவர் புதைக்கப்பட்ட மூன்றாம் நாள் பெண்கள் மாரடிப்பு நடத்துவர். இது ஆட்டக்கலைஞர்களால் நடத்தப்படும் மாரடிப்புப்போல நீண்ட நேரம் நீடிப்பதில்லை. ஒப்பாரி கணவன், தந்தை, தாய், மகன், மகள் போன்ற உறவினர் இறந்தால் பெண்களால் ஒப்புவிக்கப் படுகின்றது. கணவனை இழந்த மனைவி ஒருத்தி,

> மருத அழியுதுண்ணு நான்
> மனசிலேயும் எண்ணலியே!
> மருத அழியலியே – என்
> மதிப்பழிஞ்ச மாயமென்ன?[24]

என்று ஒப்பு வைத்துப் பாடுவதை இன்றும் காணலாம்.

### 2.2.1.6. தொழில் பாடல்கள்

நாட்டுப்புறப் பாடல்களின் தொடக்கம் என்பது தொழில் பாடலாகக் கருதலாம். தொழிலில் சலிப்பு ஏற்படாமல் இருப்பதற்காகப் பாடப்படும் பாடல்களே தொழில் பாடல்கள் என்று அழைக்கப்படுகின்றன. தொழிற்பாடல்களில் காதல் பற்றிய செய்திகள் மிகுந்து காணப்படுகின்றன. தொழில் பாடல்களை வேளாண்மைத் தொழில் பாடல்கள், வேளாண்மையல்லாத தொழில் பாடல்கள் எனப் பிரிப்பர். இவற்றின் விளக்கங்களைத் தொடர்ந்து காணலாம்.

#### 2.2.1.6.1. வேளாண்மைத் தொழில் பாடல்கள்

மனிதன் ஓரிடத்தில் நிலையாக வாழத்தலைப்பட்டபோது வேளாண்மைத் தொழிலின் வரலாறு தொடங்குகின்றது. வேளாண்மைத் தொழிலே உலகில் இன்றும் பெரும்பகுதி நிலப்பரப்பில் நடைபெற்று வருகின்றது. இந்தத் தொழிலில் சலிப்பு ஏற்படாமலிருக்கப் பாடப்படும் பாடல்களே வேளாண்மைத் தொழில் பாடல்களாகும். இந்த வகைப்பாடல்களாக ஏர்ப் பாடல்கள், நடவுப் பாடல்கள், களை எடுப்போர் பாடல்கள், அறுவடைப் பாடல்கள், போரடிப் பாடல்கள், ஏற்றப் பாடல்கள் போன்றவை அமைகின்றன.[25] வேளாண்மைத் தொழிலில் தொடக்க முதல் இறுதி வரை ஒவ்வொரு நிலையிலும் தொழில்களுக்கேற்பப்

பாடல்கள் பாடப்படுகின்றன. மாடுகட்டி உழவு செய்யும்போது பாடும் பாடல்களாக ஏர்ப்பாடல்களும், பயிர் நாற்றுவிட்டுப் பரம்படித்து நடும்போது பாடும் பாடல்களாக நடவுப் பாடல்களும், பயிர் வளரும்போது அவற்றிற்கிடையில் வளரும் களையை வெட்டும்போது பாடப்படும் பாடல்களாக களை எடுப்போர் பாடல்களும், பயிர்முற்றி அறுவடை செய்யும்போது பாடப்படும் பாடல்களாக அறுவடைப் பாடல்களும், நெல், கேழ்வரகு, வரகு போன்றவை முற்றித் தாழையையும் பயனையும் பிரித்தெடுக்கும்போது பாடப்படும் பாடல்களாகப் போரடிப்பாடல்களும், வேளாண்மை நடைபெறும் காலங்களில் கிணற்றிலும், மதகுகளுக்குக் கீழே உள்ள ஏரித் தண்ணீரை மேலே கொண்டு வந்து வயலில் பாய்ச்சும் போதும் பாடப்படும் பாடல்களாக ஏற்றப் பாடல்களும் அமைகின்றன. நடவு நடும்போது ஒரு பெண்

> ***ஆராளு தூறாளு***
> ***அறுபத்தி ரெண்டாளு***
> ***ஆவுடைத் தங்கம் கையாளு***
> ***ஆலவட்டம் போடுதில்ல***
> ***அம்பது ஆளவச்சு***
> ***ஆதரவா வேலை வாங்கி***
> ***கூப்பிட்ட பேரும் போடும்***
> ***குணமுள்ள ஆவுத்தங்கம்***[26]

என்று பாடுவது பதங்காணச் சான்றாக அமைகிறது.

### *2.2.1.62. வேளாண்மையல்லாத தொழில் பாடல்கள்*

வேளாண்மைத் தொழிலின்போது பாடப்படும் பாடல்களைத் தவிர்த்து மற்ற தொழில்கள் செய்யும்போது உழைக்கும் மக்கள் பாடும் பாடல்கள் வேளாண்மையல்லாத தொழில் பாடல்கள் என்ற பிரிவில் வருகின்றன. இதில் நெல் குத்துவோர், சுண்ணாம்பு இடிப்போர், கிணறு வெட்டுவோர், சாலை போடுவோர், உப்பளம் செய்வோர், வண்டி ஓட்டுவோர், துறைமுகத் தொழில் செய்வோர், மீன்பிடிப்போர் ஆகியோர் தம்தம் தொழிலைச் செய்யும்போது பாடும் பாடல்கள் அனைத்தும் அடக்கமாகின்றன. இவற்றில் மீன்பிடிக்கும்போது மீனவர்களால் பாடப்படும் பாடல்கள் குறித்துக் காணலாம்.

### *2.2.1.6.2.1. மீனவர் பாடல்கள்*

தொல்காப்பியம் ஐந்திணைகளில் பொருள்வயின் பிரிவு தொடர்பான திணைகளாகப் பாலை, முல்லை, நெய்தல் ஆகியவற்றைக் குறிப்பிடுகின்றது. பொருள்வயிற் பிரிவாக அமையும் இவற்றில் பாலைத் தலைவனும், முல்லைத் தலைவனும் கால

நீட்டிப்புக்குப்பின் வந்துவிடுவார்கள் என்ற நம்பிக்கையுண்டு. இவை நிலவழிப் பிரிவுகளாக அமைகின்றன. ஆனால் கடல்வழிப் பிரிவாக அமையும் நெய்தலில் தலைவன் வருவான் என்ற நம்பிக்கை நிறைந்த நிலையே அமைகின்றது. உயிருக்கு மிகுந்த பாதிப்பு ஏற்படக் கூடியதாக நெய்தல் பிரிவு அமைகின்றது. இத்தன்மையையே சங்க இலக்கிய நெய்தல் பாடல்களில் பரவலாகக் காணமுடிகின்றது.

இன்றும் கடலில் மீன்பிடிக்கச் செல்லும் ஒவ்வொரு நாளும் உயிரைப் பணயம் வைத்துத் தொழில் செய்து திரும்ப வேண்டிய நிலையே உள்ளது. மிக அகன்று, பரந்து, ஆழம் நிறைந்த கடலில் நூறு அல்லது இருநூறு மைல் தூரம் கட்டுமரத்திலேயே தனியாகவும், கூட்டமாகவும் சென்று மீன்பிடித் தொழிலை மீனவர்கள் செய்கின்றனர்.[27] கடலிலிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொண்டு தொழில் செய்யும் நிலை என்பது மீன்பிடித் தொழிலில் மட்டுமே உள்ளது எனலாம். இப்படிப் பல்வேறு சிக்கல்களுக் கிடையில் மீன்பிடித் தொழில் செய்யும்போது மீனவர்கள் தொழிலின் கடுமையிலிருந்து விடுபடவும், சலிப்பில்லாமல் தொழில் செய்யவும் பாடிக்கொள்கின்றனர். இப்படிப் பாடிக் கொள்ளும் பாடல்களே 'மீனவர் பாடல்கள்' என்ற வரையறையை இங்குப் பெறுகின்றன. இக்களப்பகுதி மீனவர் பாடல்களின் பொது அமைப்பு முறை குறித்துக் காணலாம். பொதுவமைப்பு என்பதில் பாடல்களின் தொடக்கம், செய்தியமைப்பு, முடிவு போன்றவை வருகின்றன.

### 2.2.1.6.2.1.1. தொடக்கம்

களப்பகுதி மீனவர் பாடல்களின் தொடக்கம் இசைக் குறிப்புடன் தொடங்குதல், செய்தியுடன் தொடங்குதல் ஆகிய இரு நிலைகளில் அமைகின்றது. இத்தன்மைகள் குழுவினர் பாடல் களிலும், இருநபர் பாடல் ஆகிய இரண்டிலும் காணப்படுகின்றன.

#### 2.2.1.6.2.1.1.1. இசைக்குறிப்புடன் தொடங்குதல்

களப்பகுதியில் சேகரிக்கப்பட்ட பாடல்களில் இசைக் குறிப்புடன் தொடங்கும் பாடல்கள் பெரும்பாலும் பத்துப் பேருக்குக் குறையாத குழுவினர் சேர்ந்து துடுப்புப் போடும்போது பாடும் பாடல்களாகக் காணப்படுகின்றன. உதாரணமாக,

நபர் 1 லேலே லங்கடி லேலே
குழு லேலே லங்கடி லேலே
நபர் 1 அதிய நெல்லு குத்தயிலே
லேலே லங்கடி லேலே
குழு லேலே லங்கடி லேலே[28]

எனத் தொடங்கும் பாடலைக் குறிப்பிடலாம்.

### 2.2.1.6.2.1.1.2. செய்தியுடன் தொடங்குதல்

பெரும்பாலான பாடல்கள் செய்தியுடனேயே தொடங்குகின்றன. இருவர் துடுப்புப்போடும்போது பாடும் பாடல்களிலும் இரண்டிற்கு மேற்பட்டோர் துடுப்புப்போடும்போது பாடும் பாடல்களிலும் பாடும் செய்தியுடன் தொடங்கும் நிலைகள் காணப்படுகின்றன. இவற்றிற்குச் சான்றாக முறையே பின்வரும் பாடல்களின் தொடக்கங்களைக் குறிப்பிடலாம்.

**சான்று – 1**

நபர் 1 : சாந்து அரைக்கும்போது ஏலே லம்பா ஏலே

குழு : ஏலே லம்பா ஏலே

நபர் 1 : ஏலே லம்பா ஏலே

குழு : ஏலே லம்பா ஏலே

நபர் 1 : தன்னே நோக்கிப் பாத்தமாமா ஏலே லம்பா ஏலே[29]

**சான்று – 2**

நபர் 1 : அறுவதடி ஏலேலே கம்பங்களாம்

நபர் 2 : ஏலேலே

நபர் 1 : கம்பங்களாம்

நபர் 2 : ஏலேலே[30]

### 2.2.1.6.2.1.2. செய்தியமைப்பு

மீனவர் பாடல்களில் செய்தியமைப்பு மற்ற தொழில் செய்யும்போது பாடும் பாடல்களில் காணப்படும் செய்திகளை விடக் குறைந்தே காணப்படுகிறது. தொழில் கடுமையிலிருந்து விடுபடச் செய்தியமைப்பைக் காட்டிலும் இசையமைப்பு பெரிதும் துணை புரிவதால் செய்தி பின்னுக்குத் தள்ளப்பட்டு இசை மேலோங்கி நிற்கின்றதெனலாம்.

பாடலில் இடம்பெறும் செய்திகள் கோர்வையற்ற நிலையில் உதிரிச் செய்திகளாக இருக்கின்றன. ஒரு புராணச் செய்தியைப் பாடகர் தொடும்போது அந்தப் புராணச் செய்தி முடிவதற்குள் மற்றொரு வகையான செய்திக்குச் சென்றுவிடும் போக்குகள் காணப்படுகின்றன. பெரும்பாலும் காதல் தொடர்பான செய்திகள் மாறி மாறி வருகின்றன. இதற்கு இரவு நேரங்களில்

மனைவியுடன் இன்பமாக இருக்க வேண்டியவர்கள் தொழிலுக்காக அவர்களைப் பிரிந்திருப்பது காரணமாகக் கருதலாம்.

கிடைத்திருக்கின்ற மீனவர் பாடல்களில் கடலுக்குள் மீன் பிடிக்கச் செல்லும்போது கடல் இயற்கையினால் அவர்களுக்குத் தோன்றும் சிக்கல்கள் தொடர்பான செய்திகளோ மீன் வலையில் படும்போது ஏற்படும் சிரமங்கள் தொடர்பான செய்திகளோ இடம் பெறவில்லை. மீன் பெயர்கள், காற்று வகைகள் தொடர்பான செய்திகளும் காணப்படவில்லை. ஒரு காலத்தில் இவர்களது பாடல்களில் இவையெல்லாம் இருந்திருக்கலாம்.

### *2.2.1.6.2.1.3. முடிவு*

மீனவர் பாடல்களின் முடிவுகள் ஒரே தன்மையுடனேயே காணப்படுகின்றன. செய்தியுடன் பாடல் தொடங்கினாலும், இசைக் குறிப்புச் சொற்களுடன் பாடல் தொடங்கினாலும் முடிவுகள் இசைக் குறிப்புச் சொற்களுடனே முடிகின்றன. சான்றாக முறையே பின்வரும் பாடல்களின் முடிவுகளைச் சுட்டலாம்.

*சான்று 1*

மக்களாமே புள்ளங்களாம்
ஏலேலோ
அய்யய்யோ புள்ளங்களாம்
ஏலேலே
மனசாலே முடிச்சி வச்சேன்
ஏலேலோ[31]

*சான்று 2*

நபர் 2 : நரச்சாலும் கெழவனடி ஏலே லம்பா ஏலே

குழு : ஏலே லம்பா ஏலே

நபர் 2 : ஏலே லம்பா ஏலே

குழு : ஏலே லம்பா ஏலே

நபர் 2 : நானுனக்கு காவலடி ஏலே லம்பா ஏலே

குழு : ஏலே லம்பா ஏலே[32]

### *2.2.1.6.2.1.4. இசைக்குறிப்புச் சொற்கள்*

இசைக்குறிப்புச் சொற்கள் பொருளற்ற வார்த்தைகளின் கட்டமைப்பாகக் காணப்படுகின்றன.[33] களப்பகுதிப் பாடல்களில் இசைக்குறிப்புச் சொற்களாக,

லேலேல லங்கடி லேலே[34]

வேல்வேல் வேல் முருகா[35]

ஏலேலே மைலா[36]

ஏலேலே[37]

ஐலசா[38]

ஆகியவை காணப்படுகின்றன.

இவற்றில் வேல் வேல் வேல் முருகா என்பது மீனவர் பாடல்களுக்குச் சொந்தமானதாகக் கருதமுடியாது. ஏனைய மக்களிடம் தொடர்பு ஏற்படும்போது அவர்களின் தாக்கத்தால் சம காலங்களில் இதுபோன்ற தொடர்கள் மீனவர் பாடல்களில் இடம்பெற்று வருகின்றன. இது தவிர்த்து ஏனை இசைக் குறிப்புத் தொடர்கள் மீனவர் பாடல்களுக்கே உரியனவாகும்.

பாடல்களில் வரிக்கு வரி ஓசையமைப்புத் தொடர்கள் இடம்பெற்றுள்ளன. இந்த ஓசையமைப்பு அடிக்கடி வருவதால் தொழில் கடுமை தெரிவதில்லை. பாடல்களின் ஓசையமைப்பாகிய சந்த அமைப்பு எந்த ரீதியிலும் மாறுபடாமல் வரிக்கு வரி வந்து நிற்பது மீனவர் பாடல்களின் தனிச் சிறப்புகளில் ஒன்றாகக் கருதலாம்.

## 2.3. திரண்ட கருத்துகள்

இதுகாறும் கூறியவற்றிலிருந்து பின்வரும் கருத்துகளைத் தொகுக்கலாம்.

*2.3.1.* நாட்டுப்புறவியல் என்பது பழைய, புதிய மக்களின் கூட்டுப் படைப்பாக இருந்து வருகின்றது. இதில் மக்களின் வாழ்க்கை தொடர்பான அனைத்தும் பொருளாக அமைகின்றன.

*2.3.2.* நாட்டுப்புற இலக்கியங்களில் பாடல்கள் மக்களிடம் பெரும் வழக்காக வழங்கி வருகின்றன. நாட்டுப்புறப்பாடல்களில் தனிப்பாடல்கள் அல்லது உதிரிப்பாடல்கள் எல்லாத் தரப்பு மக்களாலும் பாடப்படுகின்றன.

*2.3.3.* நாட்டுப்புறப் பாடல்களைப் பலரும் பலவகையாக வகைப் படுத்துகின்றனர். இதற்கு அவர்கள் ஆய்விற்கு எடுத்துக் கொண்ட பாடல்களின் உள்ளடக்கங்களே காரணமாக அமைகின்றன. பாடல்களைப் பொதுவாகத் தாலாட்டுப் பாடல்கள், சிறுவர் பாடல்கள், ஆட்டப் பாடல்கள், பக்திப் பாடல்கள், தொழில் பாடல்கள், ஒப்பாரிப் பாடல்கள் என வகைப்படுத்தலாம்.

2.3.4. தொழில் பாடல்களே சமுதாயத்தில் முதலில் தோன்றிய பாடல்களாகக் கருதலாம். தொழிலில் தொடர்ச்சியாக ஈடுபடுவதற்காகவும், தொழில் கடுமையிலிருந்து விடுபடு வதற்காகவும் தொழிலின்போது பாடல்கள் தோன்றி யுள்ளன. தொழில் என்பது ஒரு மனிதனின் உணவு சேகரிப்பு நிலையிலேயே தோன்றியுள்ளதென்பது மேற்கண்ட கருத்தை உறுதிப்படுத்துவதாக அமைகின்றதெனலாம்.

2.3.5. தொழில் பாடல்களில் மீன்பிடித் தொழிலின்போது பாடப் படும் பாடல்கள் மற்ற பாடல் வடிவம், உள்ளடக்கம், தொடக்கம், முடிவு இசையமைப்பு ஆகியவற்றிலிருந்து வேறுபட்டுள்ளன. இதற்குத் தொழிலின் தன்மை மற்ற தொழில்களிலிருந்து மாறுபட்டிருப்பதே காரணமெனலாம்.

2.3.6. மீனவர் பாடல்களின் தொடக்கம், செய்தி, இசைக் குறிப்புச் சொற்கள் ஆகியவற்றுடனும், முடிவு இசைக் குறிப்புச் சொற்களுடன் மட்டும் அமைந்து காணப்படுகின்றன.

2.3.7. மீனவர் பாடல்களில் செய்தியமைப்பு பெரும்பாலும் உதிரிகளாக உள்ளது. பழங்கால, சமகாலச் செய்திகள் பாடல்களில் காணப்படுகின்றன.

## குறிப்புகள்

1. சு. சக்திவேல், **நாட்டுப்புற இயல் ஆய்வு**, ப. 12.
2. செ. அன்னகாமு, **ஏட்டில் எழுதாக் கவிதைகள்**, ப. 7.
3. Maria Leach (Ed.), **Standard Dictionary of Folklore, Mythology and Legend,** p. 325.
4. C.M. Bowra, **Heroic Poetry**, p. 21.
5. சு. சக்திவேல், **நாட்டுப்புற இயல் ஆய்வு**, ப. 23.
6. மேற்படி.
7. காண்க: செ. அன்னகாமு, **ஏட்டில் எழுதாக் கவிதைகள்**, ப. 7.
8. காண்க: நா. வானமாமலை, **தமிழர் நாட்டுப்பாடல்கள்.**
9. காண்க: ஆறு. அழகப்பன், **நாட்டுப்புறப்பாடல்கள் திறனாய்வு.**
10. சு. சக்திவேல், **நாட்டுப்புற இயல் ஆய்வு**, ப. 12.
11. காண்க: க கிருட்டிணசாமி, **நாட்டுப்புற இலக்கியம் ஓர் ஆய்வு.**

12. காண்க: சு. சண்முகசுந்தரம், தமிழ் நாட்டுப்புறப் பாடல்கள்.
13. காண்க: ஆறு. இராமநாதன், நாட்டுப்புறப் பாடல் வகைகள்.
14. காண்க: சு சக்திவேல், நாட்டுப்புற இயல் ஆய்வு, ப. 24.
15. காண்க: மேற்படி, ப. 28.
16. தமிழண்ணல், காதல் வாழ்வு, ப. 10.
17. சு. சண்முகசுந்தரம், தமிழ் நாட்டுப்புறப் பாடல்கள், ப. 86.
18. ஆறு. அழகப்பன், நாட்டுப்புறப் பாடல்கள் திறனாய்வு, ப. 25.
19. தி. நடராசன், நாட்டுப்புறச் சிறுவர் பாடல்கள், பக். 3-5.
20. சு. சக்திவேல், நாட்டுப்புற இயல் ஆய்வு, ப. 12.
21. சு. சண்முகசுந்தரம், தமிழ் நாட்டுப்புறப் பாடல்கள், ப. 222.
22. நா. வானமாமலை, தமிழர் நாட்டுப்பாடல்கள், ப. 45.
23. சு. சக்திவேல், நாட்டுப்புற இயல் ஆய்வு, ப. 50.
24. நா. வானமாமலை, தமிழர் நாட்டுப்பாடல்கள், ப. 455.
25. சு. சக்திவேல், நாட்டுப்புற இயல் ஆய்வு, ப. 30.
26. நா. வானமாமலை, தமிழர் நாட்டுப்பாடல்கள், ப. 400.
27. இருநூறு மைல்களுக்கு அப்பால் மீன்பிடிக்கச் செல்லும்போது சில நேரங்களில் படகு திசைமாறி வேறு இடங்களுக்குச் சென்று விடுவதும் உண்டு. திடீரென ஏற்படும் கடல் கொந்தளிப்பில் இறந்து போவதும் உண்டு.

    பேட்டி: கோதண்டபாணி, சின்னக்காலாப்பட்டு.
28. பி. எ.2, பா. 2.
29. பி. எ.2, பா. 1.
30. பி. எ.2, பா. 7.
31. பி. எ.2, பா. 8.
32. பி. எ.2, பா. 1.
34. பி. எ.2, பா. 10.
35. பி. எ.2, பா. 5.
36. பி. எ.2, பா. 3.
37. பி. எ.2, பா. 6.
38. பி. எ.2, பா. 4.

# 3. சமுதாயமும் மக்களும்

## 3.1. முகப்புரை

ஏட்டிலக்கியங்கள் தனிநபரால் படைக்கப்படுவதால் அதில் படைப்பாளியின் விருப்பு, வெறுப்புகளுக்கிணங்கச் சமுதாயச் செய்திகள் மிகக் குறைவாகவே அமைந்திருக்க வாய்ப்புண்டு. ஆனால் நாட்டுப்புற இலக்கியங்கள் பலரது கூட்டுப்படைப்பாகும். இவை, சில நேரங்களில் தனிமனிதர்களால் படைக்கப்பட்டாலும் கூட, வாய்மொழியாகப் பரவும்போது பலருடைய எண்ணங்களையும் கருத்துகளையும் ஏற்பதன் வாயிலாகக் கூட்டுப் படைப்புகளாக வருகின்றன. இவ்விலக்கியங்கள் மக்களின் அன்றாட வாழ்வில் பங்குபெறும் உயிர் இலக்கியங்களாகத் திகழ்வதோடு அவர்களின் வாழ்க்கை முறைகளையும் ஒளிவுமறைவின்றி வெளிப்படுத்தவும் செய்கின்றன.[1] ஏட்டிலக்கியங்களைவிட மிகுதியான சமுதாயச் செய்திகளைத் தாங்கி நிற்கின்றன. இவ்வியல் மீனவர் பாடல்களில் காணப்படும் சமுதாயம் தொடர்பான செய்திகளை ஆராய முற்படுகின்றது.

## 3.2. சமுதாயம்

ஒரு சிறிய நிலப்பரப்பில் ஒரு பொது வாழ்க்கை முறையைப் பின்பற்றிக் கூட்டாக வாழும் தொகுதி சமுதாயம் எனப்படும்.[2] இது மக்கள் ஒன்றுபட்ட பொது எண்ணத்துடன் கூடிய சட்ட திட்டங்களைக் கருத்தில் கொண்டு ஒன்றுகூடி ஓர் இடத்தில் வாழும் அமைப்பைக் குறித்து அமைவதாகும். சமுதாயம் நிலைத்து நிற்கக் குடும்பம், மணம், நிர்வாகம் போன்ற சமூக நிறுவனங்கள் காரணமாக அமைகின்றன. அவை பாடல்களில் உள்ள நிலையைக் காணலாம்.

### 3.2.1. குடும்பம்

குடும்பம் என்பது பாலினத் தேவையை உரிமையுடன் நிறைவேற வசதி செய்து கொடுப்பதுடன் முறையான உறவுடன் இனப்பெருக்கம் செய்வதன்மூலம் சமுதாயம் நீடிக்கக் காரணமாகவும் அமைகின்றது.[3] ஏடறியாத வரலாற்றிற்கு முற்பட்ட காலங்களிலிருந்தே குடும்பம் தனது வடிவத்தைச் சுருக்கிக்கொண்டு வந்து இறுதியில் ஒரே ஒரு தம்பதியர் அமைப்பாக மாறியுள்ளது.[4] பாடல்களில் குடும்பத்தில் நடைபெறும் காதல், மணம் போன்றவை தொடர்பான செய்திகள் காணப்படுகின்றன.

### 3.2.1.1. காதல்

காதல் என்ற தொழிற்சொல் பல அன்புறவுகளைக் குறித்தாலும் அது பொதுவாகக் காதலன் காதலி ஆகியோரின் உறவுகளையே குறித்து நிற்கிறது.[5] வாழ்க்கைக்கு இலக்கணம் வகுக்கும் தொல்காப்பியம் புறவாழ்க்கையைவிட மனிதனின் அக வாழ்க்கைக்கே முக்கியத்துவம் கொடுத்துள்ளது. தமிழனின் பண்டைய இலக்கியங்களாகக் கருதப்படும் சங்க இலக்கியங்களில் பெரும்பகுதி காதல் வாழ்வின் சித்திரிப்புக்களைப் பற்றியே பேசுகின்றது. மனிதன் படைக்கும் இலக்கியங்களின் பெரும்பகுதி காதல் என்பதை உள்ளும் புறமுமாகக் கொண்டு விளங்குகின்ற தெனலாம். நாட்டுப்புற இலக்கியங்களும் காதல் தொடர்பான செய்திகளைப் பேசியுள்ளன. பொதுவாகத் தொழிற்பாடல்களில் காதல் பற்றிய செய்திகள் மிகுந்து காணப்படுகின்றன.

களப்பகுதிப் பாடல்களில் காதலியின் வர்ணனைகள் இடம் பெற்றுள்ளமையைக் காணமுடிகின்றது. காதலனை நினைத்துத் தூக்கமில்லாத காதலியின் கண்ணுக்குத் 'துடும்பு' கொண்டும்,[6] ஓலை கொண்டும் மையெழுத வேண்டும்[7] எனக் காதலன் கூறுவதைப் பார்க்க முடிகிறது. காதலியின் கூந்தல் மிகவும் கறுப்பாக இருப்ப தையும்,[8] அதன் நீளம் நூறடியளவுக்கு[9] நீண்டு இருப்பதாகவும் பாடல்கள் குறிப்பிடுகின்றன. காதலியைப் 'பூவழகி'[10] என்று ஒரு காதலன் வர்ணிப்பதையும் பார்க்க முடிகின்றது.

காதலனை மாமா என்று விளிக்கும் போக்குகளைச் சில பாடல்களில் காணமுடிகின்றது. காதலி ஒருத்தி, காதலனை மிளகாய் அரைக்கும்போது முன்னே நின்று பார்த்தவன்[11] என்றும், தலையை வகுந்து சீவும்போது தனது அழகைப் பார்த்தவன்[12] என்றும், மீன் பிடிக்கும்போது ஓடையிலே பொன் ஊசி தந்தவன்[13] என்றும் கூறுவதைக் காணமுடிகின்றது. மற்றொரு காதலி காதலனைக் காணாமல் தவித்து மெத்தை வீட்டின் மேலிருந்து புலம்புவதையும்[14] பாடல் ஒன்றில் பார்க்க முடிகின்றது. காதலியை எந்தச் சூழ்நிலையிலும் மறவேன் என்று ஒரு காதலன் குறிப்பிடுவதைப் பாடல் ஒன்றில் பார்க்க முடிகிறது. அவன் கொடை மல்லிகை பூத்தாலும்,[15] நாவிலங்கை பூத்தாலும்[16] நான் காதலியை மறவேன் என்று கூறுகின்றான். சமுதாயத்தில் காலந்தோறும் காதலுக்குக் கடுமையான தடைகள் இருந்தாலும் அவற்றை மீறிக் காதல் நடைபெறுவதென்பதை எவராலும் தடுக்க முடியவில்லை. இதற்குக் காதல் என்பது உணர்வு தொடர்புடைய ஒன்றாக இருப்பதே காரணமெனலாம்.

### 3.2.1.2. மணம்

தொல்காப்பியம் முறைப்படி நடைபெறும் மணத்தைக் 'கொடுப்பக் கொள்வது'[17] என்று குறிப்பிடுகின்றது. பங்குனி மாதம் உரோகினி நட்சத்திரத்தில் மணம் நடந்தமையைச் சங்கப்பாடல் ஒன்று விவரிக்கின்றது.[18] இன்றைய சூழலில் பெரியோர்களால் பெண் பார்த்து முறைப்படி செய்து வைக்கப்படும் மணம் என்பது பொருள் சேர்க்கும் சாதனமாக அல்லது பெண் வீட்டாரைப் பகற்கொள்ளையடிக்கும் இடமாக மாறிவிட்டதென்றே கூறலாம். மீனவர் பாடல்களில் உடன்போக்கு மணம் தொடர்பான செய்தி காணப்படுகின்றது.

தொல்காப்பியம் முறையான மணத்தை ஏற்றுக்கொண்டது போலத் தலைவன், தலைவி இருவரும் பெற்றோர் எதிர்ப்பை மீறி வெளியூர் சென்று செய்துகொள்ளும் மணத்தையும் ஏற்றுக் கொண்டுள்ளது.[19] பாடல் ஒன்றில் மாலையிட முடியவில்லை என்றால் ஓடிப்போவோம் என்று காதலியை அழைக்கும் காதலனைச் சந்திக்க முடிகிறது. அவன்,

**ஊருக்குப் போலாம் வாடி**
**ஒருமகன் கூட நடந்துவாடி**[20]

என்று காதலியை அழைக்கின்றான். மற்றொரு காதலன் தன்மாமன் மகளைக் காதலித்தவன், அவன் தன் காதலியை 'அத்த பொண்டே கூட வாடி'[21] என அழைப்பதைப் பாடல் ஒன்றில் பார்க்க முடிகிறது. உடன்போக்கு மணம் என்பது தற்காலங்களில் மிகவும் இழிவான ஒன்றாகச் சமுதாயத்தில் பார்க்கப்படுகின்றது.

உடன்போக்கு மணம் என்பது காதலர்களின் அல்லது காதலின் உறுதிப்பாட்டை வெளிப்படுத்துவதாக அமைகின்ற தெனலாம்.

### 3.2.1.3. வறுமை

இந்தியா போன்ற வளரும் நாடுகளில் ஏற்றத்தாழ்வுகள் பெரும்பாலான மக்களிடம் குடிகொண்டுள்ளன. உடைமை யாளர்களுக்கும் உழைப்பாளர்களுக்குமான முரண்பாடுகள் காலந்தோறும் இருந்து வந்துள்ளன. தனியுடைமைச் சமுதாய அமைப்பு தோன்றிய காலம் முதல் பெரும் பகுதியினர் வறுமையில் வாழ்வது தவிர்க்க இயலாத ஒன்றாகிவிட்டது. உடைமையாளர்கள் சாதாரண மக்களின் உழைப்பைச் சுரண்டிக் கொழுத்து, சுகபோகமாக வாழ்வது ஏற்றத்தாழ்வுள்ள இந்தியா போன்ற நாடுகளில் மிகுந்து காணப்படுகின்றது. வறுமைக்கு இதுவே காரணமாகிறது.

தமிழகத்தில் பழங்காலம் முதல் வறுமை நிலவி வந்துள்ளது என்பதைச் சங்க இலக்கியங்களில் காணப்படும் குறிப்புகளைக் கொண்டு தெரிந்து கொள்ள முடிகிறது.[22] வறுமை என்பதை மெய்ப் பாடுகளில் ஒன்றாகத் தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார்.[23] வறுமை என்பதற்கு விளக்கமளிக்கும் பேராசிரியர், 'போகம் துய்க்கப்பெறாத பற்றுள்ளம்,[24] என்று கூறுகின்றார். இன்று அன்றாட வாழ்வில் மக்களுக்குரிய அடிப்படை வசதிகளான உணவு, உடை, உறைவிடம் போன்றவைகூட இல்லாத மக்களையே பெரும்பகுதி காண முடிகிறது. களப்பகுதியில் மீனவர் சமுதாயம் மிகவும் வறுமையான நிலையில் இருப்பதை ஆய்வாளர் பல இடங்களில் நேரில் தெரிந்து கொள்ள முடிந்தது.[25] அவர்களின் வறுமை நிலை அவர்கள் பாடும் பாடல்களிலும் வெளிப்படுவதைப் பார்க்க முடிகிறது.

பெண்கள் நெல் குத்தி வாழ்க்கை நடத்துவதையும்[26] நெல் குத்துவதால் துன்பம் மிகுந்து பெண்கள் புலம்புவதையும்[27] பாடல் ஒன்று விவரிக்கின்றது. கடன்பட்டு வாழ்வதைச் சில பாடல்கள் கூறுகின்றன. கடன் வாங்கி வாழ்க்கை நடத்திப் பிறகு தொழில் செய்து கடனை அடைத்து வாழும் நிலைகள் பாடல்களில் கூறப்படு கின்றன. பட்ட கடன் ஒரு கோடி[28] என்றும் பாடுபட்டது முக்கோடி[29] என்றும் பாடல்கள் குறிப்பிடுவதிலிருந்து மக்களின் வறுமையான வாழ்க்கையை உணரலாம். எவ்வளவு துன்பப் பட்டாலும் என்றாவது ஒரு நாள் ஏழையின் துன்பம் தீரும் என்ற நம்பிக்கையும் மீனவர்களிடம் காணமுடிகிறது.[30]

### 3.2.2. நிர்வாகம்

தொடக்ககால மனிதனின் நிர்வாகம் என்பது குலக்குழு (Clan) என்பதிலிருந்து தோன்றியதாகக் கருதப்படுகின்றது.[31] இதற்குபின் காலந்தோறும் பல்வேறு வகையான நிர்வாக அமைப்புகள் சமுதாயத்தில் இருந்து வந்துள்ளன. இந்தியாவில் கௌடில்யத்தில் நகர, கிராம நிர்வாக அமைப்புகள் தொடர்பான செய்திகள் காணப்படுகின்றன.[32] இத்தகைய அமைப்புமுறை பழந் தமிழகத்தில் இருந்ததாகவும் கருதப்படுகின்றது.[33] நாயக்கர் காலத்தில் தோன்றிய பாளையப்பட்டு ஆட்சிமுறை கிராமநிர்வாக முறையை அடிப்படையாகக் கொண்டதாகக் கருதலாம்.

#### 3.2.2.1. தலையாரி

இந்தியாவில் பலநூறு ஆண்டுகளுக்கு முன்பே நாட்டாமை மணியக்காரன், தலையாரி ஆகியோரைக் கொண்ட கிராம நிர்வாக முறை இருந்துள்ளது. இதில் தலையாரி என்பவர் மக்களுடன் நேரடியாகத் தொடர்புடையவராக உள்ளார். பாடல் ஒன்றில் தலையாரிக்கு அறுவடை நாளில் வயலில் அரிகொடுக்க வேண்டும்[34]

என்றும் அதை ஒதுக்கிப் போட்டுள்ளதாகவும்[35] குறிப்புகள் காணப் படுகின்றன. இன்றுள்ள கிராம நிர்வாக அதிகாரி (V.A.O.)யின் உதவியாளரே தலையாரி என்று பாடலில் சுட்டப்படுகின்றார்.

### 3.2.2.2. சேனை

அரசன் தனது பாதுகாப்பிற்காகவும் மக்களிடம் தனது அதிகாரத்தை நிலைநிறுத்துவதற்காகவும் படைகள் வைத்துக் கொள்வது பொதுவான வழக்கமாகும். தொல்காப்பியத்தில் தானை, யானை, குதிரை ஆகிய மூவகைச் சேனைகள் அரசனுக்கு அவசிய மென்பது குறிப்பிடப்படுகின்றது.[36] அரசனைத் தவிர்த்துப் பெரும் நிலக்கிழார்களும் வணிகர்களும் தங்களைப் பாதுகாத்துக் கொள்ளப் படையை வைத்திருந்தமையைச் சோழர் காலத்தில் காணமுடிகின்றது.[37] பாடல் ஒன்றில் கூட்டங்கள் மிகுந்துள்ள காவலர் என்றும் அவர் சேனையுள்ளவர் என்றும் குறிப்பிடப் படுகின்றது.[38]

### 3.2.3. சாதிகள்

இந்தியா பல்வேறு பாரம்பரியங்களுக்குச் சொந்தமாக இருப்பதுபோல் ‘சாதி’ என்பதற்கும் சொந்தமாக இருந்து வருகின்றது. சாதியைப் பற்றியும் அதன் தோற்றம் பற்றியும் அறிஞர்களிடம் பல்வேறு கருத்து மோதல்கள் இருந்து வருகின்றன. பழைய இந்தியாவில் இருந்த குலக்குழுக்கள் (Clane) தம் சுய தேவையைப் பூர்த்தி செய்துகொண்டு வாழ்ந்ததால் அவற்றின் உறவுகள் அகமண முறையைச் சுற்றியே அமைந்தன. அதாவது ஒரு குலக்குழு பிற குலக்குழுவினருடன் எந்தத் தொடர்பும் பெற்றிருக்க வில்லை. இது நீடித்துக் கெட்டியாகப் போனதே சாதியின் தோற்றத்திற்குக் காரணமாக அமைகிறது.[39] இன்று பிறப்பு சாதியைத் தீர்மானித்தல் என்பது இதையே வலியுறுத்துகின்றதெனலாம். பாடல்களில் மீனவர், நாயக்கர், வெள்ளாளர் ஆகிய சாதிகளைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன.

### 3.2.3.1. மீனவர்

மீனவர்களில் பல பிரிவுகள் காணப்படுகின்றன. மீனவர்களில் ஒரு பிரிவினராகிய செம்படவர் ஆறு குளம் ஆகியவற்றில் மீன் பிடிப்பவர்கள் என்றும், அவர்கள் கடலில் சென்று மீன் பிடிக்க மாட்டார்கள் என்றும் எட்கர் தர்ஸ்டன் குறிப்பிட்டுள்ளார்.[40] மேலும் அவர் கடலில் சென்று மீன்பிடிக்கும் மீனவர்களைப் பட்டினவர்கள் என்று குறிப்பிட்டு, அவர்களின் கிளைப்பிரிவுகளாக நாட்டான், கவுண்டன், மணியக்காரன், பகதூர் அல்லது பிள்ளை ஆகிய பிரிவுகளைக் குறிப்பிடுகின்றார்.[41]

களப்பகுதியில் உள்ள மீனவர்கள் பட்டணவர் மற்றும் கவுண்டன் ஆகிய பிரிவுகளைச் சார்ந்தவர்களாகக் காணப்படுகின்றனர்.

பட்டணவர்கள் பாடும் பாடல்களில் செம்படவன்,[42] செம்படத்தி[43] ஆகிய சொற்கள் சரளமாகப் பயன்படுத்தப்படுவதை நோக்கச் செம்படவர்கள் கடலில் சென்று மீன் பிடிக்க மாட்டார்கள் என்ற கருத்து அவ்வளவு பொருத்தமாகத் தோன்ற வில்லை. மேலும் எட்கர் தர்ஸ்டன் கடலில் சென்று மீன் பிடிக்கும் எல்லாவிதமான மீனவர்களையும் செம்படவன்[44] என்ற பிரிவிலேயே பேசுவது இங்குக் குறிப்பிடத்தக்கதாகும். பழந்தமிழ் நூல்களில் இடம்பெறும் நெய்தல் பாடல்களில் மீனவர், பரதவர் என்று சுட்டப்பட்டு அவர்களின் வாழ்க்கை விரிவாகப் பேசப்படுவதைப் பரவலாகக் காணலாம்.

கடலில் சென்று மீன்பிடிக்கும்போது ஏற்படும் பல்வேறு நிலைகளைப் பாடல்கள் விரிவாகப் பேசுகின்றன. மீனவர்கள் தங்களை 'மீன்பிடிக்கும் சாதி நாங்க'[45] என்று கூறிக் கொள்கின்றனர். இவர்கள் கடலில் மீன்பிடிக்கப் படகில் செல்லும்போது, துடுப்புப் போட்டு துடுப்புப் போட்டுக் கைகள் சிவந்து போனதையும்[46] கையில் இரத்தம் கட்டியாகி விட்டதையும்[47] பாடல்கள் விவரிக்கின்றன. ஒரு பாடல் துடுப்புப்போட்டுக் கண் சிவந்து போனதையும்,[48] மற்றொரு பாடல் வலைவீசி மீனவர்களில் மீன் பிடிப்பதையும்[49] சுட்டுகின்றது. காத்தடிக்கும் திசையில் கட்டுமரம் செல்வதை[50] ஒரு பாடல் குறிப்பிடுகிறது.

மீன்பிடித் தொழில் மிகவும் ஆபத்தானது என்பதையும் பாடல்கள் சுட்டுகின்றன. மீன் பிடித்தல் தொழில் கடல் மட்டத்தில் இருந்து இருநூறு, முந்நூறு,[51] நானூறு,[52] எண்ணூறு[53] அடிகளுக்கு மேல் நடைபெறுவதைப் பாடல்கள் குறிப்பிடுகின்றன. தொன்மைமிக்க தமிழ்ச் சமுதாயமாக மீனவர் சமுதாயம் இருந்து வருவதையும், அவர்களின் வாழ்க்கை அன்று இருந்ததுபோலவே இன்றும் பல சிக்கல்களுக்கிடையில் இருக்கின்றது என்பதையும் பாடல்களும் நடைமுறை வாழ்வும் தெளிவுபடுத்துகின்றன எனலாம்.

### *3.2.3.2. நாயக்கர்*

நாயீக், நாயக்கன், நாயக்கர் ஆகிய சாதிகள் தமிழகத் திலுள்ள பல்லி, இருளர், வேடன் ஆகிய சாதிகளின் கிளைப் பிரிவுகளாகக் காணப்படுகின்றன.[54] இவர்களில் பல்லி அல்லது வன்னியர் இனத்தின் ஒரு கிளைப்பிரிவாகிய நாயக்கர் என்பவரைத் தவிர்த்து மற்றவர்கள் எல்லாம் தெலுங்குமொழி பேசுபவர்கள். பாண்டிச்சேரி வட்டாரத்தில் வன்னியர் இனமே மிகப்பெரிய இனமாக உள்ளது. இதிலுள்ள பல்வேறு பிரிவினர்களில், கவுண்டர்

பிரிவினரே மிகுந்துள்ளனர். கவுண்டர் பிரிவினரில் வசதிவாய்ப்புப் பெற்றவர்கள் நாயகர்[55] என்று தன் பெயருக்குப் பின்னால் போட்டுக் கொள்கின்றனர். பாடல் ஒன்றில் நாயக்கன் மகள் பிறந்ததால் அண்டமும், ஆகாசமும் நடுங்குவதாகச் செய்தி[56] காணப்படுவதிலிருந்து பொருள் வளமிக்க ஒரு சமூகமாக நாயக்கர் இனம் இருந்துள்ளது என்பதைத் தெரிந்து கொள்ளமுடிகிறது.

### 3.2.3.3. வெள்ளாளன்

வெள்ளாளன் என்ற சொல் வெள்ளத்தை அடக்கி வேளாண்மை செய்தவன் என்பதை அடிப்படையாகக் கொண்டு எழுந்ததாகும்.[57] தமிழனின் பழந்தமிழ் இலக்கண நூலாகிய தொல்காப்பியம் நான்கு வர்ணங்களில் ஒரு பிரிவாக வேளாளர்களைக் குறிப்பிடுகின்றது.[58] வெள்ளாளன் என்ற இந்த இனம் பள்ளன், பல்லி மற்றும் சில இனங்களுடன் தொடர்பு படுத்திப் பேசப்படும் இனமாகவும் உள்ளது.[59] வெள்ளாளர்களில் அரம்புக்குட்டி வெள்ளாளன், காரைக்காட்டு வெள்ளாளன், கொண்டையங்கோட்டை வெள்ளாளன், கும்பகோணம் வெள்ளாளன், கும்மிடிசெட்டி வெள்ளாளன், சவளைப்பிள்ளைமார், துளுவ வெள்ளாளன் போன்ற பல கிளைப்பிரிவுகள் காணப் படுகின்றன.[60] களப்பகுதிப் பாடல் ஒன்றில் வெள்ளாளன் கப்பலில் வந்து இறங்குவான்[61] என்ற செய்தி காணப்படுகின்றது. மேலும் இந்தக் கப்பல் வெள்ளந்துரை கப்பல்[62] என்றும் பாடல் குறிப்பிடு கின்றது. இதனால் வெள்ளையர்கள் இந்தியாவை ஆண்ட காலங்களில் வெள்ளாளர்கள் உயர்நிலையில் இருந்துள்ளனர் எனத் தெரிந்து கொள்ளமுடிகிறது.

### 3.2.4. ஊர்கள்

மனிதனை அடையாளம் காட்டப் பெயர்கள் தோன்றியது போல அவன் வாழும் இடங்களை அடையாளம் காட்ட ஊர்ப்பெயர்கள் தோன்றியுள்ளன. மனித இனம் ஒரு குழுவாக, சமூகமாக ஆங்காங்கே ஏதேனும் ஒரு பகுதியில் சிறிதுகாலம் நிலையாக வாழத் தொடங்கிய பின்னர்த்தான் இடப்பெயர்கள் தோன்றியிருக்கவேண்டும்.[63] ஒரு மனிதனை இன்னொரு மனிதனிடமிருந்து வேறுபடுத்த ஆட்பெயர்களையும், ஓர் இனத்தை மற்றொரு இனத்திடமிருந்து வேறுபடுத்த இனப்பெயர்களையும் வழங்கியது போன்று நிலத்தின் ஒரு பகுதியை இன்னொரு பகுதியினின்றும் வேறுபடுத்திக் காட்ட இடப்பெயர்களை ஆதிகால மக்கள் அமைத்துக் கொண்டனர்.[64] மீனவர் தாம்பாடும் பாடல்களில் தமக்குத் தெரிந்த ஊர்களைக் குறிப்பிட்டு அவற்றின் சிறப்புகளையும்

பாடுகின்றனர். இங்குப் பாடல்களில் சிறப்பாகக் குறிப்பிடப்படும் மதுரை, மலையனூர் ஆகிய ஊர்கள் குறித்துக் காணலாம்.

### 3.2.4.1. மதுரை

தமிழகத்திலுள்ள பழந்தமிழ் ஊர்களில் ஒன்றாக மதுரை இருந்து வருகின்றது. பாண்டிய மன்னர்களின் தலைநகராக விளங்கிய மதுரையில் தமிழ்ச் சங்கம் தோற்றுவிக்கப்பட்டு தமிழாராய்ந்த நிலைகளை இலக்கியங்களும், செப்பேடுகளும் விளக்கி நிற்கின்றன. கூடல்மாநகர் என்று அழைக்கப்படும் மதுரையில் கண்ணகி நீதிகேட்ட வரலாறு சாதாரணமான மக்களுக்கும் தெரிந்த ஒன்றாகும். மதுரை மீனாட்சியம்மன் கோயிலும், முருகனின் அறுபடை வீடுகளாகிய திருப்பரங்குன்றம், பழமுதிர்ச்சோலை ஆகியவையும் மக்களின் வழிபாட்டுத் தலங்களாக இருந்து வருகின்றன. பாடல் ஒன்றில் மதுரை மாடங்கள் நிறைந்த வீதிகளைக் கொண்டதென்றும்,[65] முருகனின் சரவணப்பொய்கையிலும்[66] வைகை வனப்பொய்கையிலும் நீராடி வருவேன்[67] என்று ஒரு தகவவாளி கூறுகின்ற நிலையைப் பார்க்க முடிகின்றது. களப்பகுதியிலிருந்து 500 கிலோ மீட்டர் தூரத்திலிள்ள மதுரையின் பெயர் பாடலில் இடம்பெற்றிருப்ப தென்பது மதுரையின் பழமையையும் சிறப்பையும் காட்டுவதாக அமைகின்றதெனலாம்.

### 3.2.4.2. மலையனூர்

எட்கர் தர்ஸ்டன் செம்படவன் என்ற பகுதியில் மீனவர்கள் தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள மலையனூரிலும் அதைச் சுற்றியும் மிகுதியாக உள்ளனர் என்கின்றனர்.[68] இன்றும் மலையனூர் வட்டாரங்களில் மீனவர்களின் எண்ணிக்கை மிகுந்தே காணப் படுகின்றது. பாடல் ஒன்றில் மலையனூர் ஏரி எவ்வளவு மழை பெய்தாலும் நிரம்பாது என்றும்[69] ஏரிமட்டம் குறைந்து காணப் படுவதால் ஏழைகளின் பஞ்சம் தீராது[70] என்ற குறிப்புகள் காணப்படுகின்றன. இன்றும் மலையனூர் ஏரி அவ்வளவு எளிதில் நிரம்பக்கூடியதாக இல்லை என்பது இங்குக் குறிப்பிடத்தக்க செய்தியாகும்.

### 3.2.4.3. வீரராமபட்டினம்

புதுச்சேரி நகரத்திலிருந்து ஐந்து கிலோ மீட்டர் தொலைவில் தெற்குப் பக்கமாக அமைந்துள்ள ஊர் வீரராமபட்டினம் ஆகும். இங்கு ஏறத்தாழ 1000 வீடுகளுக்குக் குறையாமல் உள்ளன. கடற்கரையில் அமைந்துள்ள இந்த ஊரில் செங்கழனி அம்மன் என்ற கோயில் உள்ளது. இந்தக் கோயிலில் வருடம் ஒருமுறை

மக்கள் திரளாகக்கூடி விழா எடுக்கின்றனர். பாடல் ஒன்றில் மீனவர்கள் தங்கள் குலதெய்வமான செங்கழனி நீர் அம்மன் என்று குறிப்பிடும்போது 'வீரராமபட்டின மந்தையிலே'[71] என்று குறிப்பிடுவதைக் காணமுடிகிறது.

### 3.3. திரண்ட கருத்துகள்

இதுகாறும் கூறியவற்றிலிருந்து பின்வரும் கருத்துகளைத் தொகுக்கலாம்.

3.3.1. எட்டிலக்கியங்களைவிட நாட்டுப்புற இலக்கியங்கள் சமுதாயம் பற்றிய ஆய்விற்குப் பெரிதும் துணை செய்வதாகும். இதற்கு நாட்டுப்புற இலக்கியங்கள் கூட்டுப் படைப்புகளாக இருப்பதே காரணமெனலாம்.

3.3.2. சமுதாயம் என்பது மக்கள் ஓரிடத்தில் வாழத் தலைப்பட்ட போது உருவானதாகும். இவை பொது வழக்காற்றுடன் தொடக்கக் காலங்களில் இயங்கி வந்துள்ளன எனலாம்.

3.3.3. சமுதாய இயக்கத்தில் குடும்பத்தின் பங்களிப்பு மிகச் சிறந்ததாக இருப்பதற்கு அது ஒரு சமூக உற்பத்தி சாதனமாக இருப்பதேயாகும். குடும்பத்தில் நிகழும் காதல், மணம் போன்றவை பல தடைகளுக்கும் சிக்கல்களுக்கும் நடுவிலேயே நிகழ்ந்து கொண்டுள்ளன. காதலன், காதலி இவர்களுக்கிடையில் நடைபெறும் உரையாடல்கள், நிகழ்ச்சிகள் ஆகியவற்றைப் பாடல்கள் விரிவாகப் பேசுகின்றன. இவர்கள் காதலின்மீது கொண்டுள்ள உறுதிப்பாடே உடன்போக்காக அமைகின்றது எனலாம்.

3.3.4. வறுமை என்பது இந்தியா போன்ற ஏற்றத்தாழ்வுள்ள நாடுகளில் மக்களிடம் நிரந்தரமாகக் கொண்டுள்ளது. மீனவர் வாழ்க்கை பல துன்பங்களுக்கிடையில் நடைபெறுவதைப் பாடல் செய்திகள் மூலம் தெரிந்துகொள்ள முடிகிறது.

3.3.5. இந்திய அமைப்பில் ஒரு நிறுவனமாக வளர்ந்துவிட்ட சாதிகள், பொருளாதார நிலையைப் பொறுத்து ஏற்ற இறக்கங்களுடன் காணப்படுகின்றன. மீனவர் வாழ்க்கைச் சிக்கல்கள், மேல்நிலைச் சாதிகாரர்களுக்கு இல்லை என்பதைப் பாடல்கள் மூலம் தெரிந்துகொள்ள முடிகிறது.

3.3.6. இந்தியாவில் இன்றும் கிராம நிர்வாகத் தன்மையே மேலோங்கியுள்ளது. தலையாரியின் பணி மக்களுடன் நேரடியாகப் பிணைக்கப்பட்டதாகும். பழைய அரச சமுதாய அமைப்பில் சேவை முக்கியத்துவம் பெற்ற ஒன்றாக இருந்துள்ளதெனலாம்.

3.3.7. ஊர்கள் ஒரு சமுதாயத்தின் கலாச்சார நிலைகளையும் வரலாற்றுச் செய்திகளையும் வெளிப்படுத்தவல்லனவாக உள்ளன. மீனவர்கள் தம் பாடல்களில் சுட்டும் ஊர்கள் அவர்களோடு தொடர்புடையவையாக இருக்கின்றன. இதற்கு மேல்மலையனூர், வீரராமபட்டினம் ஆகிய ஊர்களைப் பற்றிய குறிப்புகளைக் கூறலாம்.

மதுரை பொதுவாக எல்லா மக்களுக்கும் தெரிந்த ஊர் என்ற அடிப்படையில் பாடல்களில் இடம்பெற்றுள்ளதாகக் கருதலாம்.

## குறிப்புகள்

1. ஆறு. இராமநாதன், **நாட்டுப்புறப் பாடல்கள் காட்டும் தமிழர் வாழ்வியல்,** பக். 3-4.
2. **வாழ்வியல் களஞ்சியம்,** தொகுதி - 8, ப. 469.
3. மேற்படி, தொகுதி - 7, ப. 597.
4. ஏங்கெல்ஸ், **குடும்பம் தனிச்சொத்து அரசு ஆகியவற்றின் தோற்றம்,** பக். 76-78.
5. வ.சுப. மாணிக்கம், **தமிழ்க்காதல்,** பக். 491-492.
6. 2: 16.
7. 2: 65.
8. 6: 77.
9. 2: 57.
10. 3: 35.
11. 1: 7-11.
12. 1: 13-20.
13. 1: 30-31.
14. 6: 20.
15. 4: 59.
16. 4: 65-70.
17. தொல். பொருள். 142.
18. அகம். 82.
19. தொல். பொருள். 144.

20.7: 15-20.

21. 3: 67.

22. புலவர்கள் வறுமை காரணமாகப் பல இடங்களுக்கு அலைந்து திரிந்தமையையும், பாணர்கள் வறுமை காரணமாக ஆற்றுப் படுத்தப்பட்ட நிலைகளையும் சங்க இலக்கியங்களில் பரவலாகக் காணலாம். - ஆய்வாளர்.

23. தொல். பொருள். 253.

24. தொல். பொருள். பேராசிரியர் உரை, ப. 20.

25. களப்பணி ஊர்கள் அனைத்திலும் 90% மக்கள் வறுமையில் உள்ளதை ஆய்வாளர் நேரில் விசாரித்துத் தெரிந்து கொண்டார்.

26. 2: 3.

27. 2: 5-15.

28. 3: 126.

29. 3: 130.

30. 3: 95-100.

31. ஏங்கெல்ஸ், குடும்பம் தனிச்சொத்து அரசு ஆகியவற்றின் தோற்றம், பக். 135-139.

32. சாணக்கியரின் கௌடில்யம் பரந்து விரிந்து கிடந்த மௌரியப் பேரரசை ஊர்களின் எண்ணிக்கை அடிப்படையில் கிராம, நகரப் பேரரசுகளாகப் பிரித்துப் பேசுகிறது. - ஆய்வாளர்.

33. நா. சுப்பிரமணியன் தான் எழுதியுள்ள சங்க கால வாழ்வியல் என்ற நூலில் பழந்தமிழகத்தில் கிராம, நகர அரசுகள் இருந்ததாகக் கருதுகின்றார். இது மேலும் ஆராயத்தக்கது. - ஆய்வாளர்.

34. 9: 105-110.

35. மேற்படி.

36. தொல். பொருள். 85.

37. சோழர் காலக் கல்வெட்டுகளில் இருப்பதாகத் தென்கிழக்கு ஆசிய நாடுகளில் தமிழர் பண்பாடு என்ற நூலில் கூறப்பட்டுள்ளது. - ஆய்வாளர்.

38. 8: 79-90.

39. ஆ. திருநாகலிங்கம், புதுச்சேரி வட்டார நாட்டுப்புறக் கதைகள் காட்டும் சமுதாயம் (அச்சில் வராத ஆய்வேடு), பக். 118-120.

40. "The Sambadavan are the fishermen of the Tamil country, who carry on their calling in fresh water tanks (ponds) lakes and rivers and never in the Sea"

- Edgar Thurston, **Castes and Tribes of Southern India**, Vol. VI, p. 350.

41. மேற்படி.

42. 8: 130-140.

43. மேற்படி.

44. 40ஆம் குறிப்பைப் பார்க்கவும்.

45. 8: 120-123.

46. 6: 85.

47. 6: 86-90.

48. 7: 67.

49. 3: 105-110.

50. 9: 180-200.

51. 2: 35.

52. 8: 119.

53. 2: 38.

54. Edgar Thurston, **Castes and Tribes of Southern India**, Vol. V, p. 139.

55. தகவல்: **சித்தாராமன்**, முருகம்பாக்கம், 10.4.1996.

56. 4: 30-40.

57. Edgar Thurston, **Castes and Tribes of Southern India**, Vol. II, p. 361.

58. தொல். பொருள். 80.

59. Edgar Thurston, **Castes and Tribes of Southern India**, Vol. II, p. 361.

60. Ibid., pp. 377-381.

61. 6 107-110.

62. 6: 111-114

63. சு. சக்திவேல், நாட்டுப்புற இயல் ஆய்வு, ப. 315.

*64.* K.M. George, **Place names of Southern India**, pp. 19-20.

*65. 9: 55.*

*66. 9: 30.*

*67. 9: 36.*

*68.* Edgar Thurston, **Castes and Tribes of Southern India**, Vol. VI, p. 356.

*69. 3: 55.*

*70. 3: 56-65.*

*71. 5: 99.*

# 4. பண்பாடும் மக்களும்

## 4.1. முகப்புரை

உலகத்திலுள்ள அனைத்து வகையான ஆய்வுகளும் 'பண்பாடு' என்ற அடித்தளத்திலிருந்து சுட்டப் பெற்றவையாகும்.[1] சமுதாய மானிடவியல் ஆய்வில் அடித்தளமாக அமையக்கூடிய பண்பாட்டு ஆய்வு மனித சமுதாயத்தில் மிக இன்றியமையாத கூறுகளை உள்ளடக்கியதாகும். இவ்வியலில் களப்பகுதிப் பாடல்களில் காணப்படும் பண்பாடு தொடர்பான செய்திகள் ஆராயப்பெற்றுள்ளன.

## 4.2. பண்பாடு

பண்பாடு என்பதற்கு 300க்கும் மேற்பட்ட வரையறைகள் காணப்படுகின்றன.[2] மனித சமுதாயத்தின் உறுப்பினர் என்ற நிலையில் அடைந்துள்ள அறிவு, நம்பிக்கை, கலை, ஒழுக்கக் கோட்பாடுகள், சட்டம், பழக்கவழக்கம், ஏனைய ஆற்றல்கள் ஆகியவற்றைத் தன்னுள் அடக்கியுள்ள சிக்கலான முழுமையே பண்பாடு ஆகும்.[3] இந்தப் பண்பாட்டைப் பண்பாட்டு மானிடவியலார் (Cultural Anthropologist), பொருள்சார் பண்பாடு (Material Culture), பொருள்சாராப் பண்பாடு (Non-Material Culture) என இரண்டாகப் பிரித்து நோக்குவர். இந்தப் பிரிப்புகளின் அடிப்படையில் களப்பகுதிப் பாடல்களை அணுகலாம்.

### 4.2.1. பொருள்சார் பண்பாடு

மனிதனின் தேவைகளுக்கான உற்பத்தி செய்து கொள்ளப்படும் அல்லது உருவாக்கிக் கொள்ளப்படும் பொருள்கள் பொருள்சார் பண்பாட்டில் அடங்குகின்றன. கண்ணுக்குத் தெரியக் கூடிய பொருள்களை மானிடவியலார் கலை வடிவங்கள் (Artifacts) என்று கூறுகின்றனர்.[4] பாடல்களில் உணவுகள், உறைவிடங்கள், மனைக்களப் பொருட்கள், தொழிற்களப் பொருட்கள், வாகனங்கள் போன்ற பொருள்சார் பண்பாடு தொடர்பான செய்திகள் காணப்படுகின்றன. அவை தொடர்பாகத் தொடர்ந்து காணலாம்.

#### 4.2.1.1. உணவுகள்

மனிதன் செய்த முதல் தொழில் உணவு தேடுதலேயாகும். ஆராய்ச்சியாளர்கள் கருத்துப்படி 10,000 ஆண்டுகளுக்குமுன் வேட்டையாடி உணவு சேகரிக்கவும், கி.மு. 8000 ஆண்டுகளுக்குமுன் உணவுப்பயிர் வளர்க்கவும் மனிதன் கற்றுக்கொண்டதாகத்

தெரிகிறது.[5] ஒரு நாட்டு மக்களின் உணவு வாழும் நிலத்தின் அமைவிடம், தட்பவெப்ப நிலை, அங்கு நிலவும் புறச்சூழ்நிலை ஆகியவற்றைப் பொறுத்து அமைகின்றது. பாடல் ஒன்றில் வறுமைக்கிடையில் வாழும் மக்களின் உணவாகிய 'கூழு'ம்[6] சோறாக்கப் பயன்படும் வரகரசியும்[7] குறிப்பிடப்படுகின்றன. மற்றொரு பாடலில் மீனை உணவாக உண்பது சுட்டப்படுகின்றது.[8] வறுமைக்கிடையில் வாழும் மீனவர்களின் உணவுகளாக இன்றும் மேற்கண்டவையே உள்ள நிலையைக் களப்பகுதியில் காண முடிகிறது. பழந்தமிழர் வறுமை காரணமாகப் பல்வேறு இடங்களில் சென்று உணவு சேகரித்த நிலைகளை ஆற்றுப்படை இலக்கியங்களில் காணலாம்.

### 4.2.1.2. உறைவிடங்கள்

தொடக்கக்கால மனிதன் குகைகளிலும், மரப்பொந்துகளிலும் வாழ்ந்தான். நாடோடியாக வாழ்ந்தவன் வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டபோதே நிலையாக ஓரிடத்தில் தங்கி வாழ முற்பட்டான். இதுவே மனிதன் இருப்பிடம் அமைத்துக் கொள்ளக் காரணமாக அமைந்தது.[9] இன்று பொருளாதார நிலையைப் பொறுத்து வீடுகளின் அமைப்பு முறையும் மாறுபட்டு அமைவதைப் பார்க்க முடிகின்றது. பாடல்களில் மண்டபம்[10] மெத்தை வீடு[11] ஆகியவை பற்றிய செய்திகள் காணப்படுகின்றன. மண்டபம் என்பது ஒரே அறை அமைப்புடனும், பக்கவாட்டில் திறந்தவெளி அமைப்புடனும் கட்டப்படுவதாகும். இது பெரும்பாலும் கோயில்களில் காணலாம். நான்கு பக்கச் செங்கல் சுவரின் மேல்பகுதி கல்லினால் ஒட்டப் படுமாயின் அது மெத்தைவீடு என்று சுட்டப்படுகின்றது.

### 4.2.1.3. மனைக்களப் பொருட்கள்

வீட்டில் அன்றாடம் பயன்படுத்தும் பொருட்களை மனைக் களப் பொருட்கள் எனலாம். பாடல்களில் குண்டாஞ்சட்டி, ஊசி ஆகிய பொருட்களைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. குண்டாஞ்சட்டி[12] கூழ் கரைத்துக் குடிப்பதற்குப் பயன்படுத்தும் பொருளாகவும், ஊசி[13] துணிகளை இணைப்பதற்கு (தைப்பதற்குப் பயன்படுத்தும் பொருளாகவும்) பாடல்களில் இடம்பெற்றுள்ளன. மீன்பிடி வலையிலுள்ள கிழியல்களை (ஓட்டைகளை)த் தைப்பதற்கு விளக்குமாற்றுக் குச்சியைப் பயன்படுத்துவதைக் களத்தில் நேரடியாக ஆய்வாளரால் பார்க்க முடிந்தது.[14]

### 4.2.1.4. தொழிற்களப் பொருட்கள்

மனிதனின் புற வாழ்க்கைக்குப் பயன்படும் பொருட்களைத் தொழிற்களப் பொருட்கள் எனலாம். பாடல்களில் மீனவர்கள் தொழில் செய்வதற்குப் பயன்படும் பொருட்களாகிய தெப்பை,[15]

தண்டுமரம்,[16] தூண்டி,[17] கச்சா,[18] துடுப்பு[19] ஆகியவை கடலில் மீன் பிடிக்கச் செல்லப்பயன்படுத்தும் பொருட்களாகும். தூண்டி என்பது மீன்பிடிக்கப் பயன்படுத்தப்படும் இரும்பினாலான சுருளாகும். கச்சா என்பது மீன்பிடிக்கப் பயன்படும் வலைப்பின்னல் கருவியாகும். துடுப்பு என்பது கட்டுமரத்தைக் கடலில் கொண்டு செல்வதற்காக நீரைப் பின்னுக்குத் தள்ளும் பட்டையான அமைப்பைக் கொண்டது. இவை அன்றாட மீனவர் வாழ்க்கையில் தொழில் கருவிகளாக இடம்பெறுகின்றன.

போர்த் தொழிற்கருவிகளான வில், ஈட்டி ஆகியவையும் பாடல்களில் குறிப்பிடப்படுகின்றன. வில்[20] என்பது அம்பு எய்துவதற்குப் பயன்படுவதாகவும், ஈட்டி[21] என்பது நேரடியாக ஒரு பொருளை வீழ்த்துவதற்குப் பயன்படுத்தப்படும் கருவியாகவும் இருந்து வருகின்றன. விஞ்ஞான முன்னேற்றத்தால் வில், ஈட்டி ஆகியவற்றின் பயன்பாடு பெரும்பகுதி இன்று இல்லை என்றே கூறலாம்.

### 4.2.1.5. வாகனங்கள்

மனிதன் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குச் செல்லத் தயாரித்துக் கொள்ளப்பட்டவையாக வாகனங்கள் அமைகின்றன. கடலில் செல்ல வாகனங்கள் கண்டுபிடிக்கப்பட்டுப் பிறகு நிலத்தில் செல்ல வாகனங்கள் கண்டுபிடிக்கப்பட்டு இருக்கலாம். இந்த வாகனங்களை நீர்வழி வாகனங்கள், நிலவழி வாகனங்கள் எனப் பிரிக்கலாம். பாடல்களில் கடலில் செல்லும் வாகனமாகிய கப்பலும்,[22] நிலத்தில் செல்லும் வாகனமாகிய இரதமும்[23] இடம் பெற்றுள்ளன. கப்பலில் வெள்ளாளத்துரை வருவார் என்ற குறிப்புக் கொண்டு மேலை நாட்டினர் வந்தபின் இங்கு அறிமுகமானதாகக் கப்பல் இருந்துள்ளது தெரியலாம். இரதம் பாடல்களில் சுக்காரதம்,[24] தங்கரதம்[25] என்று குறிக்கப்படுவதால் இந்த வாகனம் உயர்நிலையில் உள்ளவர்களால் பயன்படுத்தப்படும் ஒன்றென்பதை அறியலாம்.

### 4.2.2. பொருள்சாராப் பண்பாடு

மனிதனின் கண்ணுக்குத் தெரியாத பொருள் வடிவம் பெறாத அனைத்துக் கூறுகளும் பொருள்சாராப் பண்பாட்டில் அடங்குகின்றன. இந்தப் பிரிவில் பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள், நடிப்பு, பாடல்கள், மந்திரங்கள், வழிபாடுகள் போன்றவை வருகின்றன. இவை மனத்தளவில் மட்டும் புரிந்துகொள்ளக் கூடியவையாக இருப்பதால் இவற்றை மானிடவியலார் மண வடிவங்கள் (Mentifacts) என்று கூறுவர்.[26] பாடல்களில் பொருள் சாராப் பண்பாட்டுக் கூறுகளாக வழிபாடுகள், நம்பிக்கைகள் போன்றவை காணப்படுகின்றன. அவை தொடர்பாகக் காணலாம்.

#### 4.2.2.1. வழிபாடுகள்

இயற்கையிடத்தும் மரணத்தைப் பற்றியும் மனிதன் கொண்ட அச்சமே வழிபாட்டிற்கு அடிப்படைக் காரணம் என்று கூறப்படுகின்றது.[27] இந்த வழிபாடுகளை இயற்கை வழிபாடு, ஆவியுலக வழிபாடு (Animism), குலக்குறி வழிபாடு (Totemism), புனிதப் போலிப் பொருள் வழிபாடு (Fetishim), முன்னோர் வழிபாடு (Ancestor worship), சிறுதெய்வ வழிபாடு, பெருந்தெய்வ வழிபாடு என்று பிரித்து ஆராயும் போக்குகள் காணப்படுகின்றன. மீனவர் பாடல்களில் செங்கழலி என்ற சிறு தெய்வத்தைப் பற்றியும் முருகன், விநாயகர் ஆகிய பெருந்தெய்வங்களைப் பற்றியும் செய்திகள் காணப்படுகின்றன. அவை குறித்துக் காணலாம்.

#### 4.2.2.1.1. சிறுதெய்வங்கள்

சிறு பாரம்பரிய மரபைச் சார்ந்து (Little Tradition) சிறு தெய்வங்கள் பெரும்பாலும் நாட்டுப்புற வட்டாரத் தெய்வங்களாக உள்ளவை, பெரும்பாலும் வேதக்கடவுளோடு தொடர்பில்லாதவை, முழு முதல் கடவுளாகக் கருதி வணங்கப் பெறாதவை, பூசை, திருவிழா முதலியவற்றில் திட்டவட்டமான வரையறை கிடையாது, பிராமணர் அல்லாதோர் பூசாரியாக இருப்பர், பெரும்பாலும் கோயில் போன்ற அமைப்புக் கிடையாது, செவிவழிச் செய்திகளும் கர்ண பரம்பரைக் கதைகளும் உண்டு.[28] சிறு தெய்வங்களும் பெரும்பாலும் பெண் தெய்வங்களாகக் காணப்படுகின்றன. அம்மன் கோயில் வழிபாடு பெருந்தெய்வ வழிபாட்டை நோக்கிச் சென்று கொண்டிருப்பதாகக் கருதப்படுகின்றது. பாடல் ஒன்றில் சுட்டப் படும் செங்கழலி அம்மன் சிறு தெய்வமாக மக்களால் வணங்கப் படுவதாகும். அதுபற்றிக் காணலாம்.

#### 4.2.2.1.1.1. செங்கழனி அம்மன்

புதுச்சேரிப் பகுதியில் அம்மன் கோயில்கள் மிகுந்து காணப் படுகின்றன. இதற்கு ஒரு காலத்தில் இப்பகுதி அம்மை நோயின் கடுமையான பாதிப்பிற்குள்ளானதே காரணமென்று கூறப்படுகின்றது.[29] சில அம்மன் கோயில்களில், பிராமணர் பூசாரியாக இருப்பதையும், உயிர்ப் பலியற்ற நிலையையும் காணமுடிகிறது. செங்கழலி அம்மன் கோயில் தகவலாளிகள் பாடிய வீரராமபட்டினத்தில் உள்ள தெய்வமாகும். எல்லாக் காலங்களிலும் பூசை நடைபெறும். இக்கோயிலில் ஆண்டுக்கு ஒருமுறை பங்குனி மாதத்தில் பெருவிழாவும் நடைபெறுகின்றது. பாடல் ஒன்றில் மீனவர்கள் அம்மனை (செங்கழலி) 'எங்கள் குலச் செங்கழனி'[30] என்றும் தென்னம்புள்ளத் தூண்டியிலிருந்து எங்களுக்குத் துணை செய்பவள் என்றும்[31] கூறுகின்றனர். மீனவர்களுக்குக் குல

தெய்வமாக உள்ள செங்கழனி அம்மன் மற்றவர்களும் வழிபடும் தெய்வமாக இருந்து வருகின்றாள். களத்தில் செங்கழனி அம்மனுக்குச் சிறப்பான கோயில், உருவ அமைப்பு, சிறப்பான விழா போன்றவை நடைபெறுவதால் இதை இடைநிலைத் தெய்வமாகக் கருதலாம். பாடல் வரிகள் 'வேதாந்த நாயகியே'[32], 'வேதாந்த செங்கழனி'[33] என்று குறிப்பிடுவது இங்குச் சுட்டத்தக்கதாகும்.

### 4.2.2.1.2. பெருந்தெய்வங்கள்

பெரும் பாரம்பரிய மரபைச் (great tradition) சார்ந்த பெருந்தெய்வங்கள் வேதக் கடவுளோடு தொடர்பு, ஆகம விதிப்படி கோயில் பூசை, பிராமணரே பூசாரியாக இருப்பது, திட்டமிட்ட விழாக்கள், உயிர்ப்பலியற்ற நிலை, மன்னர், அரசர், அரசு ஆதரவு பெற்றிருத்தல், தலபுராணங்கள் உடையவையாக இருத்தல், எல்லாத் தரப்பு மக்களும் வழிபடும் நிலை, வலுவான கோயிலமைப்பு, உருவச் சிலைக்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுத்தல் போன்ற தன்மைகளைக் கொண்டவையாகும்.[34] பாடல்களில் முருகன், விநாயகர், ஆகிய பெருந்தெய்வங்களைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. அவற்றைத் தனித்தனியாகக் காணலாம்.

#### 4.2.2.1.2.1. விநாயகர்

தமிழகத்தில் விநாயகர் வழிபாடு பல்லவர் காலத்திலிருந்து இருந்து வருவதாகக் கூறப்படுகின்றது.[35] பொதுவாக ஒரு செயலைத் தொடங்கும்போது விநாயகர்க்கு வணக்கம் சொல்லும் மரபு இன்றும் படித்த, படிக்காத மக்களிடம் காணப்படுவதாகும். பிற்காலத்தில் தோன்றிய விநாயகர் நான்மணிமாலை போன்ற நூல்கள் விநாயகரின் முழுப் பெருமையையும் விளக்கி நிற்கின்றன. விநாயகரைப் பற்றிச் செவிவழிச் செய்திகள் இன்றும் மக்களிடம் வழக்கிலுள்ள நிலையைக் கிராமப்புறங்களில் காணலாம்.[36] பாடல்களில் விநாயகர், கணபதி பிள்ளையார்[38] ஆகிய பெயர் களிலும் சுட்டப்படுகின்றார். மீனவர் பாடல்கள் சில விநாயகர் துதியுடன் தொடங்குவதைப் பார்க்க முடிகிறது.[39] விநாயகர் முக்கண்ணனாகிய சிவனுக்கு மகன்[40] என்பதும், அவன் வேலனாகிய கந்தனுக்கு முன்பிறந்தவன்[41] என்பதும் பாடல் செய்திகளாகி யுள்ளன. மேல்நிலை மக்கள் தாக்கத்தால் விநாயகரைப் பற்றிய சிந்தனை மீனவர்களிடம் ஏற்பட்டிருக்கலாம்.

#### 4.2.2.1.2.2. முருகன்

தொல்காப்பியத்தில் இடம்பெறும் 'சேயோன் மேய மைவரை உலகமும்' என்ற தொடர் முருகனைக் குறித்து வழங்கக் கூடியதாகக் கருதப்படுகின்றது.[42] முருகனைப் பற்றிப் பரிபாடலும் திருமுருகாற்றுப்படையும் விரிவாகப் பேசுகின்றன. கந்தபுராணம்

முருகனின் பெருமைகளை விரிவாக எடுத்துப் பேசும். முருகன் தெய்வானையை மணந்து அவன் பெருந்தெய்வமாக வழிபடும் சிறப்புகளை மேல்தட்டு மக்களும் முருகன் அடித்தள மக்களாகிய குற இனத்தைச் சேர்ந்த வள்ளியைக் காதலித்துத் திருமணம் செய்து கொண்டவன் என்ற அடிப்படையில் முருகனைச் சாதாரண மக்களும் தெரிந்து வைத்துள்ளனர். களப்பகுதிப் பாடல்களில் முருகனைப் பற்றிய செய்திகள் மிகுந்து காணப்படுகின்றன. மீனவர்கள் தாங்கள் பாடும் பாடலில் இடம்பெறும் இயல்பாக இசைக் குறிப்புச் சொற்களான ஏலேலே, ஐலசா போன்ற சொற்களை விடுத்து 'வேல்வேல் வேல் முருகா'[43] என்ற வரியைப் பயன்படுத்துவதிலிருந்து முருக வழிபாடு மக்களிடம் பெற்றுள்ள செல்வாக்கை அறியலாம்.

ஒரு பாடல் முருகனை யாருக்கும் அடங்காதவன்[44] என்றும் கொல்லிமலை ஆண்டவன்[45] என்றும் குறிப்பிடுவதையும் பார்க்க முடிகிறது. முருகனுக்குக் கச்சை கட்டி வேல் எடுத்து வழிபாடு செய்யும் வழக்கம் இன்றும் களப்பகுதியில் இருந்து வரக்கூடிய ஒன்றாகும்.

### 4.2.2.2. நம்பிக்கைகள்

ஒரு சமூகம் தனது சொந்தக் குலத்தை இழக்கும்போது அல்லது மாற்றும்போது அதற்கு முன்பு இருந்த நடைமுறைகள் நம்பிக்கைகளாக எஞ்சுகின்றன.[46] இவை காரண காரியத் தொடர்புக்கு உட்பட்டுச் சான்றுகளின் வாயிலாக நிறுவ முடிவதை நம்பிக்கை (Belief) என்றும், சான்றுகளின் அடிப்படையிலோ, காரண காரியத் தொடர்பின் வாயிலாகவோ விளக்க முடியாதவற்றை மூடநம்பிக்கை (Superstition) என்றும் வகைப்படுத்துவர்.[47] பாடல் களில் கனவு, குறிகேட்டல் ஆகிய நம்பிக்கைகள் தொடர்பான செய்திகள் காணப்படுகின்றன.

### 4.2.2.2.1. கனவு

அடக்கி வைக்கப்பட்ட நிறைவேறாத ஆசையே கனவாக வெளிப்படுகிறது என உளவியல் அறிஞர் சிக்மண்டு பிராய்டு கூறுகின்றார்.[48] இந்தக் கனவை நல்ல கனவு, கெட்ட கனவு என வகைப்படுத்துவர். பொதுவாகத் தமக்குப் பின்னால் நடப்பதை முன்கூட்டி அறிவிப்பது கனவு என்ற நம்பிக்கை மக்களிடம் வேரூன்றியுள்ளது. கனவுகள் சிலருக்கு உள்ளபடியும், சிலருக்கு எதிர்மறையாகவும் அமையலாம். பாடல் ஒன்றில் காதலன் காதலியை அடைய நினைக்கும்போது முற்றத்திலுள்ள முருங்கை மரம் முறிந்து விடவும்,[49] அத்தை வீட்டு வாழைமரம் அறுந்து விழவும்[50] கனவு காண்பதாகச் செய்திகள் காணப்படுகின்றன.

காதலன், காதலி கிடைக்காமல் போய் விடுவதாகக் களப்பகுதியிலுள்ள ஒரு பாடலின் பின்பகுதி அமைவதால் இது உள்ளது உள்ளபடி நடக்கும் தீய கனவாக அமைகின்றது எனலாம்.

### 4.2.2.2.2. குறிகேட்டல்

சோதிடம், பஞ்சாங்கம் பார்ப்பதுபோலக் குறிகேட்டலும் மக்களிடம் காணப்படும் நம்பிக்கையாகும். பண்டைக்காலத்தில் வழக்கிலிருந்த கழங்கு பார்த்தல், கட்டுப்பார்த்தல் முதலியனவும், மதலைமாக்கோல், கன்னம் முதலிய கருவிகள் மூலம் அறியப்பெறும் செய்திகளும் குறிகேட்டலுக்கு இணையானவையாகும்.[51] குறவஞ்சிப் பாடல்களில் இறந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் என்னும் மூன்று காலத்தும் நிகழ்வதனை அறிந்து குறத்தி குறிசொல்வது காணப்படுகின்றது. பாடல்களில் குறத்தி, 'பால்குறத்தி',[52] 'கானக்கொறத்தி',[53] 'சீனக்கொறத்தி'[54] என்று விளக்கப்படுகிறாள். தங்கமலையிலிருந்து வந்த குறத்தி கைபார்த்துக் குறிகள் சொல்லக்கூடியவள் என்ற குறிப்பைப் பாடல் ஒன்றில் பார்க்கமுடிகிறது.[55]

### 4.2.2.3. மாதங்கள்

ஆங்கிலத்தில் 12 மாதங்கள் இருப்பதுபோலத் தமிழிலும் ஓர் ஆண்டை 12 மாதங்களாகப் பகுக்கும் முறை உள்ளது. சித்திரை தொடங்கிப் பங்குனி முடிய இந்த மாதங்கள் கணக்கிடப்படுகின்றன. பங்குனி நட்சத்திரத்தில் மணம் நடந்ததை அகநானூற்றுப் பாடல் ஒன்று தெரிவிக்கின்றது.[56] மீனவர் பாடல்களில் கார்த்திகை, பங்குனி, சித்திரை, மாதங்களைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. கார்த்திகை மாதத்தில் பழனி மலையில் முருகனுக்கு விசேச பூசை உண்டு[57] என்றும், பங்குனி மாதம் பறியாது[58] ஆகையால் சித்திரை மாதம் கலியாணம் வைத்துக் கொள்ளலாமென்றும்[59] செய்திகள் காணப்படுகின்றன. சித்திரைக் கலியாணம் சீரழிந்து போகுமென்பதால் பெரும்பாலும் தமிழர்கள் இந்த மாதத்தில் மணம் செய்து கொள்ளுவதில்லை.

### 4.2.2.4. எண்ணிக்கைகள்

தொல்காப்பியத்தில் அடிவரையுறையுள்ள பா வகைகள் இடம்பெறுவது எண்ணிக்கை பற்றிய குறிப்பாக அமைகிறது. பதிற்றுப்பத்து, ஐங்குறுநூறு, புறநானூறு, அகநானூறு போன்ற இலக்கியங்கள் பாடல்களின் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு தொகுக்கப்பட்டதாகும். பாடல்களில் அறுபதடி (60)[60] நூறடி (100)[61], இல்குரடி (200)[62], மொள்குரடி (300)[63], நானூறடி (400)[64], எண்ணூறடி (600)[65] போன்ற அடிவரையறையான குறிப்புகள் காணப்படுகின்றன. இவையனைத்தும் மீன்பிடிக்கச்

செல்லும் மீனவர்கள் கடல் மட்டத்திலிருந்து எவ்வளவு ஆழத்திற்கு மேலே கட்டுமரம் நிற்கிறது என்பதைக் கூறும்போது சுட்டப்படும் எண்ணிக்கைகளாக உள்ளன.

வயதைக் குறிப்பிடும்போது நானூறு வயது[66] என்றும், நாளைக் குறிப்பிடும்போது 'முந்நூறு[67] நாள்' என்று எண்ணிக்கைகள் கூறப்படுகின்றன. பாடகர்கள் வாழ்க்கைக் கஷ்டங்களைக் குறிப்பிடும்போது 'கோடி' என்ற எண்ணிக்கையைக் குறிப்பிடுகின்றனர். பாடல் வரிகள் வருமாறு:

'பட்ட கடன் ஒரு கோடி'[68]

'பாடுபட்டது முக்கோடி'[69]

### 4.3. திரண்ட கருத்துகள்

இதுகாறும் கூறியவற்றிலிருந்து பின்வரும் கருத்துகளைத் தொகுக்கலாம்.

4.3.1. பண்பாடு என்பதற்குப் பல்வேறு விளக்கங்கள் கூறப்பட்டாலும் இ.பி. டெய்லர் கூறும் விளக்கம் பண்பாடு என்பதைப் புதிய பரிணாமத்துடன் வரையறை செய்வதாக உள்ளது. பண்பாட்டு வளர்ச்சி என்பது மனிதனின் அறிவு வளர்ச்சியைப் பொறுத்தே அமைகிறதெனலாம்.

4.3.2. பண்பாட்டு மானிடவியலார் பண்பாடு என்பதைப் பொருள்சார் பண்பாடு, பொருள்சாராப் பண்பாடு எனப் பிரிப்பது, மனிதனின் அறிவு பொருள்வடிவம் பெறுவதையும், பொருள்வடிவம் பெறாது மனவடிவத்துடன் அமைவதையும் அடிப்படையாகக் கொண்டதாகக் கருதலாம்.

4.3.3. மனிதனின் முதல்தொழில் உணவு தேடுதலாகவே இருந்துள்ளது. இன்றைய சமுதாயத்தில் காணப்படும் உணவு முறைகளுக்குப் பல காரணங்கள் கூறப்படுவதாலும் பொருளாதாரமே அடிப்படைக் காரணமாக அமைகிறது.

4.3.4. மனிதன் பாதுகாப்பிற்காக உருவாக்கிக் கொண்டதே உறைவிடங்களாகும். இவை பொருளாதார நிலையைப் பொறுத்து இன்று குடிசை, மாடிவீடு, மெத்தை வீடு போன்ற வடிவங்களைப் பெறுகின்றன.

4.3.5. களப்பகுதிப் பாடல்களில் மீன்பிடித் தொழிலுக்குரிய தூண்டில், வலை, கட்டுமரம் போன்ற கருவிகள் பற்றிய செய்திகள் காணப்படுகின்றன. இந்தக் கருவிகளிலும் சில மாற்றங்கள் இருப்பதைக் களப்பகுதியில் காணமுடிகிறது.

**4.3.6.** அன்றாட வாழ்க்கைக்குப் பயன்படும் பொருட்களாக மனைக் களப் பொருட்கள் உள்ளன. இவையும் பொருளாதார நிலையைப் பொறுத்து மாற்றங்களுடன் காணப்படுவதை இன்றைய வீடுகளில் காணலாம்.

**4.3.7.** நீர்வழி வாகனங்களில் கட்டுமரம், தோணி போன்றவற்றில் தொழில்நுட்ப, வளர்ந்த, வடிவமே கப்பல் என்பதாகும். நிலவழி வாகனங்களில் இரதம் உயர்வகுப்பார் பயன்படுத்தும் வாகனமாகக் கருதலாம்.

**4.3.8.** பொருள்சாராப் பண்பாடு என்பதில் மனிதன் மனத்தளவில் உணரும் பழக்கவழக்கங்கள் சிறப்பிடம் பெறுகின்றன. தெய்வங்களின் வடிவம் கண்ணுக்குத் தெரியக்கூடியதாக இருந்தாலும் அவற்றை வழிபடும் முறை மனத்தை வைத்தே அமைகின்றது. உருவம் என்பது காலத்தால் பிந்திய ஒன்றாக உள்ளது இங்குக் குறிக்கத்தக்கதாகும்.

**4.3.9.** செங்கழலியம்மன் என்பது களப்பகுதியில் மிகவும் முக்கியத் துவம் வாய்ந்த சிறுதெய்வமாக இருந்து இன்று பெருந் தெய்வ நிலையை நோக்கிச் சென்றுகொண்டிருக்கும் தெய்வமாக உள்ளது எனலாம்.

**4.3.10.** விநாயகர், முருகன் ஆகிய பெருந்தெய்வங்கள் எல்லாத் தரப்பு மக்களிடமும் அறிமுகமான தெய்வங்களாக உள்ளன. இதில் விநாயகரை விட முருகனைப் பற்றிய செய்திகள் மக்களிடம் மிகுந்த செல்வாக்குப் பெற்றுள்ளன எனலாம். இதற்கு வள்ளி-முருகன் ஆகியோரின் காதல் மணமே காரணமாகும்.

**4.3.11.** நம்பிக்கைகள் ஒரு சமுதாயத்தின் உண்மைகளாக இருந்துள்ளன. இன்று அவற்றில் சில மாற்றங்கள் ஏற்பட்டு மூடநம்பிக்கை எனப் பார்க்கும் போக்கு சமுதாயத்தில் காணப்படுகின்றது. எவ்வளவு அறிவியல் முன்னேற்றம் ஏற்பட்டாலும் நம்பிக்கைகள் மக்களிடம் மிகுந்த செல்வாக்குப் பெற்றே விளங்குகின்றன எனலாம்.

**4.3.12.** மாதங்கள் நகருதல் என்பது மனிதனின் வாழ்க்கையை நகர்த்துவதாக அமைகின்றது. ஒவ்வொரு மாதங்களைப் பற்றியும் மக்களிடம் பலவகையான செய்திகள் உள்ளன.

**4.3.13.** எண்ணிக்கை பற்றிய அறிவு பழங்காலம் முதல் தமிழர்களிடம் இருந்து வரக்கூடிய ஒன்றாகும். களப்பகுதிப் பாடல்களில் இடம்பெறும் எண்ணிக்கை என்பது தொழிலுடனும் வாழ்வுடனும் தொடர்புடையதாகக் காணப்படுகின்றது.

## குறிப்புகள்

1. Morugn, S. Cartarino, **Socio-Cultural Theory in Anthropology**, p. 49.
2. சீ. பக்தவத்சல பாரதி, **பண்பாட்டு மானிடவியல்**, ப. 250.
3. E.B. Tylor, **Primitive Culture,** Vol. II., p. 1.
4. சீ. பக்தவத்சல பாரதி, **பண்பாட்டு மானிடவியல்**, ப. 176.
5. **வாழ்வியற்களஞ்சியம்**, தொகுதி - 4, ப. 822.
6. 4: 46-51.
7. 4: 44-45.
8. 6: 70.
9. க.ப. அறவாணன், **மரவழிபாடு – திராவிட ஆப்பிரிக்க ஒப்பீடு**, பக். 19-21.
10. 9: 75-77.
11. 8: 127.
12. 4: 53.
13. 1: 31.
14. பெரிய காலாப்பட்டில் ஆய்வாளர் செய்தி சேகரிக்கச் சென்ற போது 10 பேருக்குக் குறையாத மீனவர்கள் ஒரு பெரிய வலையை பல்வேறு இடங்களில் விளக்குமாற்றுக் (துடைப்பக்கட்டை) குச்சியை நூலில் சுற்றித் தைத்துக் கொண்டிருந்ததைப் பார்க்க முடிந்தது.
15. 8: 115.
16. 8: 145.
17. 5: 85.
18. 8: 97.
19. 2: 63.
20. 10: 52.
21. 10: 55-60.
22. 6: 110-115.
23. 8: 157.
24. 8: 161.

25. 8: 163.

26. சீ. பக்தவத்சல பாரதி, **பண்பாட்டு மானிடவியல்**, ப. 176.

27. சு. சக்திவேல், **நாட்டுப்புற இயல் ஆய்வு**, ப. 51.

28. மேற்படி, 212.

29. நேர்காணல்: **நாகபூசணம்**, முருகம்பாக்கம், 10.5.95.

30. 5: 91.

31. 5: 85-87.

32. 5: 105.

33. 5: 103.

34. சு. சக்திவேல், **நாட்டுப்புற இயல் ஆய்வு**, ப. 213.

35. **வாழ்வியற்களஞ்சியம்**, தொகுதி - 4, ப. 215.

36. விநாயகருக்குப் பெண் பார்த்தபோது அவர் அம்மா பார்வதியைப் போல அழகான பெண் வேண்டும் எனக் கூறிய காரணத்தால் அவர் குளத்துக்குச் செல்லும் வழிக்கரையிலேயே இருப்பதாகத் தமிழகக் கிராமங்களில் கதை ஒன்று நிலவுகிறது.
- ஆய்வாளர்

37. 4: 1, 11.

38. 4: 19.

39. பா. 4, 5.

40. 4: 5.

41. 4: 7.

42. தொல்.பொருள். 2.

43. பா. 5.

44. 5: 61.

45. 5: 77.

46. தமிழவன், **தமிழர் நம்பிக்கைகள்**, ப. 6.

47. சு. சக்திவேல், **நாட்டுப்புற இயல் ஆய்வு**, ப. 153.

48. **வாழ்வியற்களஞ்சியம்**, தொகுதி - 4, ப. 967.

49. 10: 81-84.

50. 10: 85-87.

51. ந. செல்வராசு, குறிகேட்டல், நாட்டுப்புறவியல் ஆய்வுக் கோவை, தொகுதி - 2, ப. 783.

52. 9: 9.

53. 10: 1.

54. 10: 4.

55. 10: 3.

56. அகம். 82.

57. 9: 205.

58. 9: 200-211.

59. 9: 213-220.

60. 7: 1.

61. 2: 57.

62. 2: 35.

63. மேற்படி.

64. மேற்படி.

65. 2: 39.

66. 1: 52.

67. 3: 126, 128.

68. 3.

69. 3.

# 5. ஆய்வு முடிவுரை

## 5.1. முகப்புரை

இந்த ஆய்வில் முகப்புரை, முடிவுரை நீங்கலாக ஏனைய இயல்களில் மீனவர் பாடல்களில் காணப்படும் சமுதாயம் மற்றும் பண்பாடு தொடர்பான செய்திகள் ஆராயப்பெற்றன. அவற்றிலிருந்து பெறப்பட்ட பொது முடிவுகளைக் கீழே தொகுத்துக் காணலாம்.

5.1.1. நாட்டுப்புறப் பாடல்களின் தோற்றம் என்பது தொழில் களங்களாகவே இருக்க வாய்ப்புள்ளது. ஏனெனில் தொழிலில் ஏற்படும் கடினத்திலிருந்து விடுபடவே பாட்டுகள் தோன்ற வாய்ப்புள்ளது. மீனவர் பாடல்கள் மீன்பிடித் தொழிலின் தொடக்கத்திலிருந்தே பாடப்படுகின்றன. இரண்டோ, இரண்டிற்கு மேற்பட்ட குழுவினரோ மீன்பிடித் தொழிலில் ஈடுபடுதல் என்பது பாதுகாப்புக் கருதியே ஆகும். அதனாலேயே பாடல்களும் குழுப் பாடல்களாக உள்ளன. இசைக்குறிப்புப் பாடல்கள் மிகுந்துள்ளதென்பது துடுப்புப் போடும்போது ஏற்படும் கடுமையிலிருந்து விடுபடுவதற்கே யாகும்.

5.1.2. மீனவர் சமுதாயம் மிகத் தொன்மையான சமுதாயமாகும். இவர்களின் வாழ்க்கை மற்றவர்களின் சராசரி வாழ்விலிருந்து மாறுபட்டுத் தொழில் ஒன்றையே நம்பி அமைந்துள்ளது என்பதைக் களப்பகுதிப் பாடல்களும் நடைமுறை வாழ்வும் தெளிவுபடுத்துகின்றன.

5.1.3. சமுதாயத்தில் நிலவும் குடும்பம், மணம், சாதி, நிர்வாகம் போன்றவை பல முரண்பாடுகளுக்கு இடையில் இடையறாது இயங்கி வருகின்றன. பாடல்களில் காணப்படும் இவை முரண்பட்ட அம்சங்களையே கொண்டுள்ளன. இந்தியா விற்கு ஒரு சாபக்கேடாக அமையும் சாதி மனிதர்களைப் பிரித்து வைப்பதற்கு ஒரு காரணமாக அமைந்துவிட்ட தெனலாம். அதிகார நிலையில் மேல்நிலையுள்ள சாதி களுக்கும், வறுமையான வாழ்க்கை நடத்தும் சாதிகளுக்கும் இடையறாது ஒருவகைப் போராட்டங்கள் நிலவுவதைப் பாடல்களில் வெளிப்படும் வெள்ளாளன், வெள்ளந்துரை போன்ற வாசகங்கள் உணர்த்துகின்றன எனலாம்.

**5.1.4.** பண்பாடு என்பது காலந்தோறும் பல வளர்ச்சி நிலைகளைப் பெற்று வந்துள்ளது. இந்த வளர்ச்சி நிலைகளுக்கு மனிதனின் அறிவு காலந்தோறும் பல மாற்றங்களைப் பெற்று வருவதே காரணமாகக் கருதலாம். பொருள்சார், பொருள்சாராப் பண்பாடு என்பது மனிதனின் அகப்புற வளர்ச்சியைப் பொறுத்து அமைகின்றது எனலாம்.

**5.1.5.** மீனவர் பாடல்களைப் பொதுவான நிலையில் ஆராய்ந்து இங்குச் சமுதாயம், பண்பாடு போன்ற செய்திகள் வெளிக்கொணரப்பட்டன. மீனவர்கள் பாடல்களை மொழியியல், உளவியல், மானிடவியல், அமைப்பியல் போன்ற பல நிலைகளில் ஆராய வாய்ப்புள்ளது எனலாம். இதைச் செய்யவேண்டியது சமூக நலன் நாடுவோர் கடனாகும்.

# பின்னிணைப்பு - 1

## களப்பகுதி வரைபடம்

பி.எ. 1 களப்பகுதி வரைபடம்



# பின்னிணைப்பு - 2

## புகைப்படங்கள்







# பின்னிணைப்பு - 3

## களப்பகுதி பாடல்கள்

### பாடல் - 1

நபர் 1 : சாந்து அரைக்கும்போது ஏலே லம்பா ஏலே
குழு : ஏலே லம்பா ஏலே
நபர் 1 : ஏலே லம்பா ஏலே
குழு : ஏலே லம்பா ஏலே
நபர் 1 : தன்னே நோக்கிப் பாத்தமாமா ஏலே லம்பா ஏலே
குழு : ஏலே லம்பா ஏலே

நபர் 2 : மொளக்கா அரைக்கும்போது ஏலே லம்பா ஏலே
குழு : ஏலே லம்பா ஏலே
நபர் 2 : ஏலே லம்பா ஏலே
குழு : ஏலே லம்பா ஏலே
நபர் 2 : முன்னே நின்னு பாத்தமாமா ஏலே லம்பா ஏலே
குழு : ஏலே லம்பா ஏலே

நபர் 1 : தலைய வகுரும்போது ஏலே லம்பா ஏலே
குழு : ஏலே லம்பா ஏலே
நபர் 1 : ஏலே லம்பா ஏலே
குழு : ஏலே லம்பா ஏலே
நபர் 1 : தன்னழகே பாத்தமாமா ஏலே லம்பா ஏலே
குழு : ஏலே லம்பா ஏலே

நபர் 2 : முடிய வகுரும்போது ஏலே லம்பா ஏலே
குழு : ஏலே லம்பா ஏலே
நபர் 2 : ஏலே லம்பா ஏலே
குழு : ஏலே லம்பா ஏலே
நபர் 2 : முன்னே நின்னு பாத்தமாமா ஏலே லம்பா ஏலே
குழு : ஏலே லம்பா ஏலே

நபர் 1 : தன்னானே சொல்லி வாரேன் ஏலே லம்பா ஏலே
குழு : ஏலே லம்பா ஏலே
நபர் 1 : ஏலே லம்பா ஏலே
குழு : ஏலே லம்பா ஏலே
நபர் 1 : ஏ வில்லாபுரம் ஓடையிலே ஏலே லம்பா ஏலே
குழு : ஏலே லம்பா ஏலே

நபர் 2 : மொான ஊசி தந்துண்டு ஏலே லம்பா ஏலே
குழு : ஏலே லம்பா ஏலே
நபர் 2 : ஏலே லம்பா ஏலே
குழு : ஏலே லம்பா ஏலே
நபர் 2 : மொனக்காமலே பட்டதுண்டு ஏலே லம்பா ஏலே
குழு : ஏலே லம்பா ஏலே

நபர் 1 : பட்டது ஒருகோடி ஏலே லம்பா ஏலே
குழு : ஏலே லம்பா ஏலே
நபர் 1 : ஏலே லம்பா ஏலே
குழு : ஏலே லம்பா ஏலே
நபர் 1 : பாடுபட்ட முக்கோடி ஏலே லம்பா ஏலே
குழு : ஏலே லம்பா ஏலே

நபர் 2 : வடக்கே ஒருகோடி ஏலே லம்பா ஏலே
குழு : ஏலே லம்பா ஏலே
நபர் 2 : ஏ வடக்கே ஒருகோடி ஏலே லம்பா ஏலே
குழு : ஏலே லம்பா ஏலே
நபர் 2 : வச்சிருந்த முக்கோடி ஏலே லம்பா ஏலே

நபர் 1 : முக்குலத்த கோலகட்ட ஏலே லம்பா ஏலே
குழு : ஏலே லம்பா ஏலே
நபர் 1 : ஏலே லம்பா ஏலே
குழு : ஏலே லம்பா ஏலே
நபர் 1 : முன்னூறுக நாளிருந்தே ஏலே லம்பா ஏலே
குழு : ஏலே லம்பா ஏலே

நபர் 2 : முன்னூறு பத்துசொன்னா ஏலே லம்பா ஏலே
குழு : ஏலே லம்பா ஏலே
நபர் 2 : முன்னூறு பத்துஞ்சொன்னா ஏலே லம்பா ஏலே
குழு : ஏலே லம்பா ஏலே
நபர் 2 : முதிர்ந்த கெழுவனானேன் ஏலே லம்பா ஏலே
குழு : ஏலே லம்பா ஏலே

நபர் 1 : நானூறு வயதுதந்தா ஏலே லம்பா ஏலே
குழு : ஏலே லம்பா ஏலே
நபர் 1 : ஏலே லம்பா ஏலே
குழு : ஏலே லம்பா ஏலே
நபர் 1 : நரச்ச கெழுவனானேன் ஏலே லம்பா ஏலே
குழு : ஏலே லம்பா ஏலே

நபர் 2 : நரச்சாலும் கெழவனடி ஏலே லம்பா ஏலே
குழு : ஏலே லம்பா ஏலே
நபர் 2 : ஏலே லம்பா ஏலே
குழு : ஏலே லம்பா ஏலே
நபர் 2 : நானுனக்கு காவலடி ஏலே லம்பா ஏலே
குழு : ஏலே லம்பா ஏலே

## தகவலாளிகள் விபரம்

| | |
|---|---|
| நபர் 1 | ஆர். சந்திரன் (54) |
| நபர் 2 | எம். விநாயகம் |
| குழு | கே. நாராயணசாமி (54) |
| | எம். மாரி (60) |
| | எம். ராமசாமி (36) |
| ஊர் | வீராமபட்டினம் - அரியாங்குப்பம் கொம்யூன் |
| நாள் | 15-05-2008 |
| நேரம் | மாலை 1.00 மணி முதல் தொடங்கிப் பாடினர் |
| கல்வி | எம். ராமசாமி மட்டும் எஸ்.எஸ்.எல்.சி. படித்தவர். மற்றவர்கள் எழுதப்படிக்கத் தெரிந்தவர்களும், தெரியாதவர்களும். |

குறிப்புகள்

- கடற்கரையில் குழுவாகக் கூடியிருந்தவர்களிடம் பாடச் சொல்லிக் கேட்டபோது பலரும் சிரித்துக் கொண்டு தயங்கினர். எம். ராமசாமி பலரையும் கேட்டுக் கொண்டதற்கிணங்கவும் ஆய்வாளர் வேண்டிக் கொண்டதற்கிணங்கவும் சிலர் பாடல்கள் பாட முன் வந்தனர்.
- ஆய்வாளர் பாடல் சேகரிப்பதற்கான காரணங்களையும் ஆய்வின் தன்மைகளையும் விளக்கிக் கூறியபின் மகிழ்ச்சியுடன் பாடத் தொடங்கினர்.
- மீனவர்களுக்குள் இடையே பல பிரச்சினைகள் இருந்ததால் போலீஸ் பாதுகாப்பு ஊரில் போடப்பட்டிருந்தது. போலீசில் விசாரணைக்குப் பின்பே ஆய்வாளர் பாடல் சேகரிக்கக் களத்தில் நுழைய முடிந்தது.
- பாடல் ஒலிப்பதிவு செய்யும்போது இடையில் நிறுத்திப் பாடல் ஆய்வாளருக்கு விளங்குகின்றதா என்பதைப் பாடகர்கள் சோதித்தனர். ஆய்வாளர் புதுவை வந்து பத்து வருடகாலம் ஆனாலும் ஆய்வாளரின் பேச்சு தனது பிறந்த இராமநாதபுர மாவட்டத்துப் பேச்சாக இருந்ததால் ஆய்வாளரைப் பற்றிப் பாடகர்கள் முழுமையாக விசாரித்தனர். ஆய்வாளரின் சரளமான பேச்சுக்குப்பின் பாடல்கள் பாட முன்வந்தனர்.
- முதலாவது நபர் பாடும்போது இரண்டாவது நபர் குழுவுடன் சேர்ந்தும், இரண்டாவது நபர் பாடும்போது முதல் நபர் குழுவுடன் சேர்ந்தும் பாடுகின்றனர்.
- பாடல்களை எழுதியபின் சில விளங்காத பகுதிகளைப் பற்றித் தெரிந்துகொள்ள இரண்டாவது முறையாகவும் களப்பணி மேற்கொள்ளப்பட்டது.
- இந்தப் பாடல் 10 பேருக்குக் குறையாத நபர்கள் துடுப்புப் போடும்போது பாடப்படுவதாகும். துடுப்புப் போடும் வேகம் அதிகரிக்கும்போது சத்த வேகமும் அதிகரிக்கும்.

## பாடல் - 2

நபர் 1 : லேலே லங்கடி லேலே
குழு : லேலே லங்கடி லேலே
நபர் 1 : அதிய நெல்லு குத்தயிலே லேலே லங்கடிலேலே
குழு : லேலே லங்கடி லேலே

நபர் 2 : குத்துதின்பா குடையிதுன்பா லேலே லங்கடி லேலே
குழு : லேலே லங்கடி லேலே
நபர் 2 : லேலே லங்கடி லேலே
குழு : லேலே லங்கடி லேலே
நபர் 2 : கொட வகுத்த நோகுதின்பா லேலே லங்கடி லேலே
குழு : லேலே லங்கடி லேலே

நபர் 1 : அள்ளுதுன்பா அழுதுதுன்பா லேலே லங்கடி லேலே
குழு : லேலே லங்கடி லேலே
நபர் 1 : லேலே லங்கடிலேலே
குழு : லேலே லங்கடி லேலே
நபர் 1 : அடிவகுத்த நோகுதின்பா லேலே லங்கடிலேலே
குழு : லேலே லங்கடி லேலே

நபர் 2 : போகுது சந்துக்குள்ளே லேலே லங்கடி லேலே
குழு : லேலே லங்கடி லேலே
நபர் 2 : லேலே லங்கடி லேலே
குழு : லேலே லங்கடி லேலே
நபர் 2 : நோக்காடெல்லாம் பொந்துக்குள்ளே லேலே லங்கடி லேலே
குழு : லேலே லங்கடி லேலே

நபர் 1 : பொந்துக்குள்ளே புகுந்த எலி லேலே லங்கடி லேலே
குழு : லேலே லங்கடி லேலே
நபர் 1 : லேலே லங்கடிலேலே
குழு : லேலே லங்கடி லேலே
நபர் 1 : பூலோகந்தாண்டி ஓடுடிமா லேலே லங்கடிலேலே
குழு : லேலே லங்கடி லேலே

நபர் 2 : சந்துக்குள்ளே புகுந்த எலி லேலே லங்கடி லேலே
குழு : லேலே லங்கடி லேலே
நபர் 2 : லேலே லங்கடி லேலே
குழு : லேலே லங்கடி லேலே
நபர் 2 : சர்ப்ப வந்தா கிளம்பிடுமா லேலே லங்கடி லேலே
குழு : லேலே லங்கடி லேலே

நபர் 1 : இல்குறடி மொள்குறடி அழுதுதுன்பா லேலே லங்கடி லேலே
குழு : லேலே லங்கடி லேலே
நபர் 1 : லேலே லங்கடிலேலம்
குழு : லேலே லங்கடி லேலம்
நபர் 1 : நிற்குமட்டம் என்குறடி லேலே லங்கடி லேலம்
குழு : லேலே லங்கடி லேலம்

நபர் 2 : கொடுக்கணுமா வாங்கணுமா லேலே லங்கடி லேலம்
குழு : லேலே லங்கடி லேலம்
நபர் 2 : லேலே லங்கடி லேலம்
குழு : லேலே லங்கடி லேலம்
நபர் 2 : நானுருந்தா போதாதடி லேலே லங்கடி லேலம்
குழு : லேலே லங்கடி லேலம்

நபர் 1 : ஒடம்புநாலே கெட்டதும்பா லேலே லங்கடி லேலம்
குழு : லேலே லங்கடி லேலம்
நபர் 1 : லேலே லங்கடிலேலம்
குழு : லேலே லங்கடி லேலம்
நபர் 1 : கிட்ட வந்தா ஒட்டிநில்லே லேலே லங்கடிலேலம்
குழு : லேலே லங்கடி லேலம்

நபர் 2 : ஒட்டஒட்ட கெழுவி ஒட்ட லேலே லங்கடி லேலம்
குழு : லேலே லங்கடி லேலம்
நபர் 2 : லேலே லங்கடி லேலம்
குழு : லேலே லங்கடி லேலம்
நபர் 2 : நூறடி கூந்தலிட்ட லேலே லங்கடி லேலம்
குழு : லேலே லங்கடி லேலம்

நபர் 1 : தூங்காத கண்ணுக்கெல்லாம் லேலே லங்கடி லேலம்
குழு : லேலே லங்கடி லேலம்
நபர் 1 : லேலே லங்கடிலேலம்
குழு : லேலே லங்கடி லேலம்
நபர் 1 : துடும்பு கொண்டு மையெழுதி லேலே லங்கடி லேலம்
குழு : லேலே லங்கடி லேலம்

நபர் 2 : உறங்காத கண்ணுக்குத்தா லேலே லங்கடி லேலம்
குழு : லேலே லங்கடி லேலம்
நபர் 2 : லேலே லங்கடி லேலம்
குழு : லேலே லங்கடி லேலம்
நபர் 2 : ஓலைகொண்டு மையெழுதி லேலே லங்கடி லேலம்
குழு : லேலே லங்கடி லேலம்

## தகவலாளிகள் விபரம்

## முன்கதையின் தகவலாளி விபரம்

## பாடல் - 3

நபர் 1 : மைந்தனுந்தா ஏலேல மைலா பாடிப்பாட
குழு : ஏலேல மைலா
நபர் 1 : பாடிப்பாட
குழு : ஏலேல மைலா
நபர் 1 : நானுந்தானே ஏலேல மைலா ஆண்டவரே
குழு : ஏலேல மைலா

நபர் 2 : நானெழுந்த ஏலேல மைலா பாடிப்பாட
குழு : ஏலேல மைலா
நபர் 2 : பாடிப்பாட
குழு : ஏலேல மைலா

நபர் 1 : பெத்தவனே ஏலேல மைலா வீமர்தானே
குழு : ஏலேல மைலா
நபர் 1 : பெத்தமனம் ஏலேல மைலா பித்தெறிய
குழு : ஏலேல மைலா
நபர் 1 : பித்தறிய
குழு : ஏலேல மைலா
நபர் 2 : பிள்ளேமனம் ஏலேல மைலா கல்லெறிய
குழு : ஏலேல மைலா

நபர் 2 : கல்லமனம் ஏலேல மைலா பாடிப்பாட
குழு : ஏலேல மைலா
நபர் 2 : உன் மனது
குழு : ஏலேல மைலா
நபர் 2 : பழையதானே ஏலேல மைலா வில்லழகு
குழு : ஏலேல மைலா

நபர் 2 : இருமனது ஏலேல மைலா பாடிப்பாட
குழு : ஏலேல மைலா
நபர் 1 : உன் மனது

குழு : ஏலேல மைலா
நபர் 1 : இடையழகும் ஏலேல மைலா எள்ளளவும்
குழு : ஏலேல மைலா

நபர் 2 : எல்லக்குள்ள ஏலேல மைலா இடையழகு
குழு : ஏலேல மைலா
நபர் 2 : இடையழகு
குழு : ஏலேல மைலா
நபர் 2 : எடைபோட்டியே ஏலேல மைலா பூவழகி
குழு : ஏலேல மைலா

நபர் 1 : உலகமெல்லா ஏலேல மைலா தெரியுதடி
குழு : ஏலேல மைலா
நபர் 1 : தெரியுதடி
குழு : ஏலேல மைலா
நபர் 1 : முடிச்ச ஏலேல மைலா அலையுதடி
குழு : ஏலேல மைலா

நபர் 2 : அலைமோதிதா ஏலேல மைலா பாடிப்பாட
குழு : ஏலேல மைலா
நபர் 2 : தருமரடி
குழு : ஏலேல மைலா
நபர் 2 : தருமருக்கு ஏலேல மைலா வில்லழகு
குழு : ஏலேல மைலா

நபர் 1 : தண்ணி வந்தா ஏலேல மைலா ரொம்பாதடி
குழு : ஏலேல மைலா
நபர் 1 : ரொம்பாதடி
குழு : ஏலேல மைலா
நபர் 1 : மலையனூரு
குழு : ஏலேல மைலா

நபர் 2 : மழபெஞ்சா ஏலேல மைலா ரொம்பாதடி
குழு : ஏலேல மைலா

நபர் 2 : ரொம்பாதடி
குழு : ஏலேல மைலா
நபர் 2 : மலையனூரு ஏலேல மைலா ஏரியிலே
குழு : ஏலேல மைலா

நபர் 1 : ஏரிமட்டம் ஏலேல மைலா கொறஞ்சலாகி
குழு : ஏலேல மைலா
நபர் 1 : கொறஞ்சலாகி
குழு : ஏலேல மைலா

நபர் 1 : ஏழேபஞ்ச ஏலேல மைலா தீராதடி
குழு : ஏலேல மைலா
நபர் 1 : உத்தபொண்ணே ஏலேல மைலா கூடவாடி
குழு : ஏலேல மைலா
நபர் 1 : வாடியின்னா ஏலேல மைலா போடியின்னா
குழு : ஏலேல மைலா

நபர் 2 : போடியின்னா
குழு : ஏலேல மைலா
நபர் 2 : வல்லறிவன் ஏலேல மைலா ஓடினானே
குழு : ஏலேல மைலா
நபர் 2 : வந்தநல்ல ஏலேல மைலா சொடலையிலே
குழு : ஏலேல மைலா

நபர் 1 : சொடையிலே
குழு : ஏலேல மைலா
நபர் 1 : வந்ததினால் ஏலேல் மைலா பள்ளி கொண்டான
குழு : ஏலேல மைலா

நபர் 2 : ஊரே நல்ல ஏலேல மைலா சொடலையிலே
குழு : ஏலேல மைலா
நபர் 2 : சொடலையிலே
குழு : ஏலேல மைலா

நபர் 2 : ஒக்காந்திதா ஏலேல மைலா பள்ளி கொண்டான்
குழு : ஏலேல மைலா

நபர் 1 : பள்ளிகொண்டான ஏலேல மைலா எம்பெருமான்
குழு : ஏலேல மைலா
நபர் 1 : ஏலேல மைலா
குழு : ஏலேல மைலா

நபர் 1 : பாதம்கொண்டான் ஏலேல மைலா தேர்மேலேறி
குழு : ஏலேல மைலா
நபர் 2 : தெப்பையிலே ஏலேல மைலா ஆழமின்னா
குழு : ஏலேல மைலா
நபர் 2 : ஆழமின்னா
குழு : ஏலேல மைலா

நபர் 2 : தென்இலங்கை ஏலேல மைலா ஆழமில்லே
குழு : ஏலேல மைலா
நபர் 1 : ஆழமில்லே ஏலேல மைலா பொலம்பா வேண்டா
குழு : ஏலேல மைலா
நபர் 1 : பொலம்ப வேண்டா
குழு : ஏலேல மைலா

நபர் 1 : ஆத்தாலாலே ஏலேல மைலா வந்தவண்டி
குழு : ஏலேல மைலா
நபர் 2 : ஏழேதானே ஏலேல மைலா பொறந்த எடம்
குழு : ஏலேல மைலா

நபர் 1 : உலகமெல்லா ஏலேல மைலா தெரியுதடி
குழு : ஏலேல மைலா
நபர் 1 : தெரியுதடி
குழு : ஏலேல மைலா
நபர் 1 : முடிச்ச ஏலேல மைலா அலையுதடி
குழு : ஏலேல மைலா

நபர் 1 : பொறந்த எடம்
குழு : ஏலேல மைலா
நபர் 1 : நேசமாக ஏலேல மைலா வந்ததாலே
குழு : ஏலேல மைலா

நபர் 2 : வந்தவினை ஏலேல மைலா துன்பந்தீரும்
குழு : ஏலேல மைலா
நபர் 2 : துன்பந்தீரும்
குழு : ஏலேல மைலா
நபர் 2 : வல்வினைதான் ஏலேல மைலா பறந்தோடுமே
குழு : ஏலேல மைலா

நபர் 1 : வல்லியய்யே ஏலேல மைலா முல்லந்தொட்டி
குழு : ஏலேல மைலா
நபர் 1 : முல்லந்தொட்டி
குழு : ஏலேல மைலா
நபர் 1 : வலைவிட்டா ஏலேல மைலா வடிவேலரும்
குழு : ஏலேல மைலா

நபர் 2 : வலையெடுத்து ஏலேல மைலா குதிக்கும்போது
குழு : ஏலேல மைலா
நபர் 2 : குதிக்கும்போது
குழு : ஏலேல மைலா
நபர் 2 : வேங்க மரம் ஏலேல மைலா ஆளனடி
குழு : ஏலேல மைலா

நபர் 1 : வேந்தனோட ஏலேல மைலா விளையாடவே
குழு : ஏலேல மைலா
நபர் 1 : விளையாடவே
குழு : ஏலேல மைலா
நபர் 1 : மெய்யழகு ஏலேல மைலா பாம்பாடவே
குழு : ஏலேல மைலா

நபர் 2 : பாம்பவிட்டு ஏலேல மைலா மேல்போட்டாடி
குழு : ஏலேல மைலா
நபர் 2 : மேல்போட்டாடி
குழு : ஏலேல மைலா
நபர் 2 : படியந்தான் ஏலேல மைலா பட்டனத்தே
குழு : ஏலேல மைலா

நபர் 1 : பட்டகடன் ஏலேல மைலா ஒருகோடிதான்
குழு : ஏலேல மைலா
நபர் 1 : ஒரு கோடிதான்
குழு : ஏலேல மைலா
நபர் 1 : பாடுபட்டேன் ஏலேல மைலா முக்கோடிதான்
குழு : ஏலேல மைலா

## தகவலாளிகள் விபரம்

## முன்கதையின் தகவலாளி விபரம்

## பாடல் – 4

நபர் 1 : முந்தி முந்தி ஐலசா விநாயகர்தான்
குழு : ஐலசா
நபர் 1 : விநாயகரே
குழு : ஐலசா
நபர் 1 : முக்கண்ணா ஐலசா தன்மகன்தான்
குழு : ஐலசா

நபர் 2 : சாந்து அரைக்கும்போது ஏலே லம்பா ஏலே
குழு : ஐலசா
நபர் 2 : ஏலே லம்பா ஏலே
குழு : ஐலசா
நபர் 2 : தன்னே நோக்கிப் பாத்தமாமா ஏலே லம்பா ஏலே
குழு : ஐலசா

நபர் 1 : வேலவர்க்கு ஐலசா முனைபொறந்த
குழு : ஐலசா
நபர் 1 : முனைபொறந்த
குழு : ஐலசா
நபர் 1 : விநாயகரே ஐலசா முன்னடவாய்
குழு : ஐலசா

நபர் 2 : முன்னடத்தி ஐலசா புள்ளயர்க்கு
குழு : ஐலசா
நபர் 2 : புள்ளயர்க்கு
குழு : ஐலசா
நபர் 2 : கண்ணடக்கம் ஐலசா பொன்னாலதான்
குழு : ஐலசா

நபர் 1 : பொன்னான ஐலசா நாக்கமக
குழு : ஐலசா
நபர் 1 : நாக்கமக

குழு : ஐலசா
நபர் 1 : பூமியிலே ஐலசா பொறந்ததாலே
குழு : ஐலசா

நபர் 2 : பூமிநல்ல ஐலசா நடுங்குதாமே
குழு : ஐலசா
நபர் 2 : நடுங்குதாமே
குழு : ஐலசா
நபர் 2 : பூலோகந்தான் ஐலசா தப்புதாமே
குழு : ஐலசா

நபர் 1 : அண்டநல்ல ஐலசா நடுங்குதாமே
குழு : ஐலசா
நபர் 1 : நடுங்குதாமே
குழு : ஐலசா
நபர் 1 : ஆகாசந்தா ஐலசா தப்புரது
குழு : ஐலசா

நபர் 2 : தப்பிநல்ல ஐலசா வரவரிசி
குழு : ஐலசா
நபர் 2 : ஏவரகரசி
குழு : ஐலசா
நபர் 2 : தாவி ரொம்ப ஐலசா கூழாக்கி
குழு : ஐலசா

நபர் 1 : கூழுநல்ல ஐலசா குடிக்கையிலே
குழு : ஐலசா
நபர் 1 : குடிக்கையிலே
குழு : ஐலசா
நபர் 1 : குண்டாஞ்சட்டி ஐலசா பெரிசாச்சே
குழு : ஐலசா

நபர் 2 : குண்டிநல்ல ஐலசா வெளுத்தாலுமே

குழு : ஐலசா

நபர் 2 : வெளுத்தாலுமே

குழு : ஐலசா

நபர் 2 : கொடமல்லிகை ஐலசா பூத்தாலுமே

குழு : ஐலசா

நபர் 1 : பூவிரண்டு ஐலசா பூத்தாலும்

குழு : ஐலசா

நபர் 1 : பூத்தாலும்

குழு : ஐலசா

நபர் 1 : நாவிலங்கை ஐலசா பூத்தாலும்

குழு : ஐலசா

நபர் 2 : நாவிலையும் ஐலசா நாமறவேன்

குழு : ஐலசா

நபர் 2 : நாமறவேன்

குழு : ஐலசா

## தகவலாளிகள் விபரம்

## முன் கதையின் தகவலாளி விபரம்

## பாடல் - 5

நபர் 1 : முந்தி முந்தி நாயகனே வேல்வேல் வேல் மருகா
குழு : வேல்வேல் வேல் முருகா
நபர் 1 : வேல்வேல் வேல் முருகா
குழு : வேல்வேல் வேல் முருகா
நபர் 1 : முக்கணவன் தன்மகனே வேல்வேல் வேல் முருகா
குழு : வேல்வேல் வேல் முருகா

நபர் 2 : கணபதியே முன்னடவாய் வேல்வேல் வேல் முருகா
குழு : வேல்வேல் வேல் முருகா
நபர் 1 : முன்னடக்கும் பிள்ளையார்க்கு வேல் வேல் வேல் முருகா
குழு : வேல்வேல் வேல் முருகா
நபர் 1 : வேல்வேல் வேல் முருகா
குழு : வேல்வேல் வேல் முருகா

நபர் 1 : தன்னடக்கம் பொன்னாலே வேல்வேல் வேல் முருகா
குழு : வேல்வேல் வேல் முருகா
நபர் 1 : தன்னடக்கம் பொன்னாலே வேல்வேல் வேல் முருகா
குழு : வேல்வேல் வேல் முருகா
நபர் 1 : வேல்வேல் வேல் முருகா
குழு : வேல்வேல் வேல் முருகா

நபர் 2 : காட்சி தந்த முத்தாலே வேல்வேல் வேல் முருகா
குழு : வேல்வேல் வேல் முருகா
நபர் 1 : முத்தான வாய்திறந்து வேல்வேல் வேல் முருகா
குழு : வேல்வேல் வேல் முருகா
நபர் 1 : வேல்வேல் வேல் முருகா
குழு : வேல்வேல் வேல் முருகா
நபர் 1 : உத்தரவு சொல்லுமய்யா வேல்வேல் வேல் முருகா
குழு : வேல்வேல் வேல் முருக

நபர் 2 : பழையபட்டி வாய்திறந்து வேல்வேல் வேல் முருகா
குழு : வேல்வேல் வேல் முருகா

*நபர் 2* : வேல்வேல் வேல் முருகா
குழு : வேல்வேல் வேல் முருகா
*நபர் 2* : படுக்குமம்மா பத்தினியே வேல்வேல் வேல் முருகா
குழு : வேல்வேல் வேல் முருகா

*நபர் 1* : பத்தினியின் தாயாரே வேல்வேல் வேல் முருகா
குழு : வேல்வேல் வேல் முருகா
*நபர் 1* : வேல்வேல் வேல் முருகா
குழு : வேல்வேல் வேல் முருகா
*நபர் 1* : பார்வதியே கண்பாரும் வேல்வேல் வேல் முருகா
குழு : வேல்வேல் வேல் முருகா

*நபர் 2* : கண்பார்த்த உன்பாதம் வேல்வேல் வேல் முருகா
குழு : வேல்வேல் வேல் முருகா
*நபர் 2* : வேல்வேல் வேல் முருகா
குழு : வேல்வேல் வேல் முருகா
*நபர் 2* : காட்சிதானே இதுவேலா வேல்வேல் வேல் முருகா
குழு : வேல்வேல் வேல் முருகா

*நபர் 1* : வேலைஇது வேளைதான வேல்வேல் வேல் முருகா
குழு : வேல்வேல் வேல் முருகா
*நபர் 1* : வேல்வேல் வேல் முருகா
குழு : வேல்வேல் வேல் முருகா
*நபர் 1* : வந்தருள வேணும்மா வேல்வேல் வேல் முருகா
குழு : வேல்வேல் வேல் முருகா

*நபர் 2* : வேலெடுத்து கச்சேகட்டி வேல்வேல் வேல் முருகா
குழு : வேல்வேல் வேல் முருகா
*நபர் 2* : வேல்வேல் வேல் முருகா
குழு : வேல்வேல் வேல் முருகா
*நபர் 2* : வீரிதமாய் மயிலேறி வேல்வேல் வேல் முருகா
குழு : வேல்வேல் வேல் முருகா

நபர் 1 : அடங்காத என்கோவே வேல்வேல் வேல் முருகா
குழு : வேல்வேல் வேல் முருகா
நபர் 1 : வேல்வேல் வேல் முருகா
குழு : வேல்வேல் வேல் முருகா
நபர் 1 : மாதாபுர தன்கோவே வேல்வேல் வேல் முருகா
குழு : வேல்வேல் வேல் முருகா

நபர் 2 : கங்காதரா கெங்காதரா வேல்வேல் வேல் முருகா
குழு : வேல்வேல் வேல் முருகா
நபர் 2 : வேல்வேல் வேல் முருகா
குழு : வேல்வேல் வேல் முருகா
நபர் 2 : சாம்போ சதாசிவனே வேல்வேல் வேல் முருகா
குழு : வேல்வேல் வேல் முருகா

நபர் 1 : வேலவர்க்கு முன்பொறந்த வேல்வேல் வேல் முருகா
குழு : வேல்வேல் வேல் முருகா
நபர் 1 : வேல்வேல் வேல் முருகா
குழு : வேல்வேல் வேல் முருகா
நபர் 1 : வெள்ளிமலே ஆண்டவரே வேல்வேல் வேல் முருகா
குழு : வேல்வேல் வேல் முருகா

நபர் 2 : ஆண்டவனே உன்உதவி வேல்வேல் வேல் முருகா
குழு : வேல்வேல் வேல் முருகா
நபர் 2 : வேல்வேல் வேல் முருகா
குழு : வேல்வேல் வேல் முருகா
நபர் 2 : யாருமில்லை பின்உதவி வேல்வேல் வேல் முருகா
குழு : வேல்வேல் வேல் முருகா

நபர் 1 : ஆரேநெனப்பேனம்மா வேல்வேல் வேல் முருகா
குழு : வேல்வேல் வேல் முருகா
நபர் 1 : வேல்வேல் வேல் முருகா
குழு : வேல்வேல் வேல் முருகா

நபர் 1 : தென்னம்புள்ள புஞ்சயிலே வேல்வேல் வேல் முருகா
குழு : வேல்வேல் வேல் முருகா

நபர் 2 : எவரே நினேப்பனேம்மா வேல்வேல் வேல் முருகா
குழு : வேல்வேல் வேல் முருகா
நபர் 2 : வேல்வேல் வேல் முருகா
குழு : வேல்வேல் வேல் முருகா
நபர் 2 : தென்னம்புள்ள தூண்டியிலே வேல்வேல் வேல் முருகா
குழு : வேல்வேல் வேல் முருகா

நபர் 1 : துணை இருந்தவளே வேல்வேல் வேல் முருகா
குழு : வேல்வேல் வேல் முருகா
நபர் 1 : வேல்வேல் வேல் முருகா
குழு : வேல்வேல் வேல் முருகா
நபர் 1 : எங்கள்குல செங்கழனி வேல்வேல் வேல் முருகா
குழு : வேல்வேல் வேல் முருகா

நபர் 2 : எங்களுக்கா உங்கள் குலம் வேல்வேல் வேல் முருகா
குழு : வேல்வேல் வேல் முருகா
நபர் 2 : வேல்வேல் வேல் முருகா
குழு : வேல்வேல் வேல் முருகா
நபர் 2 : ஏற்குமம்மா ராசகுலம் வேல்வேல் வேல் முருகா
குழு : வேல்வேல் வேல் முருகா

நபர் 1 : வீராமபட்னமந்தே வேல்வேல் வேல் முருகா
குழு : வேல்வேல் வேல் முருகா
நபர் 1 : வேல்வேல் வேல் முருகா
குழு : வேல்வேல் வேல் முருகா
நபர் 1 : வேதாந்த செங்கழனி வேல்வேல் வேல் முருகா
குழு : வேல்வேல் வேல் முருகா

நபர் 2 : வேதாந்த நாயகியே வேல்வேல் வேல் முருகா
குழு : வேல்வேல் வேல் முருகா

நபர் 2 : வேல்வேல் வேல் முருகா
குழு : வேல்வேல் வேல் முருகா
நபர் 2 : எங்கும் நிறைந்தவளே வேல்வேல் வேல் முருகா
குழு : வேல்வேல் வேல் முருகா

நபர் 1 : எங்கும் புகழ் விளங்க வேல்வேல் வேல் முருகா
குழு : வேல்வேல் வேல் முருகா
நபர் 1 : வேல்வேல் வேல் முருகா
குழு : வேல்வேல் வேல் முருகா
நபர் 1 : மங்கலகுல நாயகியரே வேல்வேல் வேல் முருகா
குழு : வேல்வேல் வேல் முருகா

## தகவலாளி விபரம்

## முன் கதையின் தகவலாளி விபரம்

## பாடல் - 6

நபர் 1 : கூடிக்கூடி ஏலேல நீ மருவ
குழு : ஏலே லே
நபர் 1 : நீ மருவ
குழு : ஏலே லே
நபர் 1 : கூட்டமுள்ள ஏலேல காவலரே
குழு : ஏலே லே

நபர் 1 : சேந்து சேந்து ஏலேலே நீ மருவ
குழு : ஏலே லே
நபர் 1 : நீ மருவ
குழு : ஏலே லே
நபர் 2 : சேனையுள்ள ஏலேலே காவலரே
குழு : ஏலே லே

நபர் 1 : காவலரே ஏலேலே பூவலரும்
குழு : ஏலே லே
நபர் 1 : அட பூவலரும்
குழு : ஏலே லே
நபர் 1 : கன்னிதானே ஏலேலே கழிய வேணும்
குழு : ஏலே லே

நபர் 2 : கழியவேணும்
குழு : ஏலேலே
நபர் 1 : காப்புநாலு ஏலேலே கட்டவேணும்
குழு : கங்கந்தான் ஏலேலே மோதிரங்க
குழு : ஏலேலே
நபர் 1 : மோதிரங்க
குழு : ஏலேலே
நபர் 1 : கையிலேதான் ஏலேலே பதிக்கவேணும்
குழு : ஏலேலே

நபர் 2 : உன்னாலே ஏலேலே பட்டகடன்
குழு : ஏலேலே
நபர் 2 : பட்டகடன்

குழு : ஏலேலே
நபர் 2 : என்னாலே ஏலேலே தீரவேணும்
குழு : ஏலேலே

நபர் 1 : தீர்த்தமுண்டு திருநாளுமுண்டு
குழு : ஏலேலே
நபர் 1 : திருநாளுமுண்டு
குழு : ஏலேலே
நபர் 1 : தீர்த்தபலன் ஏலேலே நமக்குமுண்டு
குழு : ஏலேலே

நபர் 2 : ஆசைஉண்டு ஏலேலே அன்பும் உண்டு
குழு : ஏலேலே
நபர் 2 : அன்பும் உண்டு
குழு : ஏலேலே
நபர் 2 : ஆசைபவன் ஏலேலே நமக்கும் உண்டு
குழு : ஏலேலே

நபர் 1 : ஆசைகுட்டி ஏலேலே போகுதம்மா
குழு : ஏலேலே
நபர் 1 : போகுதடி
குழு : ஏலேலே
நபர் 1 : அவளவுட்டு ஏலேலே நாம்பிரிய
குழு : ஏலேலே

நபர் 2 : என்னே விட்டு ஏலேலே நான்பிரிய
குழு : ஏலேலே
நபர் 2 : நான்பிரிய
குழு : ஏலேலே
நபர் 2 : என்னமொன்று ஏலேலேவ தோனுதம்மா
குழு : ஏலேலே

நபர் 1 : தோனுதடி ஏலேலே மாலேஒன்னு
குழு : ஏலேலே
நபர் 1 : மாலே ஒன்னு
குழு : ஏலேலே

நபர் 1 : பொலம்புதடி ஏலேலே கன்னினேம்
குழு : ஏலேலே

நபர் 2 : மனதாலே ஏலேலே மாலே வேணும்
குழு : ஏலேலே
நபர் 2 : மாலே வேணும்
குழு : ஏலேலே
நபர் 2 : இன்னமுன்னா
குழு : ஏலேலே

நபர் 1 : கன்னிதா ஏலேலே வனம்பாபொண்ணு
குழு : ஏலேலே
நபர் 1 : வனம்பாபொண்ணு
குழு : ஏலேலே
நபர் 1 : கருங்கூத்து ஏலேலே காணவேணும்
குழு : ஏலேலே

நபர் 2 : கானபுரம் ஏலேலே சாதிநாங்க
குழு : ஏலேலே
நபர் 2 : சாதிநாங்க
குழு : ஏலேலே
நபர் 2 : கைகள் பார்த்து ஏலேலே குறிகள் சொல்வோம்
குழு : ஏலேலே

நபர் 1 : கையலடி ஏலேலே சினந்த ரத்தம்
குழு : ஏலேலே
நபர் 1 : சிவந்த ரத்தம்
குழு : ஏலேலே
நபர் 1 : கட்டிரத்த ஏலேலே கொப்பளமா
குழு : ஏலேலே

நபர் 2 : பட்டபாடு ஏலேலே ரொம்ப
குழு : ஏலேலே
நபர் 2 : ரொம்ப உண்டு
குழு : ஏலேலே
நபர் 2 : கெட்டபயன்ப ஏலேலே சீமையிலே
குழு : ஏலேலே

நபர் 1 : சீமையிலே ஏலேலே கடிதாசி
குழு : ஏலேலே
நபர் 1 : கடிதாசியா
குழு : ஏலேலே
நபர் 1 : ஏலேலே வெள்ளோலை
குழு : ஏலேலே

நபர் 2 : வெள்ளோலை ஏலேலே வாசிக்கனும்
குழு : ஏலேலே
நபர் 2 : வாசிக்கனும்
குழு : ஏலேலே
நபர் 2 : வெள்ளாளந்தா ஏலேலே வாரகப்போ
குழு : ஏலேலே

நபர் 1 : வாரகப்ப ஏலேலே யாருகப்ப
குழு : ஏலேலே
நபர் 1 : யாருகப்ப
குழு : ஏலேலே
நபர் 1 : வெள்ளந்துரை ஏலேலே நாட்டிகப்ப
குழு : ஏலேலே

நபர் 2 : நாட்டிகப்ப ஏலேலே சீட்டெழுதி
குழு : ஏலேலே
நபர் 2 : சீட்டெழுதி
குழு : ஏலேலே
நபர் 2 : நடக்குமுன்ன ஏலேலே கச்சேரிக்கு
குழு : ஏலேலே

நபர் 1 : கச்சநல்லா ஏலேலே வரிஞ்சிகட்டி
குழு : ஏலேலே
நபர் 1 : வரிஞ்சிக்கட்டி
குழு : ஏலேலே
நபர் 1 : வருமத்தில்லே ஏலேலே வரிஞ்சிகட்டி
குழு : ஏலேலே

## தகவலாளிகள் விபரம்

| | |
|---|---|
| நபர் 1 | ஏ. செல்வமணி (55) |
| நபர் 2 | பி. பாவாடை (46) |
| குழு | எ. ராமசாமி (38) |
| | அ. சுப்பிரமணியன் (40) |
| ஊர் | வீராமபட்டினம் - அரியாங்குப்பம் கொம்யூன் |
| நாள் | 15-05-2008 |
| நேரம் | காலை 10.00 மணி முதல் தொடங்கிப் பாடினர் |
| கல்வி | ஏ. செல்வமணியைத் தவிர்த்த மற்றவர்களுக்குக் கல்வியறிவு குறைவு |

### குறிப்புகள்

- பாடல் கேட்டதும் உடனடியாகப் பாட முன்வரவில்லை. சற்றுத் தயக்கத்துடன் ஆய்வாளரை விசாரித்தபின் பாடச் சம்மதித்தனர்.
- கடற்கரைக் காற்றின் இரைச்சல் மிகுதியாக இருந்ததால் சேகரிப்பில் பல தடங்கல் இருந்தன.
- மிகச் சிறப்பாகப் பாடிக்கொண்டிருக்கும்போது ஊருக்குள் சண்டை காரணமாகப் பாடகர்கள் பாடிக்கொண்டிருக்கும் போது பாடலை விரைவில் முடித்துவிட்டுச் சென்றனர். ஒரு பாடலுக்குமேல் சேகரிக்க இயலவில்லை.
- மறுமுறை பாடல் சேகரிக்கச் சென்றபோது பாட மறுத்து விட்டனர்.
- வறுமையான வாழ்க்கையில் உள்ளனர்.

## பாடல் – 7

நபர் 1 : அறுவதடி ஏலேலே கம்பங்களாம்
நபர் 2 : ஏலேலே
நபர் 1 : கம்பங்களாம்
நபர் 2 : ஏலேலே
நபர் 2 : சட்டென்று ஏலேலே நாளாமால
நபர் 1 : ஏலேலே

நபர் 2 : தானாவந்து ஏலேலே சமஞ்சிதின்னா
நபர் 1 : ஏலேலே
நபர் 1 : காலாடி பந்தாடி ஏலேலே
நபர் 2 : ஏலேலே
நபர் 1 : ஏலேலே
நபர் 1 : ஏலேலே

நபர் 1 : ஏலேலே
நபர் 1 : தானாநடந்துவாடி ஏலேலே
நபர் 2 : ஏலேலே
நபர் 1 : ஊருக்கு போலாம் வாடி ஏலேலே
நபர் 2 : ஏலேலே
நபர் 1 : அடி போலாம் வாடி
நபர் 2 : ஏலேலே

நபர் 2 : ஒத்த மயன் வாரேன் நடந்துவாடி
நபர் 1 : ஏலேலே
நபர் 2 : நாட்டுக்கு போனமயன் ஏலேலே
நபர் 1 : ஏலேலே
நபர் 1 : நாயமா கூடவாடி ஏலேலே
நபர் 2 : ஏலேலே

நபர் 1 : நாணமா ஏலேலே குடமெடுத்து
நபர் 2 : ஏலேலே
நபர் 1 : அய்யய்யா குடமெடுத்து
நபர் 2 : ஏலேலே
நபர் 2 : நல்ல ஜலம் ஏலேலே மொள்ளப் போறேன்
நபர் 1 : ஏலேலே

நபர் 2 : உன்னிதமா குடமெடுத்து ஏலேலே
நபர் 1 : ஏலேலே
நபர் 2 : ஏலேலே
நபர் 1 : ஏலேலே
நபர் 1 : உப்பு ஜலம் பொள்ள போறேன் ஏலேலே
நபர் 2 : ஏலேலே

நபர் 1 : உப்புநல்ல ஏலேலே உறைக்குந் தண்ணி
நபர் 2 : ஏலேலே
நபர் 1 : அய்யய்யா ஒறைக்குந் தண்ணி
நபர் 2 : ஏலேலே
நபர் 1 : மொறையிட்ட ஏலேலே மாமனுக்கு
நபர் 1 : ஏலேலே
நபர் 1 : மாமா தொனி மாமா தொனி மாமா தொனி
நபர் 2 : ஏலேலே

நபர் 1 : மாமா தொனி
நபர் 2 : ஏலேலே
நபர் 2 : எனக்கேத்த பூமாதேவி பூமாதேவி
நபர் 1 : ஏலேலே
நபர் 1 : தோணியிலே ஏலேலே நீர்களாடி
நபர் 2 : ஏலேலே

நபர் 1 : அய்யய்யா நீர்களாடி
நபர் 2 : ஏலேலே
நபர் 2 : தொம்பையிலே ஏலேலே கண்மலர்ந்து
நபர் 1 : ஏலேலே
நபர் 1 : அறையிலே ஏலேலே ஆடும்பொங்க
நபர் 2 : ஏலேலே

நபர் 1 : அய்யய்யா ஆடும்பொங்க
நபர் 2 : ஏலேலே
நபர் 2 : அம்பளத்தான் ஏலேலே அளவெடுப்பான்
நபர் 2 : ஏலேலே
நபர் 1 : அய்யய்யா அளவெடுப்பான்
நபர் 2 : ஏலேலே

நபர் 2 : ஆசாரி ஏலேலே கண்கெழுவான்
நபர் 1 : ஏலேலே
நபர் 2 : கண்கள் சிவக்குதடா ஏலேலே
நபர் 1 : ஏலேலே
நபர் 2 : ஏலேலே
நபர் 1 : ஏலேலே

நபர் 1 : கண்மலமா ஆகுதடா ஏலேலே
நபர் 2 : ஏலேலே
நபர் 2 : வீரமுடி அதியளவாய் கண்களுக்கு
நபர் 1 : ஏலேலே
நபர் 2 : அய்யாகண்களுக்கு
நபர் 1 : ஏலேலே

நபர் 1 : நல்குறுணி ஏலேலே வீசுதடா
நபர் 2 : ஏலேலே
நபர் 1 : ஓலெமுடி கண்களெல்லாம் வீசுதடா
நபர் 2 : ஏலேலே
நபர் 1 : வீசுதடா
நபர் 2 : ஏலேலே

நபர் 1 : வீசுதடா ஏலேலே மயிலேறகு
நபர் 2 : ஏலேலே
நபர் 1 : அய்யா மயிலேறகு
நபர் 2 : ஏலேலே
நபர் 2 : கொல்லிமலை ஆண்டவனே நீ வேலவர்க்கா
நபர் 1 : ஏலேலே

நபர் 1 : வேலனே துதிக்கும்போது ஏலேலே
நபர் 2 : ஏலேலே
நபர் 1 : ஏலேலே
நபர் 2 : ஏலேலே
நபர் 2 : வேங்கை மரமாநின்றேன் ஏலேலே
நபர் 1 : ஏலேலே

நபர் 1 : வேங்கைக்கு அதியளவாய் வெள்ளிரதம்
நபர் 2 : ஏலேலே

நபர் 1 : அடவெள்ளிவிரதம்
நபர் 2 : ஏலேலே
நபர் 1 : வேலவர்க்கு அதிகளவாய் செப்புலக்க
நபர் 1 : ஏலேலே

நபர் 1 : கந்தன துதிக்கும்போது ஏலேலே
நபர் 2 : ஏலேலே
நபர் 1 : ஏலேலே
நபர் 2 : ஏலேலே
நபர் 2 : கருவ மரமா நின்றேன் ஏலேலே
நபர் 1 : ஏலேலே

நபர் 1 : நின்னவெட்ட கெங்கையிடம் ஏலேலே
நபர் 2 : ஏலேலே
நபர் 2 : நெடுவ கைலாசமா ஏலேலே
நபர் 1 : ஏலேலே

## தகவலாளிகள் விபரம்

| | |
|---|---|
| நபர் 1 | அ. ராமசாமி (55) |
| நபர் 2 | பா. முருகன் (65) |
| ஊர் | பெரியகாலாப்பட்டு |
| நாள் | 22-05-2008 |
| நேரம் | மாலை 1.00 மணி முதல் தொடங்கிப் பாடினர் |
| கல்வி | எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள். |

## குறிப்புகள்

- இது இருவர் துடுப்புப்போடும்போது பாடும் பாடலாகும்.
- பெரும்பகுதி இரவு 9.00 மணிக்குமேல்தான் கடலில் பாடத் தொடங்குவதாகக் கூறினார்.
- குழுவில்லாமல் பாடும்போது இராகம் மிகவும் நீண்ட தன்மை பெற்றிருந்தது.
- கடலில் மீன்பிடிக்கச் செல்லும்போது பெரும்பாலும் கஷ்டம் தெரியாமலிருக்க கள், சாராயம் போன்றவற்றைக் குடித்துவிட்டே செல்கின்றனர்.
- மாலை இரண்டு மணிக்குமேல் பாட முடியாது என்ற தகவலாளிகள் இதற்குமேல் பாடினால் 'நோத்தா' 'நொம்மா' என்றுதான் பாடவரும் என்றனர்.

## பாடம் - 8

நபர் 1 : பொழுதாகிப் போகுதடா ஏலேலே
நபர் 2 : ஏலேலே
நபர் 1 : ஏலேலே
நபர் 2 : ஏலேலே
நபர் 2 : பொன்ன முகம் வாடுதடா ஏலேலே

நபர் 1 : ஏலேலே
நபர் 2 : ஏலேலே
நபர் 1 : ஏலேலே
நபர் 1 : வனம் நல்ல அதிகயளவாய் சிறந்த வனம்
நபர் 2 : ஏலேலே

நபர் 1 : வயிறு நிறையவும் வேலவனே
நபர் 2 : ஏலேலே
நபர் 1 : ஓடெ சிறந்தவனம் ஏலேலே
நபர் 2 : ஏலேலே
நபர் 2 : ஓடெ முள்ளு வேலவனே ஏலேலே
நபர் 1 : ஏலேலே

நபர் 1 : வேலவனே ஆண்டவரே துதிக்கும்போது
நபர் 2 : ஏலேலே
நபர் 1 : அய்யய்யா துதிக்கும்போது
நபர் 2 : ஏலேலே
நபர் 2 : வேலம் மரம்போல் ஆனேன் ஏலேலே
நபர் 1 : ஏலேலே

நபர் 2 : கந்தன் துதிக்கும்போது
நபர் 1 : ஏலேலே
நபர் 2 : கருவ மரமா நின்றேன் ஏலேலே
நபர் 1 : நின்ன நின்ன நிழல்காட்டும்
நபர் 2 : ஏலேலே
நபர் 1 : ஏறிவிளையாட கண்ணாடியாம்
நபர் 2 : ஏலேலே

நபர் 2 : கண்ணாடி கலிங்க தேசம் ஏலேலே
நபர் 1 : ஏலேலே

நபர் 2 : ஏலேலே
நபர் 2 : போனதம்பி புலம்புரானே
நபர் 1 : ஏலேலே
நபர் 2 : அய்யய்யா புலம்புரானே
நபர் 1 : ஏலேலே
நபர் 2 : போய் விழுந்த காலகனே
நபர் 1 : ஏலேலே

நபர் 1 : காடப்புறா கக்கத்தில ஏலேலே
நபர் 2 : ஏலேலே
நபர் 1 : ஏலேலே
நபர் 2 : ஏலேலே
நபர் 1 : கந்தசாமி பக்கத்திலே ஏலேலே
நபர் 2 : ஏலேலே

நபர் 2 : மாடப்புறா ஏலேலே சம்புராமன்
நபர் 1 : ஏலேலே
நபர் 2 : மாடு மேலே குள்ள பையா
நபர் 1 : ஏலேலே
நபர் 1 : துன்னாத மீன் துன்னா ஏலேலே
நபர் 2 : ஏலேலே
நபர் 1 : துலக்காமே போய் சேந்தானாம் ஏலேலே
நபர் 2 : ஏலேலே

நபர் 2 : செவலோகமே நீராடவே
நபர் 1 : ஏலேலே
நபர் 2 : அய்யய்யா நீராடவே
நபர் 1 : ஏலேலே
நபர் 2 : செம்பதம்பி விளையாடவே
நபர் 1 : ஏலேலே

(இதிலிருந்து முதல் நபர் ஏலேலே மட்டும் போட்டார்)

நபர் 2 : . . . . . . . . . . . . . . . . . காத்தடித்தா
நபர் 1 : ஏலேலே
நபர் 2 : அய்யய்யா காத்தடித்தா
நபர் 1 : ஏலேலே
நபர் 2 : வர்ணதம்பி துணைபுரிந்தா
நபர் 1 : ஏலேலே

நபர் 2 : கொங்கயுள்ள பாலமாரே
நபர் 1 : ஏலேலே
நபர் 2 : அய்யய்யா பாலமாரே
நபர் 2 : கூப்பிட்டாலே மாறுகொள்ளும்
நபர் 1 : ஏலேலே

நபர் 2 : கூடிக்கூடி நீ மருவு
நபர் 1 : ஏலேலே
நபர் 2 : அய்யா நீ மருவு
நபர் 1 : ஏலேலே
நபர் 2 : கூட்டமுள்ள காவலரே
நபர் 1 : ஏலேலே

நபர் 2 : சேந்தி சேந்தி நீ மருவ
நபர் 1 : ஏலேலே
நபர் 2 : அய்யா நீ மருவு
நபர் 1 : ஏலேலே
நபர் 2 : சேனையுள்ள காவலரே
நபர் 1 : ஏலேலே

நபர் 2 : இந்த காவல் இருந்த பூவலரும்
நபர் 1 : ஏலேலே
நபர் 1 : அய்யய்யா பூவலரும்
நபர் 1 : ஏலேலே
நபர் 2 : காவ வந்த கன்னியரும்

*நபர் 1* : ஏலேலே
*நபர் 2* : காவ காக்க வந்திங்களாம்
*நபர் 1* : ஏலேலே

*நபர் 2* : அய்யய்யா வந்திங்களாம்
*நபர் 1* : ஏலேலே
*நபர் 2* : கச்சாவுள்ள வேடுகட்டி
*நபர் 1* : ஏலேலே
*நபர் 2* : நிக்கதானே வந்திங்களாம்
*நபர் 1* : ஏலேலே

*நபர் 2* : அய்யய்யா வந்திங்களாம்
*நபர் 1* : ஏலேலே
*நபர் 2* : நிம்மதியா நாங்க வந்தோம்
*நபர் 1* : ஏலேலே
*நபர் 2* : ஆளுயர தெப்பங்கட்டி
*நபர் 1* : ஏலேலே

*நபர் 2* : அய்யய்யா தெப்பகட்டி
*நபர் 1* : ஏலேலே
*நபர் 2* : அக்கரை போய் மீன்புடிப்போம்
*நபர் 1* : ஏலேலே
*நபர் 2* : மீன்புடிக்கிற சாதி நாங்க
*நபர் 1* : ஏலேலே
*நபர் 2* : அய்யய்யா சாதி நாங்க
*நபர் 1* : ஏலேலே
*நபர் 2* : மெத்த மேலே நோகுதுன்னா
*நபர் 1* : ஏலேலே

*நபர் 2* : மெத்த மேலே மாயிராளே
*நபர் 1* : ஏலேலே
*நபர் 2* : அய்யய்யா மாயிராளே

நபர் 1 : ஏலேலே
நபர் 2 : மேலே புள்ள செம்படத்தி
நபர் 1 : ஏலேலே

நபர் 2 : அப்பா வந்தா மாயிராளே
நபர் 1 : ஏலேலே
நபர் 2 : அய்யய்யா மாயிராளே
நபர் 1 : ஏலேலே
நபர் 2 : அழகான செம்படவன
நபர் 1 : ஏலேலே

நபர் 2 : செம்படவன் கையழகு
நபர் 1 : ஏலேலே
நபர் 2 : அய்யய்யா கையழகு
நபர் 1 : ஏலேலே
நபர் 2 : செம்படவன் தண்டு மரம்
நபர் 1 : ஏலேலே

நபர் 2 : முருகரே
நபர் 1 : ஏலேலே
நபர் 2 : தாங்கமலே போறாகளே
நபர் 1 : ஏலேலே
நபர் 2 : பொண்டுபுள்ள இலபொறக்க
நபர் 1 : ஏலேலே

நபர் 2 : அடடா இலபொறக்க
நபர் 1 : ஏலேலே
நபர் 2 : கொண்டு வாரேன் தண்டு மரம்
நபர் 1 : ஏலேலே
நபர் 2 : தங்க ரத்தான் அண்ணமாரே
நபர் 1 : ஏலேலே
நபர் 2 : அடடா அண்ணமாரே
நபர் 1 : ஏலேலே

நபர் 2 : தங்கரத தம்பிமாரே
நபர் 1 : ஏலேலே
நபர் 2 : சுக்காரத அண்ணமாரே
நபர் 1 : ஏலேலே
நபர் 2 : அண்ணனுக்கு தமயன் ஒத்தே
நபர் 1 : ஏலேலே

நபர் 2 : தங்கலர்க்கு மாமே ஒத்தே
நபர் 1 : ஏலேலே
நபர் 2 : ஏடாதம்பி நீயும் எதுல ஒத்தே
நபர் 1 : ஏலேலே
நபர் 2 : அடடா எதுல ஒத்தே
நபர் 1 : ஏலேலே
நபர் 2 : தங்கலர்க்கு மாமே ஒத்தே
நபர் 1 : ஏலேலே

நபர் 2 : அய்யய்யா மச்சா ஒத்தே
நபர் 1 : ஏலேலே
நபர் 2 : மக்களாம்போ கெழடி ஒத்தே
நபர் 1 : ஏலேலே
நபர் 2 : மக்களாமே புள்ளங்களாம்
நபர் 1 : ஏலேலே

நபர் 2 : அய்யய்யா புள்ளங்களாம்
நபர் 1 : ஏலேலே
நபர் 2 : மனசாலே முடிச்சி வச்சேன்
நபர் 1 : ஏலேலே

## தகவலாளிகள் விபரம்

| | |
|---|---|
| நபர் 1 | கோவிந்து (50) |
| நபர் 2 | கோதண்டபாணி (60) |
| இடம் | குப்பத்தின் நடுப்பகுதி |
| ஊர் | சின்னக்காலாப்பட்டு |
| நேரம் | காலை 10.00 மணிமுதல் தொடங்கிப் பாடினர் |

## குறிப்புகள்

- இவை இருவர் துடுப்புப்போடும்போது பாடும் பாடல்களாகும்.
- பாடல் நல்லமுறையில் பாடிவரும்போது பக்கத்தில் உள்ளவர்கள் தொந்தரவு காரணமாக இடையிடையே நிறுத்த வேண்டியதாயிற்று. அரை மணி நேரம் கழித்துத் தொடங்கியபோது பாடகர்கள் சில பகுதிகளை மறந்துவிட்டுப் பாடியதாகக் கூறினர்.
- பாடி முடித்ததும் நாங்கள் என்றைக்கு நல்லா இருக்கிறது எனத் தகவலாளிகள் வேதனைப்பட்டது மன நெருடலாக இருந்தது. பணக்காரர்கள் மட்டுமே சுகபோகமாக வாழ முடியும் என்ற ஒரு சமுதாய அமைப்பில் ஏழைகளின் குமுறல்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதையே இது காட்டுகிறது.
- தகவலாளிகளை இரண்டாவது முறையாகச் சந்தித்தபோது இதற்கு அடுத்த பாடலை நன்கு பாடினர்.

## பாடல் - 9

நபர் 1 : ஏலே மகளே நீ கொறத்தி
நபர் 2 : ஏலேலே
நபர் 1 : அய்யா நீ கொறத்தி
நபர் 2 : ஏலேலே
நபர் 1 : அழகாபுரி தானோரப்பா
நபர் 2 : ஏலேலே

நபர் 1 : அய்யய்யா தானோரப்பா
நபர் 2 : ஏலேலே
நபர் 1 : பவளமான பால் கொறத்தி
நபர் 2 : ஏலேலே
நபர் 1 : அய்யா பால் கொறத்தி
நபர் 2 : ஏலேலே

நபர் 1 : பால்காவடி தானோரப்பா
நபர் 2 : ஏலேலே
நபர் 1 : காணநல்ல வெங்காவடி
நபர் 2 : ஏலேலே

நபர் 1 : அய்யா வெங்காவடி
நபர் 2 : ஏலேலே
நபர் 1 : தாய ரொம்ப தாங்கதய்யா
நபர் 2 : ஏலேலே
நபர் 1 : புள்ள நல்ல ஒறங்காதின்னா
நபர் 2 : ஏலேலே

நபர் 1 : அய்யா ஒறங்காதின்னா
நபர் 2 : ஏலேலே
நபர் 1 : தாங்கா தாயே மதுரையிலே
நபர் 2 : ஏலேலே
நபர் 1 : ஏ மதுரையிலே
நபர் 2 : ஏலேலே

நபர் 1 : சரவணப் பொய்கையிலே
நபர் 2 : ஏலேலே
நபர் 1 : ஓங்கா தாயே மதுரையிலே
நபர் 2 : ஏலேலே
நபர் 1 : முருகரே மதுரையிலே
நபர் 2 : ஏலேலே

நபர் 1 : வைகை வனப்பொய்கையிலே
நபர் 2 : ஏலேலே
நபர் 1 : பொய்கையிலே முழுவி வாரேன்
நபர் 2 : ஏலேலே
நபர் 1 : முருகரே முழுவி வாரேன்
நபர் 2 : ஏலேலே

நபர் 1 : போகுதிய்யும் வாராகன்னா
நபர் 2 : ஏலேலே
நபர் 1 : வாராகன்னா செம்படவராம்
நபர் 2 : ஏலேலே
நபர் 1 : அய்யய்யா செம்படவராம்
நபர் 2 : வாராமுன்னு வார்த்த சொன்னா
நபர் 2 : ஏலேலே

நபர் 1 : நெஞ்சறிய சொன்னாளாமே
நபர் 2 : ஏலேலே
நபர் 1 : ஆண்டவரே சொன்னாளாமே
நபர் 2 : ஏலேலே
நபர் 1 : மாட மதுர வீதிகளும்
நபர் 2 : ஏலேலே

நபர் 1 : வீரபட்டிணம் பட்டிகளாம்
நபர் 2 : ஏலேலே
நபர் 1 : அய்யா பட்டிகளாம்
நபர் 2 : ஏலேலே

நபர் 1 : நெடும்பயணம் போறாகளாம்
நபர் 2 : ஏலேலே

நபர் 1 : காகிதகார பட்டிகளாம்
நபர் 2 : ஏலேலே
நபர் 1 : அய்யா பட்டிகளாம்
நபர் 2 : ஏலேலே
நபர் 1 : கடும்பயணம் போறாகளே
நபர் 2 : ஏலேலே

நபர் 1 : பறவை கட்ட பொடிமயிலே
நபர் 2 : ஏலேலே
நபர் 2 : ஆண்டவரே பொடிமயிலே
நபர் 1 : ஓடிவாரே பறமயிலே
நபர் 2 : ஏலேலே
நபர் 1 : வாரேக நல்ல கெழங்கு வெட்ட
நபர் 2 : ஏலேலே

நபர் 1 : பாடிடாமே மண்டபமா
நபர் 2 : ஏலேலே
நபர் 1 : ஏலே தம்பி கெழங்கு வெட்ட
நபர் 2 : ஏலேலே
நபர் 1 : அய்யய்யா கெழங்கு வெட்ட
நபர் 2 : ஏலேலே

நபர் 1 : நாத்திருவ மண் பறல
நபர் 2 : ஏலேலே
நபர் 1 : என்னய்யா மாயகாளி
நபர் 2 : ஏலேலே

நபர் 1 : அய்யா மாயகாளி
நபர் 2 : ஏலேலே
நபர் 1 : மரத்திலுள்ள பறவைகல்லாம்
நபர் 2 : ஏலேலே

நபர் 1 : சம்பந்தி சம்பந்தி வாராகாளி
நபர் 2 : ஏலேலே

நபர் 1 : அய்யா வாராகாளி
நபர் 2 : ஏலேலே
நபர் 1 : சம்பா நல்லா வெளையவப்பா
நபர் 2 : ஏலேலே
நபர் 1 : சம்பா நல்லா வெளயிதுன்னு
நபர் 2 : ஏலேலே

நபர் 1 : அய்யா வெளயிதுன்னு
நபர் 2 : ஏலேலே
நபர் 1 : செம்படவா நீ நடந்தே
நபர் 2 : ஏலேலே

நபர் 1 : எனக்கு வெளயுங்காலம் தெரியுங்களாம்
நபர் 2 : ஏலேலே
நபர் 1 : முருகரே தெரிய்ங்களாம்
நபர் 2 : ஏலேலே
நபர் 1 : வயலில் போட்ட தளையுங்களாம்
நபர் 2 : ஏலேலே

நபர் 1 : தலையாரிக்கி நான் போட்டும் போறேன்
நபர் 2 : ஏலேலே
நபர் 1 : ஆண்டவுரே போட்டும் போறேன்
நபர் 2 : ஏலேலே
நபர் 1 : கையகாளி கூடவாடி
நபர் 2 : ஏலேலே

நபர் 1 : கூடவாடி கொறமகளே
நபர் 2 : ஏலேலே
நபர் 1 : அய்யய்யா கொறமகளே
நபர் 2 : ஏலேலே
நபர் 1 : கோணாதே நீ வாரபொண்ணே
நபர் 2 : ஏலேலே

நபர் 1 : வாழ்வா நல்ல வரம் பொடுவா
நபர் 2 : ஏலேலே
நபர் 1 : ஆண்டவரே வரம் பொடுவா
நபர் 2 : ஏலேலே
நபர் 1 : மங்கலங்க பெத்துடுவா
நபர் 2 : ஏலேலே
நபர் 1 : என்னா தாயே வரம் பொடுவா
நபர் 2 : ஏலேலே

நபர் 1 : ஆண்டவரே வரம் பொடுவா
நபர் 2 : ஏலேலே
நபர் 1 : எடுத்தா தாயே முடி பொடுவா
நபர் 2 : ஏலேலே
நபர் 1 : முடிவெடுத்த செம்புகமே
நபர் 2 : ஏலேலே

நபர் 1 : அடடா செம்புகமே
நபர் 2 : ஏலேலே
நபர் 1 : மோனகமே நல்ல வேலமுத்தே
நபர் 2 : ஏலேலே
நபர் 1 : நாக நல்ல குறடகாரே
நபர் 2 : ஏலேலே

நபர் 1 : அய்யய்யா குறடகாரே
நபர் 2 : ஏலேலே
நபர் 1 : நண்பகலில் வட்டமிட
நபர் 2 : ஏலேலே
நபர் 1 : வட்டமாகி கீரநரி
நபர் 2 : ஏலேலே
நபர் 1 : அய்யய்யா கீரநரி
நபர் 2 : ஏலேலே

நபர் 1 : மடுகுகளெல்லாம் வேங்கையாடி
நபர் 2 : ஏலேலே
நபர் 1 : வேங்கநல்ல முருகரே வேலவரே
நபர் 2 : ஏலேலே
நபர் 1 : முருகரே வேலவரே
நபர் 2 : ஏலேலே

நபர் 1 : வெய்ய வந்த படி கொறமகளே
நபர் 2 : ஏலேலே
நபர் 1 : கையிலோரு வேங்கைகளாம்
நபர் 2 : ஏலேலே
நபர் 1 : முருகரே வேங்கைகளாம்
நபர் 2 : ஏலேலே

நபர் 1 : கர்ணம் தம்பி வேலவனே
நபர் 2 : ஏலேலே
நபர் 1 : நீ கருணையுள்ள திருமகனே
நபர் 2 : ஏலேலே
நபர் 1 : அடடா திருமகனே
நபர் 2 : ஏலேலே

நபர் 1 : கன்னி வேட்ட பாலகனே
நபர் 2 : ஏலேலே
நபர் 1 : பாலகனே வனம்போறானே
நபர் 2 : ஏலேலே
நபர் 1 : அடடா வனம்போறானே
நபர் 2 : ஏலேலே

நபர் 1 : பாங்குடனே ரெட்டஜோடி
நபர் 2 : ஏலேலே
நபர் 1 : வனம்போல ஏலேமாலே
நபர் 2 : ஏலேலே
நபர் 1 : ஆண்டவரே ஏலே மாவே
நபர் 2 : ஏலேலே

நபர் 1 : நல்வரவை காணலய்யா
நபர் 2 : ஏலேலே
நபர் 1 : காலகனே ஏலே மாலே
நபர் 2 : ஏலேலே
நபர் 1 : முருகரே ஏலே மாலே
நபர் 2 : ஏலேலே
நபர் 1 : காத்தா தாயே பறந்து வாரேன்
நபர் 2 : ஏலேலே

நபர் 1 : காத்தாயிதான் அம்மகளே
நபர் 2 : ஏலேலே
நபர் 1 : முருகா அம்மகளே
நபர் 2 : ஏலேலே
நபர் 1 : கன்னிவேட்ட எம்பாலகரே
நபர் 2 : ஏலேலே

நபர் 1 : காத்தாயிதான் அம்மகளே
நபர் 2 : ஏலேலே
நபர் 1 : முருகா அம்மகளே
நபர் 2 : ஏலேலே
நபர் 1 : கன்னிவேட்ட எம்பாலகரே
நபர் 2 : ஏலேலே

நபர் 1 : பாரம்தானே ரொம்பதானே
நபர் 2 : ஏலேலே
நபர் 1 : அடரொம்பதானே
நபர் 2 : ஏலேலே
நபர் 1 : முருகரே பாங்குடனே ரெட்டஜோடி
நபர் 2 : ஏலேலே

நபர் 1 : காலதாம்பி ஏலேமாலே
நபர் 2 : ஏலேலே
நபர் 1 : தம்புரானே ஏலேமாலே

நபர் 2 : ஏலேலே
நபர் 1 : காத்தா நல்ல பறந்து வாரேன்
நபர் 2 : ஏலேலே
நபர் 1 : காத்தடிக்குதா என்ன மாதம்
நபர் 2 : ஏலேலே

நபர் 1 : முருகரே என்ன மாதம்
நபர் 2 : ஏலேலே
நபர் 1 : கார்த்திய ஏலே பழனி மாலே
நபர் 2 : ஏலேலே
நபர் 1 : பங்குனிதான் மாதத்திலே
நபர் 2 : ஏலேலே

நபர் 1 : ஆண்டவரே மாதத்திலே
நபர் 2 : ஏலேலே
நபர் 1 : பாதநல்ல கடியதம்மா
நபர் 2 : ஏலேலே
நபர் 1 : சித்திரைய்யா மாதத்திலே
நபர் 2 : ஏலேலே

நபர் 1 : அடடா மாதத்திலே
நபர் 2 : ஏலேலே
நபர் 1 : செல்லதம்பி கலியாணமாம்
நபர் 2 : ஏலேலே
நபர் 1 : கலியாணந்தா வாசலிலே
நபர் 2 : ஏலேலே

நபர் 1 : ஆண்டவரே வாசலிலே
நபர் 2 : ஏலேலே
நபர் 1 : கையகட்டி நிற்கலானேன்
நபர் 2 : ஏலேலே
நபர் 1 : நிக்கதம்பி சிவலோகந்தா
நபர் 2 : ஏலேலே

நபர் 1 : முருகரே வேலவரே
நபர் 2 : ஏலேலே
நபர் 1 : நித்தரக்குத்தான் பாலகரே
நபர் 2 : ஏலேலே
நபர் 1 : கரு;த்தம்பிசுருள காளே
நபர் 2 : ஏலேலே

நபர் 1 : முருகரே சுருளகாளே
நபர் 2 : ஏலேலே
நபர் 1 : காளிதானே வாசலிலே
நபர் 2 : ஏலேலே
நபர் 1 : கணக்காக பாட்டு முடிக்கையிலே
நபர் 2 : ஏலேலே

## தகவலாளிகள் விபரம்

நபர் 1 கோதண்டபாணி (60)
நபர் 2 கோவிந்து (50)
நாள் 26-05-2008

மற்றவை முன்கதையின் தகவலாளி விபரம்

## பாடல் – 10

நபர் 1 : கானக்கொறத்தி வந்தா லே லங்கடி லேலே
நபர் 2 : லே லங்கடி லேலே
நபர் 1 : கைபார்த்து சொல்லிவாரா லே லங்கடி லேலே
நபர் 2 : சீனக்கொறத்தி வந்தா லே லங்கடி லேலே
நபர் 1 : அய்யா லே லங்கடி லேலே
நபர் 2 : கிலம்பு கையாள தங்கம் வந்தா லே லங்கடி லேலே

நபர் 1 : தங்க மலே கையினாலே லே லங்கடி லேலே
நபர் 2 : லே லங்கடி லேலே
நபர் 1 : தண்ணி தந்தா ஒண்ணா வாரா லே லங்கடி லேலே
நபர் 2 : ...... கையாளா லே லங்கடி லேலே
நபர் 1 : அய்யா லே லங்கடி லேலே
நபர் 2 : முத்தம் நல்லா ஒன்னா வாரா லே லங்கடி லேலே

நபர் 1 : முத்தம் குடுப்பா வாரா லே லங்கடி லேலே
நபர் 2 : லே லங்கடி லேலே
நபர் 1 : மொத குடுப்பா எண்ணிருந்தா லே லங்கடி லேலே
நபர் 2 : சத்தம் குடுப்பாளடி லே லங்கடி லேலே
நபர் 1 : அய்யா லே லங்கடி லேலே
நபர் 2 : தலெ குடுப்பா எண்ணிருந்தா லே லங்கடி லேலே
நபர் 2 : லே லங்கடி லேலே
நபர் 1 : பாவிலைய துய்யதானே லே லங்கடி லேலே
நபர் 2 : லே லங்கடி லேலே

நபர் 1 : பரமருக்கு எத்தபையா லே லங்கடி லேலே
நபர் 2 : லே லங்கடி லேலே
நபர் 1 : மாவிலைய துய்யக்காணம் லே லங்கடி லேலே
நபர் 2 : அய்யா லே லங்கடி லேலே
நபர் 1 : முத்தம் என்மேலடி லே லங்கடி லேலே

நபர் 1 : முத்தத்து முருங்கமரம் லே லங்கடி லேலே
நபர் 2 : லே லங்கடி லேலே
நபர் 1 : முறிந்திட கண்டேனடா லே லங்கடி லேலே

நபர் 2 : கன்றும் செடியுறங்க லே லங்கடி லேலே
நபர் 1 : அய்யா லே லங்கடி லேலே

நபர் 2 : காத்தாட வாரன்னா லே லங்கடி லேலே
நபர் 1 : காத்தாடி வளையமுன்னா லே லங்கடி லேலே
நபர் 2 : லே லங்கடி லேலே
நபர் 1 : கரடி புலியா வாரா லே லங்கடி லேலே
நபர் 2 : காட்டானே காவலடி லே லங்கடி லேலே
நபர் 1 : அய்யா லே லங்கடி லேலே

நபர் 2 : வேங்கப்புலிகளடா லே லங்கடி லேலே
நபர் 1 : வேங்க மர அழகா லே லங்கடி லேலே
நபர் 2 : லே லங்கடி லேலே
நபர் 1 : வெளியி வந்து பாம்பாடவே லே லங்கடி லேலே
நபர் 2 : கையிலொரு வெங்கயடி லே லங்கடி லேலே
நபர் 1 : அய்யா லே லங்கடி லேலே

நபர் 1 : கருடன் பரண்மேலறி லே லங்கடி லேலே
நபர் 2 : லே லங்கடி லேலே
நபர் 1 : கருடன் விளையாடவே லே லங்கடி லேலே
நபர் 2 : லே லங்கடி லேலே
நபர் 1 : கச்சி கடையானதின்னா லே லங்கடி லேலே
நபர் 2 : வீமன்பரமனடி லே லங்கடி லேலே
நபர் 1 : அய்யா லே லங்கடி லேலே
நபர் 2 : வீதியிலே நின்னதுன்னா லே லங்கடி லேலே

நபர் 1 : வீமன் எழுந்துரடா லே லங்கடி லேலே
நபர் 2 : லே லங்கடி லேலே
நபர் 1 : வில்லு சண்டே செய்யபோராரே லே லங்கடி லேலே
நபர் 2 : கையினாலே விளையாடவே லே லங்கடி லேலே
நபர் 1 : அய்யா லே லங்கடி லேலே
நபர் 2 : கத்தி சண்ட செய்துடலாம் லே லங்கடி லேலே

நபர் 1 : கத்தி சொழண்டுவாரேன் லே லங்கடி லேலே
நபர் 2 : லே லங்கடி லேலே
நபர் 1 : கத்திமொனே ஆடிவாரேன் லே லங்கடி லேலே
நபர் 2 : ஈட்டி சொமந்துவாரேன் லே லங்கடி லேலே
நபர் 1 : அய்யா லே லங்கடி லேலே
நபர் 2 : ஈட்டிமொனே ஆடிவாரேன் லே லங்கடி லேலே

நபர் 1 : ஆடி மாசந்தானே லே லங்கடி லேலே
நபர் 2 : லே லங்கடி லேலே
நபர் 1 : அம்மானு கைசொந்தந்தானே லே லங்கடி லேலே
நபர் 2 : மனம் சோர்ந்த மங்கையாரே லே லங்கடி லேலே
நபர் 1 : அய்யா லே லங்கடி லேலே

நபர் 2 : மாலையிட எந்தக்காலம் லே லங்கடி லேலே
நபர் 1 : மாமன் கருணன் அவெனே லே லங்கடி லேலே
நபர் 2 : லே லங்கடி லேலே

நபர் 1 : வர்சபெத்த மங்கயாரே லே லங்கடி லேலே
நபர் 2 : சுத்த தருமராசன் லே லங்கடி லேலே
நபர் 1 : லே லங்கடி லேலே
நபர் 2 : சீர்பெத்த பொன்னுமுல்லே லே லங்கடி லேலே
நபர் 1 : சீராட்டும் பாராடடும்மாலே லங்கடி லேலே
நபர் 2 : லே லங்கடி லேலே

நபர் 1 : சிரிப்பு வெளயாட்டும்மா லே லங்கடி லேலே
நபர் 2 : . . . . லே லங்கடி லேலே
நபர் 1 : அய்யா லே லங்கடி லேலே.
நபர் 2 : . . . .லே லங்கடி லேலே
நபர் 1 : அய்யா யானையும பொன்னுனாலே லே லங்கடி லேலே
நபர் 2 : லே லங்கடி லேலே

நபர் 1 : வலங்காபுரி முத்துனாலே லே லங்கடி லேலே
நபர் 2 : முத்தத்து முருங்கமரம் லே லங்கடி லேலே
நபர் 1 : அய்யா லே லங்கடி லேலே

நபர் 2 : முறிந்திட கண்டேனடி லே லங்கடி லேலே
நபர் 1 : அத்தயூட்டு வாழமரம் லே லங்கடி லேலே
நபர் 2 : அய்யா லே லங்கடி லேலே

நபர் 1 : அறுந்த விழ கண்டேனடா லே லங்கடி லேலே
நபர் 2 : கண்டஞ்செடியோரம் லே லங்கடி லேலே
நபர் 1 : அய்யா லே லங்கடி லேலே
நபர் 2 : காட்டோரம் போனேனுன்னு லே லங்கடி லேலே
நபர் 1 : அய்யா காட்டசெடியோரன்னா லே லங்கடி லேலே
நபர் 2 : லே லங்கடி லேலே

நபர் 1 : பால்பெருக்க உண்ணேன்னா லே லங்கடி லேலே
நபர் 2 : உண்ணுய் கலமெடுத்து லே லங்கடி லேலே
நபர் 1 : அய்யா லே லங்கடி லேலே
நபர் 2 : ஊட்டிவர தாயானாளே லே லங்கடி லேலே
நபர் 1 : பூவப் பரிமணலே லே லங்கடி லேலே
நபர் 2 : லே லங்கடி லேலே

நபர் 2 : ஆணுபடி மணலே லே லங்கடி லேலே
நபர் 1 : அய்யா லே லங்கடி லேலே
நபர் 2 : அறுந்துவிழக் கண்டேனடி லே லங்கடி லேலே
நபர் 1 : கன்றுஞ்செடிஓறங்க லே லங்கடி லேலே
நபர் 2 : லே லங்கடி லேலே
நபர் 1 : காட்டோரம் போறேன்னு லே லங்கடி லேலே
நபர் 2 : நின்ன செடியோரம் லே லங்கடி லேலே
நபர் 1 : அய்யா லே லங்கடி லேலே
நபர் 2 : பூ பெறக்க போறனடிலே லங்கடி லேலே

நபர் 1 : அடி பூவப்பரிமணலே லே லங்கடி லேலே
நபர் 2 : லே லங்கடி லேலே
நபர் 1 : நா போய்வரட்டா எங்கடமே லே லங்கடி லேலே
நபர் 2 : ஆசப்படிமணலே லே லங்கடி லேலே
நபர் 1 : அய்யா லே லங்கடி லேலே

நபர் 2 : நேத்து அரச்ச சந்தனமே லே லங்கடி லேலே
நபர் 1 : சந்தன வாடையம்மா லே லங்கடி லேலே
நபர் 2 : லே லங்கடி லேலே

நபர் 1 : தனிவாடே வீசுராளே லே லங்கடி லேலே
நபர் 2 : குங்கும வாடையடா லே லங்கடி லேலே
நபர் 1 : அய்யா லே லங்கடி லேலே
நபர் 2 : குளிர்வாடே வீசுதடா லே லங்கடி லேலே

நபர் 1 : வீசுன வாடைரெண்டும் லே லங்கடி லேலே
நபர் 2 : லே லங்கடி லேலே
நபர் 1 : போய்வரட்டா எங்கடமே லே லங்கடி லேலே
நபர் 2 : பூசுன்ன மஞ்சலடி லே லங்கடி லேலே
நபர் 1 : அய்யா லே லங்கடி லேலே
நபர் 2 : பொன்னாக வளர்த்தேனடி லே லங்கடி லேலே

நபர் 1 : அடிபொன்னுபோல மின்னுந்தாலி லே லங்கடி லேலே
நபர் 1 : லே லங்கடி லேலே
நபர் 2 : அவ பூப்பறிக்க போறேனின்னா லே லங்கடி லேலே
நபர் 1 : அய்யா லே லங்கடி லேலே
நபர் 2 : தரும தண்ணிதாலே லே லங்கடி லேலே
நபர் 1 : அடி கட்டுண்டு காவலுண்டு லே லங்கடி லேலே

நபர் 2 : லே லங்கடி லேலே
நபர் 1 : கால்புடிக்க பெண்களுண்டு லே லங்கடி லேலே
நபர் 2 : படுக்க சுருளுமுண்டு லே லங்கடி லேலே
நபர் 1 : அய்யா லே லங்கடி லேலே
நபர் 2 : பார்த்திருக்க வெட்கமுண்டு லே லங்கடி லேலே
நபர் 1 : உண்ணும் கலம் எடுத்து லே லங்கடி லேலே
நபர் 2 : லே லங்கடி லேலே
நபர் 1 : ஊட்டினவள் தாயானாளே லே லங்கடி லேலே
நபர் 1 : லே லங்கடி லேலே

## தகவலாளி விபரம்

| | |
|---|---|
| நபர் 1 | சின்னத்தம்பி (35) |
| நபர் 2 | பாவாடைசாமி (65) |
| ஊர் | நல்லவாடு |
| இடம் | கடற்கரை |
| நேரம் | காலை 11.00 மணி தொடங்கிப்பாடினர் |

### குறிப்புகள்

- இந்தப்பாடல் குழுவாகவும், இருவராகவும் கடலில் சென்று மீன்பிடிக்கும்போது பாடப்படுவதாகும். இந்தப் பாடலை இருவர் மட்டுமே பாடினர்.
- இயல்பான மனநிலையில் பாடினர்.
- ஒரு பாடலுக்குமேல் பாட மறுத்துவிட்டனர்.
- ஆய்வாளரை விசாரித்துத் தெரிந்துகொண்ட பின்பே பாடினர்.

### பி.ஏ. 2 கலைச்சொல் அகரநிரல்

| | | |
|---|---|---|
| அகரநிரல் | - | Index |
| அடிக்குறிப்பு | - | Foot-Note |
| ஆய்வு அணுகுமுறை | - | Research Approach |
| ஆய்வு முறை | - | Research Method |
| ஆய்வு மூலங்கள் | - | Research Sources |
| ஆய்வுக்களம் | - | Research Field |
| ஆய்வமைப்பு | - | Thesis System |
| இயல் | - | Chapter |
| ஒலிப்பதிவுக்கருவி | - | Tape Record |
| கலைச்சொல் | - | Term |
| களப்பணி | - | Field Work |
| சமூகவியல் | - | Sociology |
| தலைப்பு | - | Topic |
| திரண்ட கருத்து | - | Salvant Points |
| துணைமையாதாரங்கள் | - | Secondary Sources |
| துணை நூற்பட்டியல் | - | Bibliography |
| தொகுதி | - | Volume |
| நன்றியறிவிப்பு | - | Acknowledgement |
| பண்பாடு | - | Culture |
| பின்னிணைப்பு | - | Appendix |
| பேட்டி | - | Interview |
| மானுடவியல் | - | Anthropology |
| முகப்புரை | - | Introduction |
| முடிப்புரை | - | Conclusion |
| முதன்மை ஆதாரங்கள் | - | Primary Sources |
| விளக்கமுறை | - | Descriptive Method |

## துணை நூற்பட்டியல்

### தமிழ் நூல்கள்


1. அழகப்பன், ஆறு., நாட்டுப்புறப்பாடல்கள் திறனாய்வு, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1973.
2. அறவாணன், க.ப., மரவழிபாடு, திராவிட ஆப்பிரிக்க ஒப்பீடு, பாரி நிலையம், சென்னை, 1984.
3. அன்னகாமு, செ., ஏட்டில் எழுதாக்கவிதைகள், சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1979.
4. இராமநாதன், ஆறு., நாட்டுப்புறப்பாடல்கள் காட்டும் தமிழர் வாழ்வியல், மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம், 1982.
5. இராமநாதன், ஆறு., நாட்டுப்புறப்பாடல் வகைகள், புலமை வெளியீடு, சென்னை, 1982.
6. ஏங்கெல்ஸ், குடும்பம் தனிச்சொத்து அரசு ஆகியவற்றின் தோற்றம், முன்னேற்றப்பதிப்பகம், மாஸ்கோ.
7. கிருட்டிணசாமி, க., நாட்டுப்புற இலக்கியம் ஓர் ஆய்வு, சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை, 1981.
8. சக்திவேல், சு., நாட்டுப்புற இயல் ஆய்வு, மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம், திருத்திய பதிப்பு, 1982.
9. சண்முகசுந்தரம், சு., தமிழில் நாட்டுப்புறப்பாடல்கள், மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம், 1985.
10. தமிழண்ணல், தாலாட்டு, பாவை நிலையம், காரைக்குடி, 1963.
11. தமிழவன், நாட்டுப்புற நம்பிக்கைகள், சர்வோதைய இலக்கியப்பண்ணை, மதுரை, 1976.
12. நடராசன், தி., நாட்டுப்புறச்சிறுவர் பாடல்கள், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை, 1979.
13. பக்தவத்சலபாரதி, சீ., பண்பாட்டு மானிடவியல், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1991.
14. மாணிக்கம், வ.சுப., தமிழ்க்காதல், பாரிநிலையம், சென்னை, மூன்றாம் பதிப்பு, 1980.
15. மாணிக்கம், வ.சுப., அகநானூறு, நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை, இரண்டாம் பதிப்பு, 1981.
16. மாணிக்கம், வ.சுப., தொல்காப்பியம், பொருளதிகாரம்-பேராசிரியர் உரை, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலை நகர், 1986.

17. மாணிக்கம், வ.சுப., தொல்காப்பியம் பொருளதிகாரம், நச்சினார்க்கினியர் உரை, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலை நகர், 1986.

**களஞ்சியங்கள்**

வாழ்வியற்களஞ்சியம் தொகுதிகள்- 4, 6, 7, 8 தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1987-88.

**ஆய்வுக்கோவை**

அகத்தியலிங்கம், ச., நாட்டுப்புறவியல் ஆய்வுக்கோவை, தொகுதி-2, இந்தியத் தமிழ் நாட்டுப்புறவியல் கழகம், அண்ணாமலை நகர் 1987.

இராமநாதன், ஆறு., இந்தியத் தமிழ் நாட்டுப்புறவியல் கழகம், அண்ணாமலை நகர், 1987.

**அச்சில் வராத ஆய்வேடு**

திருநாகலிங்கம், ஆ., புதுச்சேரி வட்டார நாட்டுப்புறக்கதைகள் காட்டும் சமுதாயம், புதுவைப்பல்கலைக் கழகம், புதுச்சேரி, 1992.

**ஆங்கில நூல்கள்**

1. Bowra, C.M., Heroic Poetry, Macmillan, London, 1966.
2. Edgar Thurston, Castes and Tribes of Southern India, Cosmo Publications, New Delhi, Second Edition, 1987.
3. George, K.M., Place Names of Southern India, Trivandrum, 1986.
4. Leach, Maria (Ed.), Standard Dictionary of Folklore, Mythology and Legend, Funkand Wagnalls, New York, 1949.

## உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
### சென்னை - 600 113

# அண்மை வெளியீடுகள்

| | ரூ.பை. |
|---|---|
| உலகத் தமிழிலக்கிய வரலாறு கி.பி. 901 - கி.பி. 1300 | 100.00 |
| உலகத் தமிழிலக்கிய வரலாறு கி.பி. 1851 - 2000 | 180.00 |
| தமிழக வானவியல் சிந்தனைகள் | 35.00 |
| தமிழியல் ஆய்வுச் சிந்தனைகள்-நாட்டுப்புறவியல்,கலை,பண்பாடு | 90.00 |
| தொல்காப்பியம்-எழுத்ததிகாரம் மூலமும் நச்சினார்க்கினியர் உரையும் | 200.00 |
| வாழிய செந்தமிழ் | 140.00 |
| பேராசிரியர் அ.மு.பரமசிவானந்தம் | 40.00 |
| தமிழக எல்லைப் போராட்டங்கள் | 60.00 |
| திருப்புகழ் ஒளிநெறி பகுதி - I | 90.00 |
| திருப்புகழ் ஒளிநெறி பகுதி - II | 90.00 |
| திருப்புகழ் ஒளிநெறி பகுதி - III | 80.00 |
| தொல்காப்பியம்-சொல்லதிகார மூலமும் சேனாவரையருரையும் | 200.00 |
| தொல்காப்பியம்-பொருளதிகார மூலமும் நச்சினார்க்கினியர் உரையும் | 325.00 |
| தொல்காப்பியம் - பொருளதிகார மூலமும் பேராசிரியர் உரையும் | 300.00 |
| Economic Heritage of the Tamils | 115.00 |
| மலேசியத் தமிழரும் தமிழும் | 100.00 |
| மொழி, சமய, சமுதாயத் தளங்களில் பாவாணர் பங்களிப்பு | 50.00 |
| தமிழ்ப் புனைகதைகளில் உளவியல் | 35.00 |
| தமிழியல் ஆய்வுச் சிந்தனைகள் - தொல்லியல், வரலாறு, சமூகவியல் | 100.00 |
| கவிதையியல் | 50.00 |
| பண்பாட்டு நோக்கில் திருமுறைகள் | 30.00 |
| கதைப் பாடல்களில் கட்டுப்பாட்டு மீறல்கள் | 95.00 |
| Bibliography on Translations | 175.00 |
| சங்க இலக்கிய ஆய்வு தெபொமீயும் மேலை அறிஞரும் | 60.00 |
| திராவிட மொழி இலக்கியங்கள் | 200.00 |
| வா.கீ.ச. கலாநிதி கி.வா.ஜகந்நாதன் | 60.00 |
| நாசுதிராதிக்-ஞாலமுதன்மொழிஆய்வுகளுக்குப்பாவாணர் தரும் ஒளி | 35.00 |
| தமிழ்ச்சொற் பிறப்பாராய்ச்சி | 45.00 |
| மொழி பெயர்ப்பியல் | 45.00 |
| தமிழில் தத்துவ நூல்கள் | 40.00 |
| சி.வை. தாமோதரம்பிள்ளை | 40.00 |
| சொல்லிலக்கணக் கோட்பாடு தொல்காப்பியம் - முதல் பகுதி | 70.00 |
| இசுலாமியச் சிற்றிலக்கியங்கள் | 40.00 |
| பாவாணர் கடவுள் நம்பிக்கையும் சமயச் சால்பும் | 30.00 |
| மகளிர் முன்னேற்றத்தில் "அவள் விகடன்" இதழின் பங்களிப்பு | 35.00 |
| திருக்குறள் உரைச் சிந்தனைகள் | 50.00 |
| தமிழர் நாட்டு விளையாட்டுகள் | 95.00 |
| தமிழர் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும் | 120.00 |

**618 மீனவர் சமுதாய நாட்டுப்புறப் பாடல்கள் (ஆய்வும் பதிப்பும்) 35.00**